மஞ்சரி

கர - தை

அழகு நிரம்பிய காஷ்மீர்

அபேட்சகரைச் சந்தியுங்கள்

பஸிபிக் பிசாசு

புஷ்ப வைத்தியம்

கிறிஸ்துமஸ் பூனை (சிறு கதை)

காலைப் பிறை
(புத்தகச் சுருக்கம்)

-6-
அணா

ஆண்டு 5] [இதழ் 2

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

பீஜகணிதம் என்று குறிக்கும் 'அல்ஜீப்ரா' என்ற கணிதத்தால் ஓர் உபயோகமும் இல்லை என்றும் அதைக் கீழ் வகுப்புகளிலிருந்து ஒழித்துவிடலாம் என்றும் யாரோ ஒரு மந்திரி சொன்னாராம். உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞான மேதையான ஸர் ஸி. வி. ராமன் இதைப் பெங்களூரில் கூடிய இந்திய கணிதச் சங்கத்தின் 17-ஆவது மகாநாட்டில் வருத்தத்துடன் குறிப்பிட்டார். உயர்தர கணித நுட்பங்களுக்கெல்லாம் மூலாதாரம் பீஜ கணிதம். உயர்தர கணிதம் அறியாதவர், வான சாஸ்திரத்திலும் சரி, வேறு எந்த விஞ்ஞானத் துறையிலும் சரி, தேர்ச்சி பெற முடியாது. 'சூன்யம்' என்ற பூஜ்யத்தையும் தசாம்ச எண் முறையையும் உலகுக்கு அளித்தது புராதன இந்தியா. என்றும் பல கணித மேதைகள் வாழ்ந்தது இந்தியா. இங்கே-சுதந்தர இந்தியாவிலே - கணிதத்தை ஒரு மந்திரி ஒழித்துக்கட்ட முயல்கிறார் என்றால், நாட்டிலே அறியாமைக்கு அஸ்திவாரம் போடுகிறார் என்றுதான் அர்த்தம். இந்த மனோபாவம் முற்றும் வெறுக்கத்தக்கது.

தமிழ் நாட்டிலிருந்து நியாயமான முறையில் ஆந்திரத்தைப் பிரித்துத் தனி மாகாணமாகச் செய்வதற்கு யாரும் குறுக்கே நிற்கவில்லை. சென்னையில் ஆந்திரர் உரிமை கொண்டாடுவது போகாத ஊருக்கு வழி தேடுவதாகும். அதுதான் வீண் தாமதத்துக்குக் காரணம். சில மாதங்களுக்கு முன் உடனே ஆந்திர மாகாணம் வேண்டும் என்று உபவாசம் கிடந்தார் சுவாமி சீதாராம். பிறகு, விஷயத்தை விநோபா பாவேயிடம் விட்டுவிட்டதாகச் சொல்லி உபவாசத்தை நிறுத்தினார். அதோடு அமைந்திருப்பதுதான் முறை. இப்போது மெல்ல மறுபடியும் 'எடுக்கவா நாகசுரப் பையை?' என்று சொல்லிக்கொண்டு கிளம்புகிறார். 'செய்; அல்லது செத்துத் தொலை' என்ற சத்தியாக்கிரக உபதேசத்தை ஆந்திரர்களுக்குச் செய்கிறார். இப்படி நிமிஷத்துக்கொரு விதம் விசுவாமித்திர சொரூபம் எடுத்தாரானால், சுவாமிஜியிடம் மதிப்பு வைத்தவர்களுக்கெல்லாம் அது குறைந்துவிடும். ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்காதா? இந்தத் தேர்தல்

சந்ததி தீரும் வரையில் பொறுத்திருந்தால் என்ன?

* * *

சென்னை சங்கீத அகாடமி மகாநாட்டைத் திறந்து வைத்து ஸ்ரீ டி. ஆர். வேங்கடராம சாஸ்திரியார் சொன்ன ஒரு விஷயத்தைச் சங்கீத வித்வான்களெல்லாம் நன்ருய் மனத்தில் பதித்துக்கொள்வது அவசியம். சாஸ்திரம், கலை இரண்டு அம்சங்களைக்கொண்டது சங்கீதம். சங்கீத சாஸ்திர நுட்பங்கள், கற்க வேண்டியவை. சங்கீதக் கலை, கேட்போருக்கு இன்பம் பயக்க வேண்டியது. எந்தக் கலையையும் போலவே சங்கீதத்தின் முழு நோக்கமும் இன்பம் பயப்பதுதான். அதை மறந்து சாஸ்திர ஞானக் 'கைவரிசை' காட்டுவதே சங்கீதம் என்பது போன்ற மனேபாவம் பல வித்வான்களிடம் காண்கிறது. சங்கீதத்தை வித்வான்களின் குழூஉக் குறியாக அடித்துவிடுவது கலைக்கு நலிவு தேடுவதாகும். சங்கீதத்துக்குச் சாரீரத்தைப் பண்படுத்திக்கொள்வது மிக அவசியம். வட நாட்டாரைப் பார்த்தாவது நம் சங்கீத வித்வான்கள் இதைக் கற்றுக்கொள்வது நலம்.

* * *

யுத்த காலத்திலே ஸ்விட்ஜர்லாந்து தேசத்தினர் தங்கள் உணவில் படிக்குப் பாதியை உருளைக் கிழங்காக உட்கொண்டார்களாம். நமக்கோ 7 முதல் 10 சதவிகிதமே உணவு பற்ருக்குறையாக இருக்கிறதாம். நாம் ஏன் கீரைகள், கிழங்குகள், விதைகளையெல்லாம் சாப்பிட்டு அந்தக் குறையைத் தீர்த்துக்கொண்டு உயிர் வாழலாகாது என்று கேட்கிருர் இந்திய உணவு மந்திரியின் மனைவி ஸ்ரீமதி லீலாவதி முன்ஷி. யாருக்கு இந்த உபதேசம் என்று தெரியவில்லை. கந்தமூல பலாதிகளை உண்ணுதவர் நம் நாட்டில் எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனல், அவைதான் மலிவாய்க் கிடைக்கின்றனவா? அரிசிக்கும் கோதுமைக்கும் சோளத்துக்கும் மேல் அவையும் பெருங்கிராக்கியாக இருக்கின்றனவே? ஏன்? போதிய அளவு உற்பத்தியாகாததுதான் காரணமா அல்லது வேறு காரணமா?

* * *

உலகப் பிரசித்தி பெற்ற பெர்னுர்ட் ஷா விசித்திரமான ஓர் உயில் எழுதி வைத்துவிட்டுச் சென்றுர். ஆங்கில வார்த்தைகளின் உச்சரிப்புக்கேற்றவாறு எழுத்துக் கூட்ட வேண்டும் என்பது அவர் கருத்து. இந்தச் சீர்திருத்தத்துக்காகத் தம் சொத்தில் மிகப் பெரும் பகுதியைச் செலவிட வேண்டும் என்று அவர் உயிலில் ஒதுக்கி வைத்திருக்கிருர். அவர் மனைவியின் உயிலிலோ மற்ருெரு விசித்திர ஷரத்து இருக்கிறது. அயர்லாந்து மக்களுக்குச் சமூகத்தில் அழகாய்ப் பழகத் தெரியாததாலேயே வாழ்க்கையில் அவர்கள் முன்னேறவில்லையாம். பிறருடன் நன்ருய்ப் பேச, பழக, இன்சொல் ஆள இவைகளையெல்லாம் அயர்லாந்து மக்களுக்குப் பயிற்றுவிக்க ஷாவின் மனைவி தம் சொத்தை எழுதி வைத்திருக்கிருர். நம் நாட்டில் கூடச் சிறந்த புத்திசாலிகள் பலர் சமூகத்தில் நயம்படப் பழக அறியாததாலேயே வாழ்க்கையில் கஷ்டப்பட நேர்கிறது. பெற்ருேர், வாத்தியார், புரொபஸர் இவர்களெல்லாருந்தான் சிறுவருக்குப் பிறருடன் நயப்படப் பழகும் கலையைப் போதிக்கவேண்டும்.

அழகு நிரம்பிய காஷ்மீர்

பிருஜ்மோஹன் நாத் ஜிஜ்ஜா

இந்தியா - பாகிஸ்தான் தகராறு நடக்கும் காஷ்மீரைப்பற்றி அடிக்கடி கேள்விப்படுகிறோம். அது எப்படிப்பட்ட இடம்? அதன் மக்கள் எப்படிப்பட்டவர்? இந்த விஷயங்களை விளக்கும் இந்தக் கட்டுரையாளர், சர்க்காரின் பப்ளிகேஷன் டிவிஷனில் கலைப் பகுதியைச் சேர்ந்தவர்.

சிறு வயதில் ஒரு தடவை என் பெற்றோர்களோடு காஷ்மீருக்குப் போயிருந்தேன். ரெயிலை விட்டு இறங்கியதும் குதிரை வண்டியில் போனோம். ஸ்ரீநகர் போய்ச் சேர நான்கு நாட்கள் பிடித்தன. அந்தக் காலத்தில் வேறு வசதி இல்லை. வழியில் அழகிய முசாபரி பங்களாக்களும் சத்திரங்களும் இருந்தன. மலைகளுக்கு நடுவில் ஒரு கால்வாய் அல்லது நீர்வீழ்ச்சிக்கு அருகில் சத்திரங்கள் இருக்கும். தாமரை மலர்கள் ஏராளமாகப் பொலியும் டல் ஏரியும், சோலைகளில் உலாவும் ஆனந்தமும், குல்மர்க்கிலும் பஹல்காமிலும் சென்ற இனிய பொழுதும், பனி மூடிய மலைச் சிகரங்களின் தோற்றமும் இன்றும் என் நினைவில் இருக்கின்றன.



இயற்கைக் காட்சி

போன சரத் காலத்தில் மறுபடி காஷ்மீருக்குப் போனேன். வானத்தையளாவும் வெண்மரங்கள் இந்தப் பருவத்தில் இலையுதிர்க்கின்றன. சினார் மரங்களின் பெரிய பெரிய இலைகள் உதிர்வதற்கு முன்பு செக்கச்செவேலென்று இருக்கும். கடைத்தெருவில் அப்போதுதான் பறித்த இன்கனிகள் கொட்டிக் கிடக்கும். ஸ்ரீநகரில் நுழைந்ததுமே சமவெளிக்குப் பாதுகாப்பான

மூலம்: ஆஜ்கல் (ஹிந்தி: நவம்பர் '51), புது டில்லி.

சருகுகளைக் குவிப்பவள்

ஹரிபர்வதமும் சங்கராசாரிய மலையின் சிகரமும் உங்கள் நெஞ்சைக் கவரும். மாலையில் நிர்மலமான ஏரிநீரில் படகில் அமர்ந்து அவற்றின் முழு நிழலையும் நீங்கள் காணலாம். அந்தி மயங்கும் நேரத்தில் ஏரியும் மலையும் எழிற் காட்சியாகத் துலங்கும் இந்திர ஜாலம்போலக் கணந்தோறும் நிறங்கள் மாறி வெவ்வேறு காட்சிகள் தென்படும். மெதுவாகச் செல்லும் படகுகளின் இனிய துடுப்பு ஒலியும், குளிர்ந்த காற்றில் அலைகள் அசைவதும் - சமவெளி வாழ்க்கைக்கும் இதற்கும் எவ்வளவு வேறுபாடு!

அமீராகதல் என்ற முதல் வாராவதியிலிருந்து நீங்கள் படகில் சென்றால் ஜேலம் நதியின் இரு கரைகளிலும் வீடுகளும் நடுநடுவே கோயில்களும் மசூதியும் உங்களுக்குத் தென்படும். இவற்றின் சிற்பக் கலை காஷ்மீருக்கே சொந்தமானது. ஜேலம் நதி, போக்குவரவுக்கும் வியாபாரத்துக்கும் முக்கியமான சாதனம். தானியங்களும் வேறு பண்டங்களும் நிரம்பிய படகுகள் அடிக்கடி வந்து போகும். உடல் வலிமை வாய்ந்த ஆண்களும் பெண்களும் படகைச் செலுத்தும் காட்சியை மறக்கவே முடியாது. குழந்தைகளும் பெற்றோருக்கு உதவி செய்வார்கள். படகோட்டிகளில் பெரும்பாலோர், தங்கள் குடும்பத்தோடு படகுகளிலேயே வாழ்கிறார்கள்.

மொகலாயர் காலத்து அழகிய சோலைகளுக்கு ஸ்ரீநகர் புகழ் பெற்றது. இயற்கை வளத்தையும் தண்ணீர் ஊற்றுக்களையும் பயன்படுத்தி ஷாலிமார், சஷ்மா ஷாஹி, நிசாத் என்ற மூன்று சோலைகள் அமைந்துள்ளன. இவை மூன்றிலும் நிசாத் எனக்கு மிகவும் பிடித்தது. மேடைகளில் வரிசையாகப் பூஞ்சோலையும் சினார் மரங்களும் வைத்துப் பயிராக்கியிருப்பது அழகாக இருக்கிறது. ஞாயிற்றுக் கிழமையிலும் விழாக்களிலும்

தானியம் குற்றுபவர்

ஊற்றுக்களிலிருந்து தண்ணீர் வேகமாக எழும்பி அந்த அழகிய சோலையைக் கந்தர்வ பூமியாக்கும். உயரமான சினர் மரங்கள், பரந்த கிளைகளினால் நிழலும் பாதுகாப்பும் அளிக்கின்றன. ஒவ்வொரு மரமும் அது அதற்கு உரிய இடத்தில் இருக்கிறது. மொகலாயச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டான சின்னஞ்சிறு மாளிகைகளும் இந்தச் சோலைகளில் விளங்குகின்றன.

ஸ்ரீநகரிலிருந்து எட்டு மைல் தொலைவில் பான்புர் இருக்கிறது. இங்கே குங்கும வயற்காடுகள் ஏராளம். குங்குமச் செடிகள் மிகச் சிறியவை; மென்மையானவை. குங்குமப் பூக்கள் ரோஜா நிறமானவை; இரவில் மலர்கின்றன. விடிகாலையிலிருந்து பதினொரு மணி வரைக்கும் குங்குமப் பூப் பறிப்பார்கள். நிலா வெளிச்சத்தில் இந்த மலர்கள் வெகு அழகாக இருக்குமாம்.

குல்மர்க்கும் பஹல்காமும் அழகிய காட்சிகள் நிரம்பியவை. ஸ்ரீநகரிலிருந்து டங்மர்க் வரைக்கும் பஸ் தவறாமல் போகிறது. அங்கே புன்னகை மலர்ந்த இளைஞர்கள் ஒய்யாரமாக நிற்கும் குதிரைகளோடு உங்களை வரவேற்பார்கள். குல்மர்க்குக்குக் குதிரையில் ஏறிச் செல்வதுதான் விசேஷம். அங்கங்கே சிறு குடிசைகளைச் சூழ்ந்து பசுமையான பரந்த சமவெளிகள் தென்படும். முன் புறத்தில் வெண் மரங்களும் தொலைவில் உன்னதமான மலைகளும் தோன்றும். நீங்கள் உயரத்தில் ஏற ஏறக் காட்சிகள் பின்னும் அழகாக இருக்கும். பனி மூடிய சிகரங்கள் தென்படும்.

குல்மர்க்கில் உலகிலேயே சிறந்த 'கோல்ப்' ஆட்ட மைதானம் இருக்

ஹுக்கா குடிப்போர்

விறகுக்காரிகள்

தெருப் பாடகர்

கிறது. ஊரும் உள்ளத்தைக் கவர்கிறது. தானியம் குற்றும் இளம் பெண்களும், செக்கச் சிவந்த கன்னமுள்ள ஆரோக்கியமான குழந்தைகளும், ஹூக்கா குடிக்கும் கிழவர்களும் காட்சியளிக்கிறார்கள். இவர்கள் கள்ளங்கபடமற்ற மக்கள். கோடைக் காலத்தில் இவர்கள் கடுமையாக உழைக்காவிட்டால் குளிர் காலத்தில் ஒன்றுமே கிடைக்காது. ஆகையால் இயற்கை, இவர்களை உழைப்பாளிகள் ஆக்கியிருக்கிறது.

பிரோஸ்புர் என்ற ஊரில் ஒரு பண்டிதர் இருக்கிறார். ஊரார் எல்லாரும் ஒற்றுமையாக இருக்கிறார்கள். அந்தக் காஷ்மீரிப் பண்டிதர் சர்க்கார் வேலையாக அடிக்கடி வெளியூர் போவார். அப்போது குழந்தை குட்டிகளையும் குடும்பத்தையும் அந்த ஊர் முஸ்லிம் சகோதரர்களிடம் விட்டுக் கவலையில்லாமல் செல்வார். தங்கள் வீட்டைப்போலவே முஸ்லிம்கள் அவர் வீட்டைக் காப்பார்கள். கொள்ளைக் கூட்டத்தார் இந்தக் கிராமத்தைத் தாக்க வந்தபோது, அந்தப் பண்டிதர் தம் வீட்டுச் சாமான்களை ஊராரிடம் ஒப்பித்துவிட்டு, குடும்பத்தோடு ஸ்ரீநகர் போய்விட்டார். கலாட்டா அடங்கியதும் அவர் பயத்தோடு ஊருக்குத் திரும்பி வந்து, "இந்த ஊரில் நான் வாழ உத்தரவு கிடைக்குமா?" என்று முஸ்லிம் நண்பர்களை வணக்கமாகக் கேட்டார். அவர் பேச்சைக் கேட்டு அவர்கள் மனம் உருகிவிட்டது. அவர்கள் அவரை அன்போடு அணைத்துக்கொண்டு, "அண்ணா, உங்களுக்கு உத்தரவாவது! இது உங்கள் வீடு. எங்களை வெட்கப் படுத்தாதீர்கள். உங்கள் சாமான்கள் பத்திரமாக இருக்கின்றன. இங்கே கொள்ளைக் கூட்டத்தார் வந்தபோது உங்கள் சாமான்களைப் பற்றிக் கேட்டார்கள். நாங்கள் இங்கே ஏதுமில்லை என்று மறுத்துவிட்டோம். நீங்கள் எங்களுக்குக் கண் போன்றவர். முஸ்லிம்களும் ஹிந்துக்களுமான நாம் இங்கே சகோதரர்களாகவே வாழ்ந்திருக்கிறோம்; இனியும் வாழ்வோம்" என்றார்கள்.

இந்தச் சம்பவத்தை என் வழி காட்டியான ரஹமான் கண்ணீர் வடியச் சொன்னபோது எனக்கும் கண்ணீர் பொங்கி வந்தது. ரஹமானும் அவனுடைய ஊர்க்காரர்களும் காட்டிய சகோதர அன்பு, ஒவ்வொரு காஷ்மீர் வாசிக்கும்-அவன் ஹிந்துவாயினும் சரி, முஸ்லிமாயினும் சரி - இயற்கையான சொந்தப் பண்பு. இவர்களுக்கு எவ்வளவு விபத்து நேர்ந்தாலும் இந்தப் பெரிய குடும்பத்தார் தம் கடமையில் முனைந்து நின்று, அன்புத்தளையிலே கட்டுண்டிருப்பார்கள். காஷ்மீரிலிருந்து திரும்பி வந்து ஆறு மாதமாகியும் அந்த அழகிய கதை என் நெஞ்சில் இன்னும் புதுமையாக இருக்கிறது.

கள்ளக் கையெழுத்து

"நான் கள்ளக் கையெழுத்து எப்படிப் போட்டிருக்க முடியும், பிரபுவே? எனக்கு என் கையெழுத்தைப் போடவே தெரியாதே" என்றான் எதிரி.

"சரிதான். ஆனால், நீ உன் கையெழுத்துப் போட்டதாக இங்கே உன்மீது வழக்கில்லை" என்று பதிலளித்தார் ஜட்ஜி.

—வி. பி. எல்.

வாலி வதம்

உலகில் சிறந்த ஆதி இலக்கியம் வால்மீகி ராமாயணம். அதன் சாரம் ஒவ்வொரு பகுதியாக 'மஞ்சரி'யில் வெளிவருகிறது.

பம்பா ஏரியினருகில் சீதையை எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்த ராமனை லட்சுமணன் தேற்றினான். அவர்கள் வந்ததை அறிந்த சுக்கிரீவன் வாலி அனுப்பிய ஒற்றர்களோ என்று முதலில் அஞ்சினான். ஹநுமானிடம் அவர்கள் யார் என்று அறிந்து வரத் தூண்டினான். ராம லட்சுமணர் இருக்குமிடத்தில் ஹநுமான் போய்க் குதித்துச் சந்நியாசிபோல் உருவம் எடுத்துக்கொண்டு பணிவுடன் அவர்களை அணுகிச் சொல்லலானான்: "ராஜரிஷிகளுக்கும் தேவர்களுக்கும் ஒப்பான தாங்கள் எதற்காக இங்கே வந்தீர்கள்? பம்பா ஏரியின் கரையில் இருக்கும் மரங்களை எதற்காகப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்? மர உரி உடுத்திருக்கிறீர்களே; உங்கள் கையில் இந்திர வில் போன்ற அழகிய வில்கள் வேறு தொங்குகின்றன. நீங்கள் யார்? சுக்கிரீவன் என்று பெயர் பெற்ற வானர மன்னனை அவன் தமையன் துன்புறுத்தி வருகிறான். சுக்கிரீவனின் மந்திரி நான். என்னை ஹநுமான் என்பார்கள். சுக்கிரீவனின் உத்தரவுப்படி வந்திருக்கிறேன். சுக்கிரீவன் தர்மாத்மா. அவன் உங்கள் நட்பை நாடுகிறான்."

இவ்விதம் ஹநுமான் கூறியதைக் கேட்ட ராமன், லட்சுமணனைப் பார்த்து மகிழ்ச்சியோடு, "நாம் சுக்கிரீவனைத் தேடிக்கொண்டிருக்கும்போதே அவனுடைய மந்திரி வந்தது நல்லதாயிற்று. இந்த மாதிரி மந்திரிகள் இருந்தால் அரசர்களுக்கு எல்லாக் காரியங்களும் நிறைவேறும்" என்றான். லட்சுமணன் ஹநுமானைப் பார்த்து, "சுக்கிரீவனின் குணம் முன்னமே எங்களுக்குத் தெரியும். அவனைத் தேடித்தான் நாங்கள் வருகிறோம். சுக்கிரீவன் சொன்னபடியே நாங்கள் செய்கிறோம்" என்று கூறித் தாங்கள் நகரத்திலிருந்து காட்டுக்கு வந்தது முதல் நடந்த வரலாறுகளைச் சொன்னான்.

ஹநுமான், "சுக்கிரீவனும் ராஜ்யத்தை இழந்தவன். வாலியோடு பகை கொண்டவன்; மனைவியை இழந்தவன். அவன் உங்களுக்குச் சீதையைத் தேடுவதில் உதவி செய்வான். அவனிடம் செல்வோம்" என்று கூறித் தன் சுயரூபத்தை எடுத்துக்கொண்டு ராம லட்சுமணர்களை முதுகில் ஏற்றிக்கொண்டு சுக்கிரீவன் இருக்குமிடம் சென்றான். அவர்கள் சுக்கிரீவனின் நட்பை விரும்புவதாகத் தெரிவித்தான். சுக்கிரீவன், "குரங்காகிய என் நட்பை நீங்கள் விரும்புவதானால் எனக்கு மகிழ்ச்சியே. இதோ கை நீட்டுகிறேன். நட்பின் அறிகுறியாகக் கையடை கொடுங்கள்" என்றான். ராமனும் மகிழ்ச்சியோடு சுக்கிரீவனின் கையைப் பிடித்து அவனை இறுகத் தழுவிக்கொண்டான். இதற்கிடையில் ஹநுமான் அக்கினியை மூட்டி இருவருக்கும்

நடுவில் வைத்தான். இருவரும் அக்கினியை வலம் வந்தார்கள்.

பிறகு சுக்கிரீவன், "என் தமையன் என் மனைவியை எடுத்துச் சென்றுவிட்டான். நான் அவனுக்குப் பயந்து மனம் கலங்கி இந்தக் காட்டில் வசித்து வருகிறேன். என் திகிலை நீக்கி அருள் புரிய வேண்டும்" என்று வேண்டினான். ராமனும், "சுக்கிரீவா, நான் வாலியைக் கொன்று விடுகிறேன். அஞ்சாதே" என்று ஆணையிட்டான்.

சுக்கிரீவன் மிகவும் திருப்தியடைந்து, "தங்கள் மனைவியை ராவணன் எடுத்துச் சென்றதாக ஹநுமான் சொன்னான். அவன் பாதாளத்தில் இருந்தாலும், ஆகாசத்தில் இருந்தாலும், நான் தேடி அழைத்து வருவேன். கவலைப்படாதீர்கள். ஒரு நாள், 'ராம, ராம! லட்சுமண' என்று கதறி ராவணன் மடியில் துடித்துக்கொண்டிருக்கும் ஒரு பெண்மணியைக் கண்டேன். அவள் சீதையாக இருக்க வேண்டும் என்று தெரிகிறது. நான் நான்கு குரங்குகளுடன் மலையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்துத் தன் உத்தரீயத்தையும் அணிகளையும் எறிந்துவிட்டுச் சென்றாள். நான் அவற்றை எடுத்து வைத்திருக்கிறேன். இதோ கொண்டுவரச்சொல்லுகிறேன். நீங்கள் பாருங்கள்" என்றான். அவை வந்ததும், ராமன் அவற்றைக் கண்டு மனமுருகிக் கண்ணீர் வடித்தான். ராமனை லட்சுமணன் பலவாறு சமாதானம் செய்தான். சுக்கிரீவனும் பல வார்த்தைகளைக் கூறி ராமனைத் தேற்றினான். பிறகு வாலி இழைத்த தீங்குகளைப்பற்றிக் கூறி மறுபடியும் வாலியைக் கொல்லும்படி ராமனை வேண்டினான். ராமன் அப்படியே செய்வதாக மீண்டும் ஆணையிட்டான். சுக்கிரீவன் வாலியின் பலத்தை எண்ணி ராமனால் வாலியைக் கொல்ல முடியுமோ என்று சந்தேகித்தான். உடனே ராமன், வாலி ஒவ்வொன்றாக அடிக்கும் ஏழு சால மரங்களை ஒரே பாணத்தால் அடித்துச் சுக்கிரீவனுக்கு நம்பிக்கை ஊட்டினான்.

சுக்கிரீவன் உடனே நம்பிக்கையுற்று உற்சாகமுடையவனாகக் கிஷ்கிந்தைக்குப் போய் வாலியைப் போருக்கு அழைத்தான். வாலி கோபமுற்று வெளியே வந்து சுக்கிரீவனோடு போர் தொடுத்தான். வாலியின் அடி தாங்காமல் சுக்கிரீவன் அருகில் திரும்பிப் பார்த்தான்; ராமனை அங்கே காணாததால் ரிச்யமூகத்துக்குத் திரும்ப ஓடி வந்து விட்டான்.

லட்சுமணனுடன் மறைந்து யுத்தத்தைப் பார்த்துக்கொண்டிருந்த ராமன் சுக்கிரீவன் வந்ததைக் கண்டு தானும் திரும்பி வருத்தத்தோடு, "உனக்கும் வாலிக்கும் வித்தியாசம் தெரியாததால் நான் வாலியின்மேல் பாணம் தொடுக்கவில்லை" என்றான். மலர்கள் அடர்ந்த கஜபுஷ்பி என்னும் கொடியை அவன் கழுத்தில் அடையாளமாகப் போட்டுத் தைரியம் கூறி மீண்டும் கிஷ்கிந்தைக்கு அனுப்பினான். தானும் லட்சுமணன், ஹநுமான் இவர்களுடன் அங்கே போனான். இப்படிச் சுக்கிரீவன் மறுமுறையும் போருக்கு வருவதைப் பார்த்து வாலியின் மனைவி தாரை, அவனுக்கு ஏதோ பக்கபலம் இருப்பதனால்தான் இப்படி வருகிறான் என்று ஊகித்து அவனைத் தடுத்தாள். சுத்த வீரனான வாலி அதைப் பொருட்படுத்தவேயில்லை. வெளியே வந்து சுக்கிரீவனுடன் போர் தொடுத்

தான். சுக்கிரீவன் களைப்படைவதைக் கண்டு ராமன் வில்லில் அம்பைத் தொடுத்து வாலியின் மார்பை நோக்கி எய்தான். வலி தாங்காமல் வாலி வெட்டுண்ட மரம்போல் தரையில் சாய்ந்தான்.

முடிவில் தரையில் விழுந்த சூரியனைப்போல் ஒளிரும் வாலியை ராமனும் லட்சுமணனும் அருகில் சென்று பார்த்தார்கள். அப்போது வாலி, அவர்கள் இன்னார் என்று தெரிந்துகொண்டு, “ராமா, நீ சக்கரவர்த்தியின் மகன். உயர்ந்த குலத்தில் பிறந்தவன். சிறந்த விரதங்களைக் கொண்டவன். அப்படியிருந்தும் சுக்கிரீவனோடு நான் போரிட்டுக்கொண்டிருக்கும்போது என்மேல் பாணம் தொடுத்தாயே! உனக்கு வெட்கமாயில்லையா? ‘ராமன் மக்களிடம் கருணை கொண்டவன். அவர்களுக்கு நன்மை செய்வான்’ என்றெல்லாம் உன்னைப்பற்றிப் பேசிக்கொள்ளுகிறார்கள். அரசர்களும் தவறு செய்தவரைத்தான் தண்டிப்பார்கள். இதை நான் நம்பினேன். தாரை அப்போதே, ‘ராமனின் பலத்தால்தான் சுக்கிரீவன் போரிட வந்தான். போகாதே’ என்று என்னைத் தடுத்தாள். நான் உனக்கோ உன் ராஜ்யத்துக்கோ எந்த விதமான தீங்கும் செய்யவில்லை. பூமி, தங்கம், வெள்ளி இவைதான் அரசர்களிடையே சண்டைக்குக் காரணம். காய்களும் கனிகளும் தின்று வாழும் என்னிடம் இவற்றில் என்ன இருக்கிறது? என்மேல் என் இப்படிப் பாணம் தொடுக்கவேண்டும்? குரங்கின் மாமிசத்தை அரசர்கள் புசிக்க மாட்டார்களே! ஆகவே, நீ அதற்காக என்மேல் பாணத்தைத் தொடுத்திருக்க மாட்டாய். இப்படி அதர்ம ரீதியில் நடக்கும் அரசனால் பூமிக்குத்தான் என்ன நன்மை ஏற்படும்? பாவியாகிய நீ தார்மிகனாகிய தசரதன் வயிற்றில் எப்படிப் பிறந்தாய்? நீ நேரில் என்னுடன் போர் தொடுத்திருந்தால் உன்னை ஒரே அடியில் கொன்றிருப்பேன். தூங்குகிறவனைப் பாம்பு கடிப்பது போல் நீ என்மேல் அம்பெய்து விட்டாய். உனக்குச் சுக்கிரீவன் உதவி செய்வதற்காகவே இப்படிச் செய்தாய். நான் ராவணனைக் கொல்லாமல் கழுத்தில் கட்டி இழுத்துச் சீதையை உன்னிடம் கொடுத்திருப்பேனே. நான் இறந்த பிறகு சுக்கிரீவன் ராஜ்யத்தை அடைவது நியாயம். நீ என்னைக் கொன்றது அநியாயம்” என்றான்.

“நீ என்னைக் குறை கூறுகிறாய். குரங்குகளுக்கு ஏற்ற அற்பகுணமே இதற்குக் காரணம். மலையும் காடும் நிறைந்த இந்தப் பூமி முழுவதும் இட்சுவாகு வம்சத்தைச் சார்ந்தது. இதில் இருக்கும் மிருகங்களையும் பறவைகளையும் மனிதர்களையும் அடக்கி ஆளுவதும் அவர்களைச் சேர்ந்ததே. இது நீதிதான். அதற்கேற்ற அடக்குமுறை, சத்தியம், வீரம் இவைகளைத் தேசங்களுக்கு ஏற்ற விதத்தில் எவன் உபயோகிக்கிறானோ அவனே அரசன். அறத்தில் பற்றுக்கொண்ட பரத மன்னனின் ஆணைக்கு அடங்கி, அறநிலை தவறியவர்களைத் தண்டித்து வருகிறோம். அரசனான நீ அறத்தைக் கைவிட்டிருக்கிறாய். இகழத் தக்க செயலைச் செய்கிறாய். நீ சுக்கிரீவனுக்குத் தமையன்; தந்தைக்குச் சமமானவன். சுக்கிரீவனின் மனைவியான ருமையை மனைவியாக்கிக் கொண்டிருக்கிறாய். அவன் உயிருடன் இருக்கும்போது நீ அவன் மனைவியை ஏற்பது அறமாகாது.

அதற்கேற்ற தண்டனைதான் விதித்திருக்கிறேன். அதோடு நானும் லட்சுமணனும் சுக்கிரீவனின் ராஜ்யத்தையும் மனைவியையும் மீட்டுக் கொடுப்பதாக அக்கினி சாட்சியாக ஆணையிட்டிருக்கிறோம். என்னைப் போன்றவர் அதைக் கைவிட முடியாது. நண்பனுக்கு உதவுவது தர்மந் தானே; உனக்கும் அது தெரிந்தே இருக்கும். ஆகவே, உன்மீது அம்பெய்தது எவ்விதத்திலும் சரிதான். வேட்டையாடும் அரசர்கள் மிருகங்களை வலைகளாலும் கயிற்றாலும் பலவிதமான தந்திரங்களாலும், அவை கவனத்தோடோ கவனம் இல்லாமலோ இருந்தாலும் கொல்வது வழக்கம். அதனால் நீ என்னுடன் யுத்தம் செய்தாலும் செய்யாவிட்டாலும் உன்மேல் பாணம் தொடுத்தேன். அரசர்கள் தெய்வாம்சம். அவர்கள் செய்த காரியத்தில் குறை கூறக் கூடாது" என்று ராமன் விளக்கிக் கூறினான். இதைக் கேட்ட வாலி, ராமனிடம் கொண்ட தவறான எண்ணத்தை நீக்கி, "ராமா, நீ மனிதரில் சிறந்தவன். நீ சொன்னது உண்மைதான். என்னைப்பற்றியோ தாரையைப் பற்றியோ உறவினர்களைப்பற்றியோ எனக்கு வருத்தமில்லை. என் மகன் அங்கதனை என் மடியிலேயே வளர்த்தேன். அவன் என்னைக் காணாமல் நீர் வற்றிய குளம்போல் அழிந்துவிடுவானே என்றுதான் கவலைப்படுகிறேன். அவன் எனக்கு ஒரே குழந்தை. அவனை நீதான் காப்பாற்ற வேண்டும். என் மனைவி தாரையைச் சுக்கிரீவன் வருத்தாதபடி நீ பார்த்துக்கொள்" என்றான்.

அப்படியே செய்வதாக ராமன் வாக்களித்தான். வாலி மீண்டும் தன்னை மன்னிக்கும்படி ராமனை வேண்டிக்கொண்டான். பிறகு அடி தாங்காமல் மூர்ச்சித்தான்.

எத்தனை சொல் வேண்டும்?

உங்களுக்கு மொத்தம் எத்தனை சொற்கள் தேவை?

நீங்கள் உட்கார்ந்து யோசித்து ஞாபகப்படுத்திக்கொண்டால், நூற்றுக்கணக்கான சொற்களை-ஏன், ஆயிரக்கணக்கான சொற்களைக்கூட-எழுத முடியலாம். ஆனால், உங்கள் சம்பாஷணைகளில் எழுபதே சொற்கள் தேவை.

டாக்டர், லாயர், எஞ்சினீர் ஆகியவர் தம் தொழில்களில் அவை சம்பந்தப்பட்ட கலைச் சொற்களை உபயோகிக்க வேண்டியிருக்கும். ஆகவே, அவர்கள் இதற்கு விலக்காவர்.

'எழுபது சொல்தானா சம்பாஷணையில் தேவை? ரொம்பக் குறைவாயிருக்கிறதே!' என்று தோன்றலாம். கவனித்துப் பார்த்தால், அந்த எழுபதுக்குள் தான் எத்தனை பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள், உரிச் சொற்கள், பொருள்கள் எல்லாம் அடங்கியிருக்கின்றன!

—ரவுண்ட் ராபின்



ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்ம ஞானத்துக்குமுன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

அருணசலக் காதல்: ரமண பகவானுக்கு இரண்டு சகோதரர்கள். இவர் நடுநாயகமாகப் பிறந்தவர். திருச்சுழியலிலும் திண்டுக்கல்லிலும் ஆரம்ப காலத்தில் கல்வி பயின்ருர். பிறகு மதுரையில் படிக்கலானுர். ஸ்காட்ஸ் மிடில் ஸ்கூலில் ஆருவது வகுப்புப் படித்தார். விளையாட்டில் அந்தக் காலத்தில் இவருக்கு அதிகப் பிரியம். குத்துச் சண்டை, மல் யுத்தம், ஓடி ஆடி விளையாடுதல் என்ருல் முன்னணியில் நிற்பார். தம்முடைய தோழர்களையும் கூட்டிக்கொண்டு வையை ஆற்றின் மணலுக்கு விளையாடப் போய் விடுவார்.

நிலவு பால்போல வீசிக்கொண்டிருக்கும். வையை யாற்றின் மெத்தென்ற மணற் பரப்பிலே இவரும் தோழரும் சடுகுடு விளையாடுவார்கள். ஒரே கோலாகலம். நேரம் போவதே தெரியாமல் குத்துச் சண்டை போட்டுக் கொம்மாளம் அடிப்பார்கள். உலக மக்கள் வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சோர்ந்து போகும் மாலையில்தான் இந்த இளைஞர் கூட்டத்தின் விளையாட்டுத் தொடங்கும். உலகம் தூங்கப்போன பிறகும் இந்த இளைஞர் தம்முடைய தோழர்களுடன் விரிந்த மணற் பரப்பில் விளையாடிக்கொண்டிருப்பார். உலகம் குறட்டை விட்டுத் தூங்கும் நள்ளிரவு நேரத்தில் இங்கே கோலாகல விளையாட்டு நடைபெறும்.

யாவரும் ஏமாந்து உறங்கும் பொழுது விழித்திருப்பவன் ஞானி; எல்லோரும் மயங்கித் தூங்கும் போது விளையாடிக்கொண்டிருப்பவன் ஞானி. இனி ஞானியாக வளரப்போகும் இவர் அந்த நிலைக்கு ஏற்றபடி, இப்போதே அந்த வாசனையைக் கொண்டிருந்தார். வித்தின்றி முளையில்லை.



மதுரை அமெரிக்க மிஷன் ஹைஸ்கூலில் வேங்கடரமணர் படித்துக்கொண்டிருந்தார். படிப்பிலே தனியான ஊக்கம் ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் ஞாபக சக்தி மாத்திரம் மிகவும் கூர்மையாக இருந்தது. நினைத்திருந்தால் புத்தகங்கள் முழுவதையுமே பாடம் பண்ணியிருப்பார். ஆனால் அவற்றிலே அவர் மனம் செல்லவில்லையே!

அந்தக் காலத்தில் அருணாசலம் என்ற பெயர் காதில் விழுந்தது. எத்தனையோ பெயர்கள் காதில் விழுந்தாலும் அவை உடனே மறந்துவிடுகின்றன; கருத்தளவும் செல்வதில்லை. வேங்கடரமணருக்கு அருணாசலம் என்ற பெயர் கருத்திலே புகுந்துகொண்டது. அந்த நினைவு எப்போது உண்டாயிற்று என்று சொல்ல இயலவில்லை. அவருடைய மனத்தின் அடித்தளத்திலேயே அருணாசல நினைவு படிந்து கிடந்திருக்க வேண்டும்.

அந்தப் பெயரைக் கேட்டால் தான் எத்தனை சுவையாக இருந்தது! கைலாசம், வைகுண்டம், இந்திரலோகம், பிரம்மலோகம் என்பவற்றுக்கு மேற்பட்டது அந்த இடம் என்று ஒருவகையான பிரமம்; அது பிரமமும் அல்ல. இன்ப ஊற்றின் எழுச்சி என்றே சொல்ல வேண்டும். அருணாசலம் என்பது எந்த இடம்? எங்கே இருக்கிறது? ஒன்றும் இவருக்குத் தெரியாது. ஆனால் அந்தத் திருநாமம் உள்ளத்துக்குள்ளே இனித்தது; அமுதத் துளியைப் பெய்தது.

ஒரு நாள் இவருடைய உறவினர் திருச்சுழியலிலிருந்து வந்தார். 1895-ஆம் வருஷம் நவம்பர் மாதம் அது. வந்தவர் ஏதோ பேசிக்கொண்டிருந்தார். அவர் அருணாசலத்தைப் பற்றிச் சொன்னார். நினைக்க முத்தி தரும் திருத்தலம் என்றும் அவர் கூறினார். திருவண்ணாமலைதான் அருணாசலம் என்று தெரிவித்தார்.

'உலகில் உள்ள ஊர்தானா!' என்று ஆச்சரியப்பட்டார் இந்த இளைஞர். 'எல்லை கடந்த இன்பத்துக்கு உறைவிடம் என்று நினைத்த அருணாசலம் திருவண்ணாமலை தானா?' என்று எண்ணினார்.

அது இன்ன ஊர், இன்ன இடம் என்று தெரியாத வரையில் அருணாசலம் இவர் உள்ளத்தில் விசுவரூபத்தை எடுத்து மனமோகன நிலையமாக இருந்தது. அருணாசலக் காதல் வளர்ந்தது. இப்போது திருவண்ணாமலைதான் அருணாசலம் என்று தெளிந்தவுடன் அந்தப் பழைய கவர்ச்சி உள்ளே அடங்கியது. அருணாசலம், அருணாசலம் என்று ஏங்கிய ஏக்கம் நின்றது. அதைப்பற்றி அடிக்கடி சிந்திக்கும் நிலையும் நீங்கியது.

ஒரு பேரழகனைப்பற்றி ஒரு மங்கை கேள்விப்படுகிறாள். அவன் எல்லா வகையாலும் உயர்ந்தவன் என்ற கற்பனை அவள் உள்ளத்தே மூளுகிறது. அவனைப்பற்றி எண்ணும்போதே இன்பம் உண்டாகிறது. காதல் முளைத்துப் படர்கிறது. காணாமலே கொண்ட காதல் அது. யாரோ ஒருவர் அவள் நினைக்கும் அந்தக் காதலன் அவளுடைய உறவினன் என்றும், சிறிது தூரத்தில் உள்ள ஊரில் இருக்கிறான் என்றும் சொல்கிறார். அப்போது அவள் வேகம் சற்றுக் குறையும். அரிய பொருளிடத்தில் வேகம் வெளிப்படையாகத் தோற்றும். கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கை உண்டானால் அந்த ஆர்வ வேகம் உள்ளே அமைந்து

வன். ஆனாலும் மெய்ஞ்ஞானம் வரவில்லை. நகரத்தில் நிதாகன் வாழ்ந்தான். கர்மங்களில் ஈடுபட்டிருந்தான். அவனைச் சோதனை செய்வதற்காக ஒரு நாள் ரிபு முனிவர் ஒரு பட்டிக்காட்டானைப் போல வேடம் புனைந்து அவனிடம் சென்றார். அந்தச் சமயத்தில் அரசன் வீதியில் பவனி வந்துகொண்டிருந்தான். அந்தப் பவனியை நிதாகன் மிகவும் சிரத்தையோடு கவனித்துக்கொண்டிருந்தான். பட்டிக்காட்டானாகச் சென்ற ரிபு முனிவர் நிதாகனைப் பார்த்து, "இது என்ன இவ்வளவு ஆரவாரம்? இவ்வளவு கூட்டம்?" என்று கேட்டார்.

"ராஜா பவனி போகிறார்" என்று நிதாகன் சொன்னான்.

"ராஜாவா? பவனி போகிறாரா? யார் ராஜா?" என்று ஆச்சரியத்தோடு பட்டிக்காட்டானாக வந்த முனிவர் கேட்டார்.

"அதோ யானைமேல் அமர்ந்திருக்கிறாரே, அவரே ராஜா" என்று விடை கூறினான் நிதாகன்.

"ராஜா யானைமேல் இருக்கிறாரா? இரண்டு வஸ்துக்களைக் காண்கிறேன். அந்த இரண்டு பேரில் யார் ராஜா? யார் யானை?"

நிதாகனுக்குச் சிரிப்பு வந்தது.

"என்ன இது? நான்தான் காட்டினேனே! ராஜாவையும் யானையையும் தெரிந்துகொள்ள முடியவில்லையா? அட பைத்தியக்காரா! மேலே இருக்கிறவர் ராஜா; கீழே இருப்பது யானை" என்றான்.

"கோபித்துக்கொள்ள வேண்டாம். எனக்குத் தெரியவில்லை. அதுதானே கேட்கிறேன்?"

"இப்போது தெரிந்துவிட்டதா?"



"நான் இன்னும் முட்டாளாகவே இருக்கிறேன். உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். ராஜா மேலே, யானை கீழே என்றாயே? மேல், கீழ் என்றால் என்ன? அதுவே எனக்குத் தெரியவில்லையே!"

"அட அடி முட்டாளே! பிரம்மாண்டமான யானையைக் காட்டினேன்; ஆடையணி அணிந்த அரசனையும் காட்டினேன். மேலே இருக்கிற ராஜாவை உனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. மேல், கீழ் என்பதே தெரியவில்லை. கண்ணால் கண்டும் உனக்கு விளங்காவிட்டால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. எங்கே, குனி" என்றான் நிதாகன். அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

பட்டிக்காட்டான் மறு பேச்சுப் பேசாமல் குனிந்தான். அவன் தோளின்மேல் நிதாகன் ஏறிக்கொண்டான். "இப்போதாவது புரிகிறதா உனக்கு? நான்தான் ராஜா; நீ தான் யானை. நான் மேலே இருக்கிறேன். நீ கீழே இருக்கிறாய்; விளங்குகிறதா?" என்று படபடப்பாகக் கேட்டான்.

பட்டிக்காட்டான் நிதானத்தை இழக்கவில்லை. "இல்லையே!

இன்னும் தெளிவாகவில்லையே! யானை, ராஜா இரண்டும் முதலில் விளங்கின. இப்போது மேல் கீழ் என்பவையும் ஒருவாறு புரிகின்றன. ஆனால் மற்றொரு சந்தேகம் அல்லவா வந்துவிட்டது. நான் மேல், நீ கீழ் என்றாயே; நான், நீ— இந்த இரண்டும் எனக்குப் புரியவில்லை. இந்த இரண்டும் எவற்றைக் குறிக்கின்றன? கிருபையோடு இதையும் விளக்க வேண்டும்'' என்று கேட்டான்.

அதுவரைக்கும் நிதாகனுக்குச் சுலபமாக இருந்தது. பட்டிக்காட்டானைக் கண்டு ஏளனமாக இருந்தது. கோபமும் வந்தது. 'நான், நீ' என்ற வேறுபாட்டை விளக்க வேண்டும் என்று பட்டிக்காட்டான் கேட்டவுடனே அவனுக்கே மலைப்பாகப் போய்விட்டது. 'நான், நீ என்று பேசினேன். அவற்றின் பொருள் என்ன? ராஜா, யானை இரண்டையும் எளிதிலே காட்டிவிட்டேன். நான், நீ—இந்த இரண்டையும் எப்படிக் காட்டுவது? நான் இவற்றை உணர்ந்தேனா? என்னையே நான் உணரவில்லை போலத்தானே இருக்கிறது? ஆம்; நான் என்பதே இன்னும் எனக்குத் தெளிவாகவில்லை?' - நிதாகன் சிந்தனையில் ஆழ்ந்தான். அப்போது தான் அவனுக்கு உண்மை விளங்கிற்று. 'இங்கே நிற்பவன் பட்டிக்காட்டான் அல்ல. எனக்கு உண்மையை உணர்த்தவந்த ஞானகுரு. இப்படி என்னைச் சுமந்தாவது உண்மையை உணர்த்தும் கருணை நம்முடைய குருநாதர் ரிபுவுக்குத்தான் உண்டு. இவர் நம் குருநாதரே' என்று தோன்றியது. உடனே கீழே குதித்தான். முனிவருடைய காலைப் பற்றிக்கொண்டான்.

நீ, நான் என்ற பேதம் உடம்புக்கேறியதென்பதை ரிபு இப்படித் தம் சீடனுக்கு உணர்த்தினர்.

—(வாக்கு)

ஞாபகம் இருக்கிறதா?

ஹோட்டலில் சம்பிரமமாகச் சாப்பிட்டுவிட்டு, மானேஜரிடம் வந்தான் ஓர் ஆசாமி. "என்னை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இல்லை; ஞாபகம் இல்லையே" என்றார் மானேஜர்.

"ஒரு வருஷத்துக்குமுன் இங்கே வந்தேன். சம்பிரமமாகச் சாப்பிட்டேன். என்னிடம் காசில்லை. கையை விரித்தேன். என்னை விரட்டிவிட்டீர்களே. ஞாபகம் இல்லை?"

"ஓ! சரிதான். சரிதான். இப்போது நன்றாய் ஞாபகம் வந்துவிட்டது."

"சரிதான், ஸார். நான் அதே வேலையைத்தான் இன்றும் செய்ய வேண்டியவனாயிருக்கிறேன். மன்னிக்கவேண்டும்" என்று சொல்லி ஆசாமி எழுந்து வெளியே சென்றுவிட்டான்.

—டபிள்யு. இ. ஜான்ஸன்.



நிற்கும். அதனால் காதல் இல்லை என்று சொல்லலாமா?

ரமணருடைய அருணாசலக் காதலும் அப்படித்தான் ஆயிற்று. அருணாசலம் இன்னதென்று அறியாதபோது அதனிடத்தில் காதல் முளைத்தது. அது மிக மிக அருமையான இடம் என்ற நினைவு வளர வளர அந்தக் காதல் படர்ந்தது. திருவண்ணாமலைதான் அது என்று உணர்ந்ததும் அந்தக் காதல் புறத் தோற்றத்திலே அடங்கியது. ஆனால் உள்ளே அது வைரமாக விளைந்தது. புற மனம் அறியாமலே ஞாபக சக்திக்கும் அப்பாலே ஆழமாக அகமனத்தினூடே அருணாசலக் காதல் சென்று அடங்கி உறுதி பெற்றது.

பரமாத்மாவின் அழைப்பு—ஆருயிர்த் தந்தை 'மகனே' என்று அழைக்கும் அழைப்பு - வரும்போது அந்தக் காதல் வெடிக்கச் சித்தமாக இருந்தது. அருட் கடலிலே திளைய வேண்டுமென்ற தாகம் தாங்க இயலாதபடி வளர்ந்து ஆருயிர் வேசாறும் பக்குவத்தை அடையப் போகும் என்று அந்த நிலையை எதிர்நோக்கி உள்ளக் குகையின் அடியிலே அருணாசலக் காதல் காத்துக் கிடந்தது.

—(வாழ்வு)

சாந்தியே இயற்கை: ஆத்மாவின் இயற்கையான நிலை சாந்திதான். எங்கும் வியாபித்திருக்கிற பரமாத்மா சாந்திப் பெருங் கடல். அதனிடையிலே உள்ள ஆத்மாவும் சாந்தியையுடையதுதான். ஆயினும் அந்தச் சாந்தி நிலையை உணர முடியாமல் செய்வது மனம். யோசிப்பது, நினைப்பது, எண்ணுவது எல்லாம் மனத்தினுடைய வேலை. நினைப்பு இருந்தால்தான் மனிதன் இயங்குகிறான். சாந்தி பெறாமல் இருக்கிறான். தூங்கும்போது சாந்தி பெறுகிறான். மனம் வேலை செய்யாதபோது சாந்தி தானே உண்டாகும். மனம் என்று ஒரு பொருள் இல்லை. எண்ணங்களின் உருவமே அது. மனம் இன்னதென்று விசாரித்தால் மனம் தொலைந்து போகும். எண்ணங்கள் தோற்றுவதனால் அவை எங்கிருந்தோ தோற்றுவதாகக் கற்பனை செய்துகொண்டு அவ்விடத்தை மனமென்று சொல்கிறாய். மனமென்பது என்னவென்று உள் நுழைந்து நோக்கினால் உண்மையில் மனமென்று ஒன்றையும் காணோம். இப்படி மனம் இறந்தால் சாசுவதமான சாந்தி விளங்கும்.

—(வாக்கு)

நிதாகன் கதை: ரிபு என்ற ஞான முனிவரிடம் நிதாகன் என்பவன் உபதேசம் பெற்று மாணாக்கனாக இருந்தான். எங்கும் பரந்து ஏகமாய் நிற்கும் பரப்பிரம்மத்தின் சத்திய நிலையைப்பற்றிய ஞானம் அந்த நிதாகனுக்கு இன்னும் உறுதிப்படவில்லை. அவன் நன்றாகப் படித்தவன்; அறிவாற்றல் உடைய

சில கட்சிகளின் தேர்தல் சின்னங்கள்

காங்கிரஸ்



ஷெட்யூல்டு வகுப்பு சம்மேளனம்



ஸோஷலிஸ்ட்

அகில பாரதீய ஜனசங்கம்



கிஸான் மஜ்தூர் பிரஜா கட்சி



பார்வர்ட் பிளாக் (மார்க்ஸிஸ்ட் கட்சி)



ராமராஜ்ய பரிஷத்

இந்திய போல்ஷிவிக் கட்சி

இந்து மகாசபை

பார்வர்டு பிளாக்
(ரூய்க்கர் கட்சி)



புரட்சி சோஷலிஸ்ட்



கம்யூனிஸ்ட்

புரட்சி கம்யூனிஸ்ட்

கிருஷிகர்லோக் கட்சி

தேர்தலில்தான் எத்தனை ரக அபேட்சகர்கள் நிற்கிறார்கள்! அதுவே ஒரு தமாஷ் இல்லையா?

அபேட்சகரைச் சந்தியுங்கள்

'மோஹன்'

வோட்டளிப்பதென்றால் லேசல்ல; இது எல்லாருக்குமே தெரிந்திருக்கும். நாளுக்கு ஒரு கட்சி வீதம் புதுப் புதுக் கட்சிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. மறுநாளே அவை இரண்டுபட்டு ஒன்றும் புரியாமல் திண்டாடுகின்றன. இதனால் வோட்டர்களின் நிலைமை பின்னும் மோசமாகிவிடுகிறது.

இப்போதிருக்கும் கட்சிகள் நிச்சயமாக உருப்படப் போவதில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. மதப்பற்றற்ற சமுதாயத்தில் நம்பிக்கையும் பரந்த நோக்கும் உள்ள சுயேச்சை அபேட்சகர்களுக்கே நான் வோட்டளிக்கப் போகிறேன்.

நான் இருக்கும் தொகுதியில் இப்படிச் சுமார் அரை டஜன் சுயேச்சை அபேட்சகர்கள் நிற்கிறார்கள்! இவர்கள் எல்லாருமே மதச் சார்பற்று மக்களின் நலனுக்காகப் பிரமாதமாய் உழைக்கப்போகிறார்கள்!

நீங்களும் வோட்டர்தானே? இவர்களுடைய முக்கியமான கொள்கைகளை அறிந்துகொள்ள உங்களுக்கு விருப்பம் இருக்கலாமே.

மோட்டாலால்

மியான் மஸ்த் கான் என்பவர் கசாப்புக்கடை வைத்திருக்கிறார். ஆடுகளைத் தம் கூரான கத்தியால் சாமர்த்தியமாகப் பதம் பார்க்கிற மாதிரியே கறி வாங்குபவர்களிடமிருந்தும் சரியானபடி பணம் கரந்துவிடுவார். தாம் ஜயித்தால் இனிமேல் இந்தக் குஜராத்திகளும் மார்வாடிகளும் வாரத்துக்கு இரண்டு முறையாவது பச்சை மாமிசம் சாப்பிட வேண்டும் என்று ஒரு மசோதா கொண்டுவருவதாகத் தீர்மானித்திருக்கிறார். வேஷ்டி கட்டிக்கொண்டதால் தாழ்மை மனப் பிராந்தி ஒன்று அவர்களுக்கு உண்டு. இது போவதற்கு இப்படி மாமிசம் சாப்பிட வைப்பதுதான் சரியான வழி.

குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்பது டார்வின்

மூலம்: ப்ளிட்ஸ், (ஆங்கிலம்: 18-10-'51), பம்பாய்.

கொள்கை. இதில் உங்களுக்கு நம் பிக்கை இராவிட்டால் ஸ்ரீயுத பந்தர் தாஸைப் பார்த்தீர்களானல் போதும். குள்ளக் குறகலாகக் குரங்குமாதிரி இருப்பார். அவர் மூளையும் அதேமாதிரி வேலை செய்வதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

"எல்லாருக்கும் நல்ல போக்குவரத்து வசதி ஏற்படப் பாடுபடுவேன்" என்கிருர். அவரைத் தேர்ந்தெடுத்தால் ரெயில்வேயில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்துவாராம். ஓர் உதாரணம்: ரெயில் தண்டவாளத்தைக் கடந்தால் அபராதம் கிடையாதாம். ரெயிலுக்கடியில் விழுந்து தற்கொலை செய்துகொள்ளும் பேர்வழிகளின்மேல் வழக்குத் தொடுக்காதபடி பார்த்துக்கொள்வாராம். ரெயிலடியிலுள்ள கக்கூஸ், முகம்கழுவும் அறை இவைகளை உடனே எடுத்துவிட்டு அங்கெல்லாம் பெஞ்சு போட்டுவிடுவாராம். இடங்கிடைக்காமல் புட்போர்டிலோ ரெயில் கூரைமேலோ திண்டாடும் ஆசாமிகளுக்கு, அடுத்து வரும் கூட்ஸ் வண்டியின் திறந்த வாகனில் இடங்கொடுக்க ஏற்பாடு செய்வாராம்.

சேத் சாபர்நாஸுக்கோ இன்ன கொள்கைதான் என்று நிச்சயமாக எதுவும் இல்லை. அவர் குஜராத்திப் பள்ளிக்கூடத்தில் 3-ஆம் வகுப்புவரையில் படித்தவர். வயது 55 ஆகிறது. ஆனலும் பாலப்பிரம்மசாரி. (ஏன் என்று என்னைக் கேட்டு வைக்காதீர்கள்.) அவருடைய கைக் கட்டைவிரலில் மசி தட்வி ஒற்றுவதற்குக்கூட ஓர் ஆள் வேண்டியிருக்கிறது; அவ்வளவு சோம்பேறி. இருந்தாலும் தம்மைத் தேர்ந்தெடுத்தால் தமக்கு மிஞ்சின பொதுஜன ஊழியர்களே அப்புறம்

புல்சந்து

உலகத்தில் இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்கிருர். ஒரு விஷயத்தில் அவர் சோம்பேறியாக இருப்பது நல்லதுதான். மற்றவர்களைப்போல் அதிகப்பிரசங்கம் செய்யாமல் இருப்பாரோ இல்லையோ?

அடுத்தபடியாக மோட்டாலாலை எடுத்துக்கொள்வோம். 48 வருஷத்துக்கு முன்னலேயே அவருடைய பெற்றோர்கள் இப்படி அவருக்குப் பொருத்தமாகப் பெயர் வைத்திருக்கிறார்களே; அதை மெச்ச வேண்டியதுதான். சரியான மோட்டா ஆசாமிதான்!

காவி ஏறி முன்பல்லைக் காட்டி அவர் தொப்புவதையும் அந்தக் கோரப் புருவத்தையும் 226ராத்தல் சதையையும் தலைமேலே வெள்ளைக் குல்லாயையும் பார்த்தால் உடனே

அவர்தான் மோட்டாலால் என்று கண்டுகொண்டு விடலாம். அவருடைய முக்கியமான கொள்கை, "ஜனத்தொகை குறைவாக இருந்தால் நிறைய உணவு கிடைக்கும்" என்பதுதான். பிரம்மசாரிகளும் தாரம் இழந்தவர்களும் கல்யாணம் செய்துகொள்ளாமலே இருந்தால் அவர்களுக்குப் போனஸ் வழங்குவாராம். அவருக்கு இதுவரை எத்தனை தாரம் தெரியுமோ? ஆறு பேர். பிள்ளை, பெண், பேரன், பேத்திமார் எல்லாரும் சேர்ந்து ஒரு பட்டாளத்துக்கு இருக்கும்; மொத்தம் 41 பேர் என்றால் பாருங்களேன். "கோடீசுவரரான அழகிய இளம் மார்வாடி ஒருவருக்கு 14 முதல் 16 வயதுக்குள் அழகிய கன்னிப்பெண் தேவை; பெண் சுமுகமாக இருக்க வேண்டும்" என்று பத்திரிகைகளில் ஒரு விளம்பரமும் கொடுத்திருக்கிறார்.

ஸ்ரீமான் புல்சந்து கற்பனையில் திளைப்பவர். தவறித் தத்துவ ஞானியாக மாறிவிட்டார். "தத்துவத்தின் மூலம் கற்பனை உலகை எட்டவேண்டும்" என்பது அவர் கொள்கை. தேர்தலில் ஜயித்தால் அகில இந்திய ரேடியோவிலும் பிலிம் இலாகாவிலும் இதைப் பரப்ப வசதியாக இருக்குமோ இல்லையோ?

இயற்கையோடு ஒத்துப் போக வேண்டும் என்பதே அவருடைய சித்தாந்தம். "சோப்பு, க்ஷவரக் கத்தியெல்லாம் விலை ஏறிப் போச்சு என்றால் களிமண்ணைத் தேய்த்துக்கொள்ளுங்கள்; க்ஷவரமே செய்துகொள்ளாதீர்கள். மகாத்மா டண்டன்ஜீ அப்படித்தான் செய்கிறார். துணிப் பஞ்சம் ஏற்பட்டால் கவலைப் படாதீர்கள். டாக்டர் பாக்ஸ் டிபானு என்ற பிரபல ஆராய்ச்சியாளர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? இயற்கையோடு ஒத்து வாழ்க்கை நடத்துவதுதான் நல்லது என்கிறார். அதோடு இன்னொரு நன்மையும் உண்டு; இப்படிச் சேர்த்த பணத்தை ஏதாவது நல்ல காரியத்துக்குப் பயன்படுத்தலாம். எவ்வளவு சுலபம், பார்த்தீர்களா?"

ஆகா! இவ்வளவு சுலபமாக இந்தப் பிரசனையைத் தீர்த்துவிட்டாரே மனுஷர்!

"ஒருவர் விடாமல் எல்லாரும் தமிழ் பேசினால்தான் ராம ராஜ்யம் கைகூடும்" என்று சக்ரம் ஸ்வாமி பிள்ளை என்ற அபேட்சகர் சொல்லுகிறார். பண்டைப் பாரத நாட்டின் கலாசார மொழி தமிழ் மொழியே என்பது அவர் கொள்கை. அவருக்கும் வைத்தியத்துக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தமே இரா விட்டாலும் பொதுச் சுகாதாரத்தையே தம் லட்சியமாகக் கொண்டு தேர்தலில் நிற்கிறார்.

"ஜலதாரைக் குழாய்களிலிருந்து 'பெர்போடெஸானின் ஸெக்டியோமா' என்ற ஒரு விஷவாயு வெளிப்படுகிறது. இதனால்தான் அநேக நோய் நொடிகள் வந்து மக்களை வாட்டி எடுக்கின்றன. ஆகவே, ஜலதாரைகளையே எடுத்துவிட வேண்டும். எல்லாரும் அக்கம் பக்கத்து வயல் வெளிகளுக்குப் போய் வந்தால் தீர்ந்தது! இதனால் நல்ல எரு ஏராளமாகக் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு வன மகோத்ஸவம், அதிக உணவு உற்பத்திப் பிரசாரம் எல்லாம் ஜாம்ஜாம் என்று வெற்றிகரமாக நடத்திவிடலாம்" என்கிறார்.

இப்போது யாருக்கு வோட்டுப் போடுவது?

இது நியாயமா?

★

மாயூரம் வேதநாயகம் பிள்ளை சென்ற நூற்றூண்டில் வாழ்ந்தவர். ஜில்லா முன்சீப் உத்தியோகம் பார்த்தவர். மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணக்கர். பல கவிதை நூல்களும் வசன நூல்களும் இயற்றியிருக்கிறூர். 'நீதி நூல்' என்பது நல்ல நீதிகளைச் சொல்லும் செய்யுள் நூல். 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்பது இவர் இயற்றிய நாவல். அதுவே தமிழில் முதல் முதலாக எழுந்த தமிழ் நாவல். 'சர்வசமய சமரச கீர்த்தனங்கள்' என்ற கீர்த்தனத் தொகுதி இவர் இயற்றியதே. எளிய நடையில் காரண காரியத் தொடர்பு காட்டி எழுதுவது இவர் இயல்பு. வசனமானுலும் செய்யுளானு லும் இந்த இயல்பை அதில் காணலாம். பின்வருவது இவர் எழுதிய 'பெண் கல்வி' என்ற நூலின் ஒரு பகுதி.

வேதநாயகம் பிள்ளை (பெண் கல்வி): ஒரு நாள் ஓர் எளிய ஸ்திரீ ஒரு பிள்ளையை இடுப்பில் வைத்துக்கொண்டு, ஒரு பிள்ளையைத் தோளில் எடுத்துக்கொண்டு, சில பிள் ளைகளைக் கையிற் பிடித்து நடத்திக்கொண்டு மிகுந்த பசிதாகத்துடனே வந்து பிக்ஷை கேட்டாள். அவள் பசியினுல் வாடி மெலிந்து பேசவும் சக்தி இல்லாமல் இருந்தாள். அவள் முந்திச் சாப்பிடும்படி ஓர் இலை போட்டு அன்னம் படைக்கப் பட்டது. அவள் உட்கார்ந்து ஒரு பிடி சாதம் எடுத்து வாயில் வைத்தவுடனே, இரண்டு பிள்ளைகள் ஓடி அவ ளுடைய இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டன. ஒரு பிள்ளை அவளுடைய தோளில் ஏறி அவளுடைய வாயில் இருந்த சாதத்தைப் பலவந்த மாகப் பிடுங்கித் தன் வாயிற் போட்டுக்கொண்டது. மற்றப் பிள்ளைகள் இலையில் இருந்த சாதத்தை அள்ளி அள்ளிச் சாப்பிட்டு ஒரு நிமிஷத்தில் சாதம் இருந்த வாழையிலையை வெற்றிலையாக்கிவிட்டன. மலைத்துப் போய்ப் பேசாமல் இருந்த அந்த ஸ்திரீ மாலை மாலையாகக் கண்ணீர் விட்டுக் கொண்டு, "ஐயோ! இப்ப டியே தினந்தோறும் இந்தப் பிள்ளைகளால் நான் பட்டினி யாய் இருக்கிறேன்" என்று சொல்லி உடனே பசிக்களை யினுல் மூர்ச்சையானுள். அப் போது கூட இருந்தவர்கள் ஒருவராவது இதைக் கண்டு அழாமல் இருக்கவில்லை.

இப்படியே எண்ணிக்கை யில்லா ஜனங்கள் படும் கஷ் டங்களைக் கண் கொண்டு

பார்க்கக் கூடுமா? காதினால் கேட்கக் கூடுமா? ஐயையோ! இதென்ன பரிதாபம்! அந்த ஏழைகளும் கடவுளுடைய பிள்ளைகள் அல்லவா? அவர்களுக்காகவும் பூமி விளைய வில்லையா? கடவுளால் கொடுக்கப்பட்ட சகல பொருள்களிலும் அவர்களுக்கும் பாகம் இல்லையா? இந்தப் பூமியிலே விளையப்பட்ட தானியங்களையும் மற்றப் பொருள்களையும் சகல மனுஷர்களுக்கும் சமபாகமாகப் பிரித்துக் கொடுத்தால் இந்த உலகத்துக்கும் கொடுத்து இன்னம் சில உலகங்களுக்கும் தானம் கொடுக்கலாமே! அப்படியிருக்க, கோடாநுகோடி ஏழைகள் கஷ்டப்படக் காரணம் என்ன? அதற்குத் தனவான்களுடைய பேராசையும்லோபகுணமுமே காரணமாயிருக்கின்றன. பூமியும் பூமியில் அடங்கிய மற்றப் பொருள்களும் சகலருக்கும் சமுதாயமே தவிர அவைகள் தனவான்களுக்கு மட்டும் சொந்தமென்று அவர்கள் கடவுளிடத்தில் சிலாசாசனம் பெற்றுக்கொள்ளவில்லையே! பஞ்ச பூதங்களில் பூமி தவிர மற்றப் பூதங்களையும், சந்திர சூரிய நட்சத்திரங்களின் பிரகாசத்தையும், யாவரும் பொதுவாகவே அநுபவிக்கிறார்கள். அப்படியே பூமியையும் பூமியில் உற்பத்தியாகிற தனதானியங்களையும் சகலரும் பொதுவில் அநுபவிக்க வேண்டியது நியாயமாயிருக்க, அவைகளைச் சில செல்வர்கள்மட்டும் கட்டிக்கொண்டு மற்றவர்களுக்குப் பாகம் கொடாமையினால் அநேகர் தரித்திரப்பட ஹேதுவாயிருக்கின்றது. ஒரு புண்ணியவான் தர்மசத்திரம் கட்டி, அதற்குக் கிராமங்கள் விட்டு அந்தக் கிராமங்களின் வரும்படியைக் கொண்டு ஏழைகளுக்கு அன்னதானம் செய்யும்படி காரியஸ்தர்களையும் கணக்கர்களையும் உக்கிராணக்காரர்களையும் நியமிப்பது போல, பரமகிருபாமூர்த்தியாகிய கடவுள், உலகமாகிய அன்ன சத்திரத்தைக் கட்டித் திரவியவான்களைக் காரியஸ்தர்களாகவும், பொக்கிஷக்காரர்களாகவும் நியமித்து, அவர்கள் மூலமாகத் தர்மம் நடக்கும்படி அவர்களிடத்தில் பொருள்களைக் கொடுத்தருளினார். தர்மவிசாரணைக் கர்த்தர்கள் சத்திரத்தின் வரும்படியில் தங்களுக்குள்ள மாசாந்தர வேதனங்களை எடுத்துக்கொண்டு, மற்றதை ஏழைகளுக்கு உபயோகப்படுத்துவதுபோல், செல்வர்கள் தங்களுக்கும் தங்களுடைய குடும்பங்களுக்கும் வேண்டிய மட்டில் வைத்துக்கொண்டு சேஷத்தை ஏழைகளுக்கு விநியோகம் செய்ய வேண்டுமென்பது கடவுளுடைய திருவுளமாயிருக்கின்றது. அந்தப்படி சத்விநியோகம் செய்யாத பரமலோபிகள் ஏழைகளுடைய சொத்தை அபகரிக்கிறவர்களாகையால், அவர்களைத்

தீனபந்துவாகிய தெய்வம் சிக்ஷியாமல் விடுமா?

உலகத்தில் கோடீசுவரர்களும் லக்ஷாதிபதிகளும் அநேகர் இருக்கிறார்களே; அவர்களுடைய கைவசமாயிருக்கிற பொருள்களைப் பாகித்தால் எண்ணிறந்த ஏழைகளுக்குக் கொடுக்கலாமே! சாதாரணமாகத் தனித்தனியே ஆயிரவேலி நிலமுடைய பூபாலர்கள் அநேகர் இருக்கிறார்கள். ஓர் எளிய குடும்பத்தின் சர்வஜீவ காலக்ஷேபத்திற்கு ஒரு வேலி நிலம் போதுமாகையால், ஆயிரம் வேலி நிலம் ஆயிரம் குடும்பங்களின் ஜீவனத்திற்குப் போதுமே! அவ்வளவு நிலங்களை ஒருவன் வைத்துக்கொண்டும் மற்றவர்களைப் பறக்கவிடுவது தர்மமா? சீமான்கள் வீட்டு ஸ்திரீகள் விசேஷகாலங்களில் வெளியில் புறப்படும்போது தரித்திருக்கிற ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் மதிப்பிட்டால் ஒவ்வொருத்திக்கு லக்ஷ ரூபாய்க்குக் குறையாமல் இருக்கின்றனவே! குடும்பம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் பிரித்துக் கொடுத்தாலும் லக்ஷரூபாயை ஆயிரம் குடும்பங்களுக்குக் கொடுக்கலாமே! ஆயிரம் குடும்பங்களுடைய அன்னத்தை ஒரு தர்ப்பலமுள்ள ஸ்திரீ தன்னுடைய தேகத்தின் மேலே தூக்கிக்கொண்டு திரிவது எவ்வளவு பெரிய அநியாயம்! இன்னும் தனவான்கள் வீட்டில் இருக்கிற சர்வாபரணங்களும், பல திரவியங்களும், வஸ்திரங்களும், துர்விஷயங்களிலும் டம்பவிஷயங்களிலும் அவர்கள் விருதா விரயம் செய்கிற தனங்களும் அநாவசியமாக அவர்கள் வைத்திருக்கிற பண்டம், பாடி முதலிய பாத்திரக்கோடிகளும் இவ்வளவென்று கணிதம் செய்யக் கூடுமோ? அந்தப் பொருள்களையெல்லாம் பணமாக்கி, வட்டிக்கு விட்டு, வட்டி வரும்படியில் அந்தச் செல்வர்களுடைய குடும்பங்களுககுத் தற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் வேண்டியமட்டும் வைத்துக்கொண்டு, மிச்சத்தை ஏழைகளுக்குக் கொடுத்தால் அவர்களுடைய கஷ்டம் விடியாதா? பூமியைப் பார்த்து, "பூமியே, உனக்குப் பொன், எனக்கு மண்" என்று சொல்வது போலப் பூமியைத் தோண்டித் தோண்டி மண்ணைத் தங்களிடம் இழுத்துக்கொண்டு பொன்னைப் பூமியில் புதைக்கிற செல்வர்கள் அந்தப் பொருளைத் தாங்களும் அநுபவியாமல் ஏழைகளுக்குங் கொடாமல் மண்ணுக்குத் தத்தம் செய்வது மார்க்கமா? அண்டையிலும் அயலிலும் எண்ணிக்கையில்லாத ஜனங்கள் கொட்டைப்பாக்களவு அன்னமும் அகப்படாமல் கஷ்டப்படும்பொழுது, மிராசுதார்கள் களஞ்சியங்கள்தோறும் மலை மலையாகத் தானியங்களைக் கட்டிவைத்துக்கொண்டு அதிக விலையை எதிர்பார்த்துக்

கொண்டிருக்கலாமா? அநேக ஏழைகளுடைய வயிறுகள் வறுமையினால் வெறுமையாயிருக்கும்பொழுது நெற்கோட்டைகளைக் கட்டிவைத்திருக்கிற மகதைசுவரியவான்கள், வெள்ளிக் கிண்ணியிலே பாலும் தங்கக் கிண்ணியிலே சோறும் வைத்துக்கொண்டு தங்களுடைய வயிறுகளை மட்டும் நிரப்பலாமா? அநேக ஏழைகள் வஸ்திரம் இல்லாமல் திகம்பரர்களாய்த் திரியும்பொழுது, பிரபுக்கள் பல வண்ணார் வீடுகளை விலைக்கு வாங்கினதுபோல மூட்டை மூட்டையாகவும் அடுக்கு அடுக்காகவும் வஸ்திரங்களை வைத்துக்கொண்டு சும்மா இருக்கலாமா?

கூலிக் கணக்கு

வில்ஸன் பாரட் என்ற பிரபல நடிகரின் வீட்டைப் புதுப்பித்து அலங்கரித்தபோது பல தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். அவர்களை உற்சாகப்படுத்த எண்ணினார் நடிகர். தாம நடித்துள்ள 'லண்டன் தீபங்கள்' என்ற படத்துக்கு இலவச டிக்கட்டுகள் கொடுக்கத் தீர்மானித்தார்.

"சனிக்கிழமை இரவு படம் பார்க்க உங்களுக்கு இஷ்டமா? டிக்கட் தருகிறேன்" என்றார்.

"சரி" என்று சொல்லி, அவர்கள் அப்படியே போய்ப் படம் பார்த்தார்கள்.

வாரக் கடைசியில் அவர்களுடைய சம்பளப்பட்டியலை நடிகர் பார்த்தபோது, திடுக்கிடும்படியான ஓர் இனம் குறித்திருப்பதை அவர் கண்டார். ஒவ்வொரு தொழிலாளரின் பெயருக்கும் எதிரே, "சனிக்கிழமை. பிரின்ஸெஸ் தியேட்டரில் நாலுமணி நேரம். எட்டு ஷில்லிங் கூலி" என்று போட்டிருந்தது!

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

செத்த பிறகு

ஹௌடினி என்பவர் உலகப் பிரசித்தி பெற்ற ஜால வித்தைக்காரர். மனைவியை மணந்து 33 வருஷகாலம் காதல் நிறைந்த வாழ்வு நடத்தினர். 1913 தொடங்கி; தாம் சாகும் அளவும் பல ஜோலிகளுக்கிடையே மனைவிக்கு அவர் தினந்தோறும் ஒரு காதல் கடிதம் எழுதி வந்தார். அவைகளில் பல சடிதங்கள் நீண்ட வியாசங்களைப் போல் இருந்தன. வீட்டிலேயே இருந்துவிடுவாரானல், இந்தக் கடிதங்களை எங்கேயாவது மூலைமுடுக்குகளில் ஹௌடினி ஒளித்து வைத்துவிடுவார். அவர் இறந்து ஆறுமாதம் வரைக்கும் அவருடைய மனைவிக்கு அடிக்கடி இந்தக் கடிதங்கள் அகப்பட்டுக்கொண்டிருந்தன.

—'தி அமெரிக்கன் மகஸீன்'

பஸிபிக் பிசாசு

வில்லார்டு ப்ரைஸ்

பத்துத் தலையுள்ள இந்தக் கடல் அரக்கனிடம் மாட்டிக்கொண்ட ஒரு மனிதன் பட்ட பாட்டை வர்ணிக்கும் இந்த வரலாறு நம்மைத் திகைத்து நடுங்கச் செய்வது.

பல பல என்று பொழுது விடியும் சமயம். எனக்குத் தூக்கம் வரவில்லை. கடற்கரையோர நீர்த் தேக்கத்தில் நாங்கள் விரித்திருந்த மீன் வலையைப்பார்த்து வரச் சென்றேன். சுவர்போல் பாறை சூழ்ந்தது அந்த நீர்த் தேக்கம். கடலில் அலை பொங்கி எழுந்து வரும்போது அதனோடு நீந்தி வரும் பெரிய மீன்கள், இந்த நீர்த் தேக்கத்தில் பின் தங்கி விடுவது வழக்கம். இங்கே நான் போனபோது, நீர்த் தேக்கத்தின் ஜலமட்டத்துக்கு வெளியே பெரிய தாம்பாளம் போன்ற இரண்டு கண்கள் நீண்டு என்னை நோக்கின. எந்தப் பிராணிக்கும் இவ்வளவு பெரிய கண்கள் இருக்க முடியாதே என்று எனக்குத் தோன்றிற்று. தூக்கக் கலக்கத்தில் கனவு காண்கிறேனோ என்று எண்ணினேன்.

அந்தக் கண்கள் ஏதோ ஆவியுலகத்துப் பிராணியின் கண்கள் போல் தென்பட்டன. பச்சைநிற ஒளி ஒன்று அவைகளில் மின்னியது. அவைகளுக்குப் பின்னே விளக்குகள் இருப்பதுபோல் தோன்றின. வண்டிப் போக்குவரத்துக்குச் சமிஞ்ஞை காட்டும் விளக்குகள் மாதிரியே அவை காட்சியளித்தன. ஒரே ஒரு வித்தியாசம். அவை மிகவும் பெரியவையாக இருந்தன. "போ!" என்று அவை எனக்குச் சமிஞ்ஞை காட்டின. போய்விடுவோம்' என்றே நினைத்தேன். ஆனால், என் கால்கள் தெம்பிழந்தன. என்னால் நகர முடியவில்லை.

திடீரென்று நீர்த் தேக்கத்தின் நீர் சளசள என்று அலைபட்டது. பிரம்மாண்டமான ஏதோ ஒரு பிராணி அதைக் கலக்கியது. அந்தப் பச்சை ஜ்வாலை வட்டங்கள் இரண்டும் என்னை நெருங்கி

மூலம்: பம்பாய் கிரானிக்கிள் (ஆங்கிலம்; 2-12-'51), பம்பாய்.

வந்தன. என்னை அறியாமலே, 'ஹோ!' என்ற அலறல் என் வாயிலிருந்து எழுந்தது. என்றாலும் அந்த இடத்திலேயே வேரூன்றி விட்டதுபோல் நான் நின்று கொண்டிருந்தேன். கனவுகளே இப்படித்தான். நான் கனவே காண்பதாய் நினைத்தேன்.

என்னவோ ஏதோ என்று உளறியடித்துக்கொண்டு பாப் என்னிடம் ஓடிவந்தான். "இதென்ன கூச்சல்! நிம்மதியாய் ஒரு கணம் தூங்குவோம் என்றால் விடமாட்டேன் என்கிறாயே!" என்று கோபத்தோடு என்னைக் கேட்டான்.

அப்போது நான் கண்டதை அவனும் கண்டான். அது உண்மையாயிராது என்றே அவனும் என்னைப்போல் சந்தேகப்பட்டான்.

"என்னவோ கண்கள் மாதிரி தோன்றுகின்றன. ஆனால் இவை கண்களாயிருக்க முடியாது. இவ்வளவு பெரிய கண்கள் எந்தப் பிராணிக்கும் இல்லை. பிரகாசமான பாஸ்பரஸ் உடலைப் பெற்ற பிளாங்டன் என்ற கடற்பாசியே இவை. நீர் மட்டத்துக்கு மேலே இவை மிதந்து கொண்டிருக்கின்றன" என்றான்.

"நீ ஒரு முட்டாள்! கடற்பாசி வட்ட வளையமாக நீந்துவதில்லை. இவை கண்களே; சந்தேகமில்லை. ஏ அப்பாடா! எவ்வளவு பெரிய குதிர் வாய் மாதிரி இருக்கின்றன இவை!" என்றேன் நான்.

இந்தச் சமயத்தில் தள்ளாடி நீரில் விழுந்து விடுவேன் போல் என் உடம்பு நடுங்கியது. நான் சட்டென்று பின்னால் நகர்ந்தேன். "இதோ பார்! அது வருகிறது!" என்று கத்தினேன்.

அந்தப் பிராணி எங்களுக்கு ஒன்றிரண்டு அடி தூரத்தில் வந்து விட்டது. அது அசைந்து அசைந்து வந்ததால் டன் கணக்கில் தண்ணீர் சிதறிக் கரையிலே விழுந்தது. பிரமாண்டமான கருநாகங்கள் போல் வளைந்து வளைந்து என்னவோ அங்கங்கள் நீர்மட்டத்துக்கு மேலே எழும்பிப் பிறகு நீரிலே மூழ்கின.

"இது ஸ்க்விட் என்ற ஒரு வகை ராட்சச நீர்ச் சிலந்தி!" என்று பாப் கத்தினான்.

அதை இன்னும் சற்று நன்றாய்ப் பார்க்க வேண்டும் என்று எண்ணி நெருங்கிச் சென்றான். திடீரென்று பாம்புபோல் அதன் கை ஒன்று வெளியே கிளம்பி அவனைப் பிடிக்க வந்தது. ஒரு கணம் தப்பினால் அவன் அகப்பட்டுக்கொண்டிருப்பான். சமயத்தில் சட்டென்று துள்ளிப் பின்னே நகர்ந்துகொண்டான். ஆயினும் எங்கள் இருவர் உடம்பின்மீதும் மழைபோல் ஏதோ நீரை அது வீசியது.

"கடல்நீரை வாரி அடிக்கிறது" என்றேன் நான்.

"இல்லை. மசியைப் பீச்சுகிறது. நம் உடல் முழுதும் மசியாகிவிட்டது. இந்த மசி உன் விழியில் பட விடாதே" என்றான் பாப்.

அதன் கைக்கு எட்டாத தூரத்துக்கு நாங்கள் நகர்ந்தோம். "அதனால்தான் இதைப் பேனா-மசி-மீன் என்கிறார்களோ?" என்று நான் சொன்னேன்.

"ஆமாம். சரியான மசி. இதைக் கொண்டு எழுதலாம். இந்தியன் இங்கி மாதிரி இருக்கிறது. கடல் பிரயாண ஆராய்ச்சிக்காரர் ஒருவர், தம் நோட்டு ஒன்றில் இந்த மீன் மசியைக் கொண்டே ஒரு பக்கம் எழுதிவிட்டார். அது எனக்கு ஞாபகம் இருக்கிறது."

நீர்த்தேக்கத்தை ராட்சச நீர்ச் சிலந்தி ஒரு கலக்குக் கலக்கியது. "நம்மைத் தூக்கிப் பிடிக்க வருகிறதோ ஒரு வேளை!" என்று கவலையோடு சொன்னேன்.

"இது தரைக்கு வருமா? அதெல்லாம் வராது" என்றான் பாப்.

"போகட்டும். தப்பித்துக் கொள்ள விரும்பிக் கடலுக்குத்தான் திரும்பித் தொலையாதோ?"

"சுலபமாய்த் திரும்பிப் போகலாம். ஆனால் எப்படிப் போவது? வழி தெரிந்தால்தானே! இதன் உடல்தான் வாட்ட சாட்டமாய் வளர்ந்திருக்கிறது. அத்தனைக்கத்தனை புத்தி கிடையாது. முன் ஒரு போதும் இந்த மாதிரி இடத்துக்கு இது வந்தேயிராது. இப்போது வந்து மாட்டிக்கொண்டது. என்ன செய்வதென்று புரியவில்லை."

பிரம்மாண்டமான இதன் பச்சை நிறக் கண்கள் ஒரு கணம் டளிச் சென்றும் மறு கணம் மங்கியும் மாறி மாறிப் பிரகாசித்தன. யாரோ நீருக்குள் இருந்துகொண்டு விளக்குகளைத் தூண்டியும் தணித்தும் வருவதுபோல் அது தோன்றியது. எனக்குத் தேகமெல்லாம் வெட வெட என்று நடுங்கியது. கீழ்வானம் வெளுத்தது. இப்போது அந்த ராட்சசனை நாங்கள் தெளிவாகக் கண்டோம். நீர்த்தேக்கம் முழுவதையும் அதன் உடல் அடைத்துக் கொண்டிருந்தது. இன்னும் சொல்லப் போனால் அதன் பாம்புக் கால்களுக்கு நீர்த்தேக்கத்தில் இடமில்லை. அந்தக் கால்கள் நாற்புறப் பாறைச் சுவர்களிலே போய்ச் சுருண்டு முடங்கிக் கிடந்தன.

அதன் உடல் டார்ப்பிடோ என்ற குண்டின் உருவம்போல் இருந்தது. நிறம் பச்சோந்தி மாதிரி கறுப்பு, கரும்பழுப்பு, செம்பழுப்பு, மங்கல் வெளுப்பு இப்படிப் பல விதமாக மாறிக்கொண்டிருந்தது.

ஜாதியடி அளவுகோலால் ஓரடி அகலம் இருந்தன கண்கள். அவை இரவில் இருந்ததைவிட இப்போது இன்னும் பயங்கரமாக இருந்தன. பச்சைநிறமான பாஸ்பரஸ் பிரகாசம் அவைகளிலிருந்து இப்போது மங்கிவிட்டது அவை கன்னங்கரேல் எனக் கறுத்து, இரண்டு பெருங்குகை வாயில்கள் போல் தோன்றின. 'இந்தக் குகைகளிலிருந்து என்ன கிளம்புமோ!' என்று எனக்குத் திகில் உண்டாயிற்று. மூர்க்கத்தனமாய் அவை எங்களையே உறுத்துப் பார்த்துக்கொண்டிருந்தன. ஈரஇரக்கத்தின் சாயையே தென்படாத அந்த இமையா நாட்டத்துக்கு முன்னே 'நாங்கள் எவ்வளவு அற்பமானவர்கள்!' என்று தோன்றியது.

"பஸிபிக் பிசாசு என்று இதற்குப் பெயர் வைத்தானே ஒருத்தன்; சரியான பெயர்" என்றான் பாப்.

தேக்கத்தின் தண்ணீர் முற்றும் வடியவில்லை. ஆயினும் பெரிதும் வடிந்துவிட்டது. சிறிது தண்ணீர் தான் மிச்சம் இருந்தது. தண்ணீர் பொங்கிப் பெருகி வந்திருந்தபோது நீர்ச்சிலந்தி சுலபமாய் வெளியேறியிருக்கலாம். புத்தியற்ற அது தனக்கு நேரக்கூடிய ஆபத்தை அறியாமல் அப்போதெல்லாம் சொகுசாய்ப் படுத்திருந்துவிட்டது. இப்போது நாற்புறமும் சூழ்ந்த பாறைச் சுவரை விட்டு அதனால் நகர முடியவில்லை. சிறைக்குள் அடைபட்ட கைதி ஆகிவிட்டது.

ஆத்திரங்கொண்ட அந்தக் கைதி உமிழ்ந்த கருமசியால் தேக்கத்தின் நீர் முழுதும் கறுத்துவிட்டது. சற்று நேரத்துக்கொருதரம் தேக்கத்தின் நீர் அத்தனையையும் தன்னிடம்

சிலந்தி இழுத்துக்கொண்டு வீச முயன்றது. ஆனால், அது பலிக்க வில்லை. பாறைச் சுவரில் அதன் உடல் மோதியதுதான் மிச்சம்.

சூரியன் உதித்து மெல்ல மெல்ல எழுந்தது. வெயில் படப்படச் சிலந்தி அரக்கனின் சினம் பொங்கியது. ஆர்க்டிக் அல்லது அண்டார்க்டிக் பிரதேசக் குளிர்தான் அதற்குப் பிடிக்கும். அண்டார்க்டிக் பிரதேசத்திலிருந்து கிளம்பும் ஹம்போல்ட் கரண்ட் என்ற நீரோட்டத்தோடு உஷ்ணப்பிரதேசக் கடல்களுக்கு அது செல்லும். ஏனென்றால் அந்த நீரோட்டம் குளிர்ச்சியாகவே இருக்கும். குளிர்ந்த நீரோட்டத்துக்குள்ளேயே பகலெல்லாம் அமுங்கிக் கிடக்கும். சூரியன் அஸ்தமித்ததும் ஜலமட்டத்துக்கு மேலே வந்து மிதக்கும். மறுபடியும் சூரியன் உதித்ததோ இல்லையோ, நீருக்குள் மூழ்கிவிடும். சூரியனைக் கண்டால் அதற்கு மகாவெறுப்பு.

எங்கள் நீர்த்தேக்கத்தில் வெயில் வரவரத் தகிக்கத் தொடங்கியதும், எங்கள் சிலந்தி அரக்கன் வெறி பிடித்தது போல் தன் பாம்புக்கால்களால் நாற்புறமும் பாறைகளை வீறத் தொடங்கியது. கால்களில் ரம்பம் போல் அமைந்திருந்த கூர்மையான பற்கள் பட்டுப் பாறைகளில் கீற்று விழுந்தன.

திடீரென்று சிலந்தி அரக்கன் ஒரு முக்கு முக்கி ஆறடி தூரம் முன்புறம் பாய்ந்தது. அதே சமயம் தன் பாம்புக்கால்களில் ஒன்றை வெளியே நீட்டியது. நான் அதற்கு எட்டாத தூரத்தில் பத்திரமாக நகர்ந்துகொண்டேன். நண்பன் பாப் தப்பித்தோட முயன்றபோது என்னவோ இடறித் தரையில் விழுந்துவிட்டான்.

அவ்வளவுதான்; அந்தக் கணமே அரக்கனின் பாம்புக்கால் என் நண்பனின் இடையில் சுற்றி முறுக்கிக்கொண்டது. அந்தக் காலின் ரம்பப் பற்கள் அவன் சட்டையைப் பொத்துவிட்டன. நான் பாறாங்கல் ஒன்றை எடுத்து, அரக்கனின் காலை அடி அடியென்று அடித்தபடி, "மாய்! மாய்!" என்று கூச்சலிட்டேன்.

நண்பனைப் பாம்புக்கால் அரக்கனின் வாயை நோக்கி இழுத்தது. பிரம்மாண்டமான கழுகு மூக்குப் போல் இருந்தது, அந்த வாய். அது 'ஆ' என்று பிளந்தது. அதில் ரம்ப முனை போல் முன்னும் பின்னும் வளைந்துவரிசையாய் நிற்கும் பற்கள்.

பாப் தன் முழு வலிமையையும் செலுத்திப் பாறையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். பயனில்லை. மலைப்பாம்பு போல் அநாயாசமாய் அவனைச் சிலந்தியின் கால் பிடித்திழுத்தது.

நாங்கள் நீர்த் தேக்கத்துக்கு வந்தபோது கூடாரத்திலே கதவைச் சாத்தி மாய் படுத்திருந்தான். அவனுக்கு ஒன்றுதான் நல்ல கால். அதையும் இரு கைகளையும் ஊன்றி, சூம்பிய மறுகால் பின்புறம் தொங்கலாட, அவன் மெல்ல மெல்ல ஊர்ந்து வந்தான்.

"ஓடி வா, மாய்" என்று நான் கத்தினேன். இந்த விஷயத்தில் என்ன செய்வதென்று அந்தப் போலினீஷியாக் காரனுக்குத் தெரிந்திருக்கும் என்று எனக்கு என்னவோ ஒரு நம்பிக்கை.

என் கையிலிருந்த பாறாங்கல்லைச் சிலந்தி அரக்கனின் கால்மீது வீசி அடித்தேன். அந்த அடியை அது சட்டை செய்யவேயில்லை. இதன் பின்பு நண்பன் பாப்பின் இரு கால்களையும் பிடித்

துக்கொண்டேன். குத்துக் கல் போல்நின்ற ஒரு பாறையை உதைத்துக்கொண்டேன்; நண்பனைப் பல மாசப் பற்றியிழுத்தேன்; நண்பனும் என்னோடு சேர்ந்து முண்டிப் பார்த்தான். எங்கள் இருவர் பலமும், குத்துக் கல்லின் முட்டும் அந்த அரக்கனின் பலத்துக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. 'ஆ' என்று அங்காந்திருக்கும் அரக்கனின் வாய்க்குச் சில அடி தூரத்தில் நெருங்கிவிட்டான் பாப். சுரு மீனின் தலையையே நொறுக்கி விடக்கூடியது அந்த வாய்; மனிதனின் மண்டையை நொறுக்குவதென்ன அதற்குப் பிரமாதமா?

"பார்! இதோ பார்!" என்று கூச்சலிட்டான் பாப்.

இன்னொரு பாம்புக் கால் இப்போது வெளியே நீண்டு, என்னைத் துழாவிப் பிடிக்க முயன்றது. நான் அதற்கு அகப்படாமல் நெளிந்து ஒரு பக்கம் நகர்ந்தேன்.

கடைசியாக மாய் வந்து சேர்ந்தான். பெரிய பாறாங்கல்லாகப் பார்த்து ஒன்றைப் பொறுக்கி எடுத்துக்கொண்டான். பிறகு எழுந்து ஒற்றைக் கால்மீது 'பாலன்ஸ்' செய்தபடி நின்றுகொண்டான். ஈட்டி எறிவது, வில்வளைத்து அம்பெய்வது, கல் வீசுவது இந்த மூன்றிலும் அவனுக்குக் குறி தவறாது. இவைகளில் அவனுக்கு வெகுநாளைப் பழக்கம்.

மாய் எறிந்த பாறாங்கல் வெகு கணக்காகப் பாய்ந்தது; 'ஆ' என்று காத்திருந்த சிலந்தி அரக்கனின் வாய்க்குள்ளே 'சப்' என்று புகுந்தது. அதை அரக்கனால் கக்க முடியவில்லை. கல் அவ்வளவு கச்சிதமாக அரக்கனின் பற்களில் மாட்டிக்கொண்டது.

வாய் நிறையக் கல் அடைத்திருக்கும்போது, மனிதனைப் பட்சணம் செய்யும் யோசனையை அரக்கன் கைவிடவேண்டியதாயிற்று. ஆயினும் இந்த நரர்களைத் தண்டிக்காது விடலாமா? உடனே தன் பாம்புக் காலால் எங்களை அடிக்கத் தொடங்கியது.

"சீக்கிரம்! சீக்கிரம்! இந்தக் கட்டையை ஒரு கை பிடியுங்கள்" என்றான் மாய்.

நண்பனின் கால்களை விட்டு விட்டு, மாய்க்கு ஒத்தாசை புரியச் சென்றேன். அவனும் நானும் ஒரு தென்னமரத் துண்டைத் தூக்கிக் கொண்டோம்.

"அவ்வளவுதான்! இனி இதைக் கொண்டு போய் அதன் கண்களிலே யொத்த வேண்டும்" என்றான். இருவரும் ஓடினோம். மாய் தன் கால்வலியைக் கூடப் பாராட்டவில்லை. தென்ன மரத்துண்டைப் பலமாய் அரக்கனின் கண்களில் பாய்ச்சினான்.

அரக்கன் மகாவேதனையோடு தன் பாம்புக் கால்களைப் பளார் என்று மேலே வீசியது. நண்பன் பாப் அலாக்காக ஆகாயத்தில் பத்தடி உயரம் எழும்பிப் பாறைமீது விழுந்தான். சாகும் பாம்பைப் போலவே அரக்கனின் கால்களும் நெளிந்து முறுக்கிக்கொண்டன. கடைசியில் அவை உயிரற்றுச் சவமாய்க் கிடந்தன.

நண்பனுக்கு ஒத்தாசை புரிய நாங்கள் திரும்பினோம். இதற்குள்ளே பாப் தானாகவே எழுந்து நின்றான். ஆனால் அவன் கால்கள் மட்டும் நிலை கொள்ளாமல் தள்ளாடின. அவன் உடம்பெங்கும் பல காயங்கள் பட்டு, ரத்தம் வழிந்தது. என்றாலும், அவன் உயிர் தப்பிப் பிழைத்தானே; அது போதும் எங்களுக்கு.

விசித்திரப் பந்தாட்டம்

சார்லஸ் டபிள்யு தாயேர்

துபாஷியின் குறும்பினால் என்ன விபரீதம் நிகழ முடியும் என்பதற்கு இது ஓர் உதாரணம். புல்லிட் என்ற பிரபல அமெரிக்க ராஜதந்திரிக்கு ருஷியாவில் துபாஷி வேலை பார்த்தவர் இந்தக் கட்டுரையாளர். தம் குறும்பு ஒன்றைத் தாமே நகைச்சுவை ததும்ப ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்.

அது ஜோரான விருந்து. மாஸ்கோ பாணியில் நடந்தது. வெயிட்டர்கள் குறுக்கும் நெடுக்கும் ஓடி, விருந்தாளிகளுக்கு டம்ளர்களில் ஐந்தாறு வகையான வோட்கா, சாம்பேன், விஸ்கி ஆகிய மதுபானங்களை ஊற்றிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள்.

எனக்குத் துபாஷி வேலை. அமெரிக்க ஸ்தானிகர் புல்லிட், ஸோவியத் யுத்த மந்திரி வாரஷிலாவ் இருவருக்கும் நடுவே ஒரு சிறு நாற்காலியில் நான் உட்கார்ந்துகொண்டிருந்தேன்.

துபாஷி வேலை பார்ப்பவன் இந்த மாதிரி விருந்தில் ஒன்றும் தின்ன முடியாது. ஒரு டம்ளா பானத்தை வேண்டுமானால் இடையிடையே குடிக்கலாம். 'ஏனடா இந்த வேலையில் மாட்டிக்கொண்டோம்? மையர் கோட்டையில் ராணுவ உத்தியோகஸ்தனாகவே இருந்துகொண்டிருந்தால், குஷியாயிருக்குமே; போலோ விளையாடிக்கொண்டிருக்கலாமே' என்று எண்ணினேன்.

சட்டென்று ஒரு யோசனை உதித்தது: இங்கேயுந்தான் ஏன் போலோ ஆடக் கூடாது?

“சிறந்த கோடை வாசஸ்தலம் ருஷியாவில் எங்கே இருக்கிறது? மந்திரியைக் கேள்” என்றார் ஸ்தானிகர்.

நான் மொழிபெயர்க்கத் தொடங்கினேன்: “உங்கள் ஸோவியத் யூனியனில் ஏன் போலோ விளையாடுவதில்லை? ஸ்தானிகர் கேட்கிறார்.” ஏன்தான் இப்படி மொழிபெயர்த்தேனோ, எனக்கே தெரியாது.

மந்திரி: போலோவா? அப்படியென்றால் என்ன?

ஸ்தானிகரை நோக்கித் திரும்பினேன். “ஸோவியத் யூனியன் எங்குமே பல நல்ல கோடை வாசஸ்தலங்கள் இருக்கின்றனவாம்.”

ஸ்தானிகர்: இவருக்கு எது மிகவும் பிடித்தமாம்?

நான்: (ருஷிய மொழியில்) குதிரைமீது சவாரி செய்தபடி ஆடுவது போலோ. குதிரை வீரர்களுக்கு அது சிறந்த பயிற்சி.

மந்திரி: அதை எப்படி விளையாடுவது?

நான்: (ஆங்கிலத்தில்) சகல ஸ்தலங்களும் இவருக்குப் பிடிக்குமாம்.

ஸ்தானிகர்: காகேஸஸ், கிரிமியா இரண்டில் ஒன்றுக்கு இவர் போவதுண்டா? கேள்.

நான்: (ருஷிய மொழியில்) நாலு நாலு பேர் சேர்ந்த இரண்டு கட்சிகள் ஆடும். ஒவ்வொருவரிடமும்

நீண்ட தடுப்பு இருக்கும். அதைக் கொண்டு ஒரு சிறு மரப்பந்தை அடிப்பார்கள்.

மந்திரி: ரொம்பத் தமாஷான விளையாட்டுத்தான்போல் இருக்கிறது.

நான்: (ஆங்கிலத்தில்) உண்டாம்.

ஸ்தானிகர்: எந்த மாதத்தில்?

நான்: (ருஷிய மொழியில்) ஸ்தானிகரும் நானும் அதை ஆட உங்களுக்குச் சொல்லித் தருகிறோம்.

மந்திரி: சரி; நாங்கள் தயார்.

நான்: (ஆங்கிலத்தில்) எந்த மாதத்திலும் போகலாமாம். ஆனால் செஞ்சேனைக்கு நீங்கள் போலோ ஆடச்சொல்லித் தருவீர்களா என்று கேட்கிறார்.

ஸ்தானிகர் திடுக்கிட்டு, "என்ன! போலோவா? நான் சொல்லித் தருவதா? நான் போலோ ஆடி நாற்பது வருஷமாச்சே!" என்றார்.

நான்: (ருஷிய மொழியில்) தமக்கு வயசாகிவிட்டதால் தாம் ஆட முடியாதென்கிறார்: ஆனால் ரெபரி வேலை பார்ப்பாராம்.

ஸ்தானிகர்: பேஷாய்ப் போச்சு. அவர் ரெபரி; நீ சொல்லித் தா.

நான்: (ஆங்கிலத்தில்) நீங்கள் ரெபரியாக இருந்தால் போதுமாம். நான் சொல்லித்தர வேண்டுமாம்.

ஸ்தானிகர் என்னைச் சீறினார்: "என்ன இதெல்லாம்? போலோ வாவது, பண்ணுங்கட்டியாவது! அது எப்படி இந்தப் பேச்சிலே நுழைந்தது? நீ என்ன மொழிபெயர்த்தாய்?"

எனக்குச் சிறிது நாக்குழறியது: "மன்னிக்கவேணும், ஸார். பேச்சு எப்படியோ தடம் மாறிவிட்டது."

ஸ்தானிகரின் கோபம் அடங்கியது. அவர் சிரித்துக்கொண்டே, "விளையாட்டுக்கு வேண்டிய பொருள் எல்லாம் தருவிக்கிறோம்: அவை வந்ததும் புறப்படுவோம். இதை மந்திரியிடம் சொல்லு" என்றார்.

லண்டனில் உள்ள ஒரு நண்பருக்கு அன்றிரவே தந்தி கொடுத்தேன். ஒரு பெரிய பெட்டியில் போலோ தடுப்புகளும் பந்துகளும் வெகு சீக்கிரம் வந்து சேர்ந்தன.

சில தினங்களில் ஸ்தானிகரும் நானும் எங்கள் கடமையை ஏற்கத் தயாரானோம். முதல் ஸோவியத் போலோ பரீட்சைக்கு மாஸ்கோ பட்டாளத்திலிருந்து ஒரு குதிரைப் படையைப் பொறுக்கினார்கள்.

மாஸ்கோ நதி அருகே பரந்த வெளி ஒன்றுக்குப் போய்ச் சேர்ந்தோம்.

ஸ்தானிகரும் நானும் போலோ பந்தைப் பல விதங்களில் அடித்துக் காட்டினோம். ஸோவியத் குதிரை வீரர்கள் வெகு மரியாதையாகக் கவனித்துக்கொண்டிருந்தார்கள்.

பிறகு ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பந்தும் தடுப்பும் கொடுத்து, தாங்களே அடித்துப் பார்க்கச் சொன்னோம். அவர்கள் அத்தனை பேரும் சிறந்த குதிரை வீரர்கள். சில நிமிஷ நேரத்தில் பந்துகள் சகல திசைகளிலும் பறந்தன. ஒரு பந்து ஸ்தானிகரின் முழங்காலைப் பட்டென்று வந்து தாக்கியதும், "சரி; போதும். இவர்களுக்கு நல்ல பயிற்சி ஏற்பட்டுவிட்டது" என்று அவர் ஒப்புக்கொண்டார்.

ஒவ்வொன்றிலும் பத்துப் பேர் கொண்ட இரண்டு கோஷ்டிகளாக வீரர்களை ஸ்தானிகர் பிரித்தார். ஒரு கோஷ்டிக்கு சர்ச் கோபுரத்தைக் காட்டி அந்தத் திசையில் பந்தை அடிக்கச் சொன்னார். மறு கோஷ்டிக்கு ஒரு தொழிற்சாலையின் புகைக் கூண்டைக் காட்டினார்.

"ஆனால், நதிக்கரை வந்ததும் நின்றுவிடுங்கள். அதற்குமேல் போகவேண்டாம்" என்று அவர்களை எச்சரித்தார். ஆட்ட விதிகளை எல்லாருக்கும் விளக்கினார். "ஊதலை நான் ஊதினேனோ இல்லையோ, ஆட்டம் முடிந்தது" என்று தெரிவித்தார். இதையெல்லாம் நான் மொழிபெயர்த்துச் சொன்னேன். ஆனால், அவர்கள் ஒன்றையும் புரிந்துகொண்டதாக எனக்குத் தோன்றவில்லை.

பிறகு அவர்கள் பிரமிப்புடன் ஸ்தானிகரை நோக்கி நின்றுகொண்டார்கள். பந்தை அவர் இரண்டு கோஷ்டிகளுக்கும் இடையே எறிந்தார். தமாஷா ஆரம்பமாகிவிட்டது.

நூறு குளம்படிகளுக்கும் இருபது துடிப்புகளுக்கும் நடுவிலே பந்து பறந்தது. சற்று நேரம் ஒரே மௌனம். பிறகு ஓர் உறுமல் கேட்டது. எவன்மீதோ மற்றொருவனின் தடுப்புப் பட்டது. பந்துக்காகப் போராட்டம் பல நிமிஷம் நடந்தது. பிறகு எல்லா வீரர்களும் வெறிகொண்டதுபோல அதைத் துரத்தினார்கள். எல்லார் கவனமும் பந்தின் மீதே பதிந்தது. வீரர்கள் ஒழுங்கு மீறினால் எச்சரித்துக்கொண்டே, அவர்கள் பக்கத்திலே ஸ்தானிகரும் ஒரு குதிரைமீது ஓடினார்.

சின்னஞ் சிறு மங்கோலியன் ஒருவனுக்குத்தான் மற்ற எல்லாரையும் விட வெகு குஷி. எல்லாரும் ஓரிடத்தில் பந்துக்குப் போராடிக்கொண்டிருந்தபோது, அவன் தன் குதிரையை எல்லாருக்கும் எதிரே கொண்டுபோய் நேர்க்கோணமாக நிறுத்திக்கொண்டான். 'ஹோ' என்று வீரிட்டான். ஒரு வேளை மற்றவர் பயந்து வழிவிலகிச் செல்வார்கள் என்று நினைத்தானோ என்னவோ! ஆனால் யாரும் விலகவில்லை. அம்பு போல் வந்துகொண்டிருந்தார்கள். மூன்று குதிரைகள் அதிவேகமாய் ஒன்றை ஒன்று மோதித் தள்ளிக்கொண்டு வந்தன. வேதனை ஓலம் ஒன்று கேட்டது. மங்கோலியனின் குதிரை தள்ளாடி விழுந்தது. வேறு இரண்டு குதிரைகள் அதன்மேல் இடறி விழுந்தன. பந்து பறந்தது. மீதி வீரர்களெல்லாம் மூர்க்க வெறியோடு அதைத் துரத்தினார்கள்.

"இது ஒழுங்கல்ல; தவறு. கொலை, கொலை" என்று ஸ்தானிகர் கத்தினார்.

ஸ்தானிகரும் நானும் அருகே செல்லுமுன்பே மூன்று குதிரைகளும் எழுந்தன. அவைகளில் சவாரி செய்த வீரர்களும் எழுந்தார்கள். அந்தச் சிறு மங்கோலியனின் தலையிலே காயம். அங்கி கிழிந்து சல்லடையாய்ப் பொத்திருந்தது. என்றாலும் அவன் அடுத்த கணத்தில் குதிரைமீது தாவி அமர்ந்து, அதை 'காலப்'பில் தட்டி விட்டான். இன்னும் தொண்டை கிழிய வீரிட்டுக்கொண்டேதான் சென்றான்.

பதினைந்து நிமிஷம் ஆயிற்று. "போதும். ஆட்டத்தை நிறுத்துங்கள்" என்று ஸ்தானிகர் கத்தினார்; ஊதலையும் ஊதினார். ஆனால் யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. பந்தைத் துரத்திக்கொண்டும் போராடிக்கொண்டும் ஓடினார்கள். ஸ்தானிகர் மறுபடியும் ஊதினார். பல வீரர்கள் அவரை முறைத்துப் பார்த்தார்கள். சிலர் அவரைநோக்கிப் புன்முறுவல் பூத்தார்கள். ஆட்டத்தை மட்டும் நிறுத்தவில்லை.

"நான் ஊதினால் ஆட்டத்தை நிறுத்த வேண்டும் என்று அவர்களுக்கு நீ சொல்லவில்லையா?"

என்று ஸ்தானிகர் என்னைக் கோபமாயக் கேட்டார்.

"சொல்லித்தான் இருப்பேன். ஞாபகம் இல்லை."

"சொன்னாயா, இல்லையா?"

"ஒரு வேளை விட்டிருப்பேனோ என்னவோ, மன்னிக்க வேணும்."

"அப்படியா! அப்படியானால் அவர்களை நீயே நிறுத்து. இல்லையோ, வலிப்பு வந்து அவர்கள் சாவார்கள்; அல்லது குதிரைகள் செத்துவிடும்."

எனக்கோ ஒன்றும் புரியவில்லை. அரை மைல் தூரம் ஒரே புழுதி மயமாக இருந்த மைதானத்தை வெறித்துப் பார்த்தேன். "முயன்று பார்க்கிறேன்" என்று முணுமுணுத்தேன்.

"நில்லுங்கள்! நில்லுங்கள்!" என்று கத்தினேன்.

இரண்டொரு வீரர்கள் என்னைப் பார்த்தக் குறும்புச் சிரிப்புச் சிரித்துவிட்டுப் பந்தைத் தொடர்ந்தார்கள்.

மிஞ்சிக் கிடந்த ஒரு தடுப்பை எடுத்துக்கொண்டு நானும் அவர்களுடைய போராட்டத்தில் கலந்துகொண்டு அதை நிறுத்தத் தீர்மானித்தேன். பந்துக்கு நேர்க்கோணத்தில் போய் நின்றுகொண்டேன். பந்து கிட்ட வந்ததும் அதை அடித்தேன். பந்து எழும்பிப் பறந்து நூறு கஜதூரத்தில் போய் விழுந்தது.

"நிறுத்துங்கள்! ஆட்டத்தை நிறுத்துங்கள்!" என்று கத்திக்கொண்டே பந்தைப் பின் தொடர்ந்தேன்.

இன்னும் சில நூறு கஜ தூரத்தில் ஆறு இருந்தது. பந்தை அதில் கொண்டு போய்த் தள்ளிவிட்டால் ஆட்டம் நின்றுவிடும் என்று எண்ணினேன்.

ஆனால் வீரர்கள் என்னை முந்திக்கொண்டு, பந்தை அடித்துவிட்டார்கள். மீண்டும் உறால் மலிந்தது. குதிரைகளுக்கெல்லாம் வாயில் நுரை தள்ளியது. ஒரே புழுதி.

இந்த நிலையில் மறுபடியும் பந்தை எட்டிவிட்டேன். மகா ஆவேசமாய் அதை அடித்தேன். அப்பாடா! சளுக் என்ற சப்தத்துடன் மாஸ்கோ நதியில் பந்து போய் விழுந்தது.

குதிரைகளை இழுத்து நிறுத்தி ஆனந்தப் பெருமூச்சு விட்டேன்.

எனக்குப் பின்னால் வீரர் கூட்டம் வந்து நின்றது. வீரர்கள் திகைப்புடன் முதலில் என்னை விழித்துப் பார்த்தார்கள்; அப்புறம் ஆற்றைப் பார்த்தார்கள். பிறகு ஒரு வீரன் தன் குதிரையை ஒரு தட்டுத் தட்டிவிட்டு, அப்படியே 'தொபீர்' என்று ஆற்றில் குதித்தான். ஒரு கணம் நீரில் முழுகி எப்படியோ பந்தைத் துழாவிப் பிடித்துக் கரைமேல் வீசினான்.

உடனே வீரர்கூட்டம் ஆரவாரத்தோடு பந்தை மீண்டும் துரத்தத் தொடங்கியது. இனிமேல் 'என் செயலால் ஆவது யாதொன்றுமில்லை' என்று நான் ஓய்ந்து நின்றேன்.

என்றாலும், அடுத்த தடவை கூட்டத்தைவிட்டுப் பந்து வெளியே வந்தபோது, நான் பாய்ந்தோடி அதை அடிக்கப் போனேன். என் கால் தவறிக் குதிரையிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். வீரர் கூட்டம் திமிதிமி என்று என்னைச் சூழ்ந்துவிட்டது.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு ஸ்தானிகர் உள்ளே வந்தபோது, பந்துக்கு மேலே குப்புறப் படுத்து அதை அணைத்துக்கொண்டிருந்தேன். வீரர்கள் சற்று விலகிய தம் தலை நிமிர்ந்து, "போதும். நிறுத்துவதாக வாக்களியுங்கள்" என்று

பெருமூச்சுடன் அவர்களை வேண்டிக்கொண்டேன்.

இந்தச் சமயத்தில் அவர்களுடைய கமாண்டர் தம் கூடாரத்திலிருந்து வெளியே வந்து பார்த்தார். சட்டை கிழிந்தவர்களும், காயம் பட்டவர்களும், கைக்குட்டையால் கட்டுக் கட்டிக்கொண்டவர்களுமாய் வீரர்கள் நிற்கும் காட்சியைக் கண்டார். ஏதோ உள்நாட்டு ரணகளத்திலிருந்து திரும்பி வந்தவர்கள் மாதிரியே அவர்கள் தோன்றினார்கள்.

அவர்களுக்கெல்லாம் தலைமையில் ஸ்தானிகரும் அவருடைய துபாஷியான நானும் குதிரைமீது அமர்ந்திருந்தோம்.

தந்தை போல் அன்புடன் என்னை நோக்கி, "நான் சொல்லுவதையெல்லாம் மொழிபெயர்ப்பது முதலில் கொஞ்சம் கஷ்டந்தான். பழகப் பழக எல்லாம் சரியாய்ப் போய்விடும்" என்றார் ஸ்தானிகர்.

"அப்படியே முயல்கிறேன்" என்று மிகப் பணிவுடன் நான் பதில் அளித்தேன்.

தேர்தலின்போது-

விஷயங்களின் வாசகத்தையும் அமைப்பையும் திருத்தியும் வெட்டியும் ருசிக்கும்படி செய்வார் எடிட்டர். அதை 'எடிட்டிங்' என்பார்கள். தன் கணவரின் சங்கீதக் கச்சேரியை அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனின் மனைவி இந்த மாதிரி ஒரு முறை எடிட் செய்துவிட்டாள்.

ட்ரூமனுக்குப் பியானோ வாசிக்கத் தெரியும். ஆனால், அதை வெளி மனிதர்கள் யாரும் அதிகமாகக் கேட்டதில்லை. தேர்தலின்போது ஒரு நாள் இரவு கன்ஸாஸ் நகரத்தில் தம் அறையில் உட்கார்ந்து பியானோ வாசித்தபடி, தமக்கு விழுந்த வோட்டுக் கணக்கை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் ட்ரூமன்.

அப்போது ராபர்ட் ஸெயிண்ட் ஜான் என்பவர் வந்து, ட்ரூமனின் மனைவியைக் கண்டு, "அவர் அறைக் கதவைத் திறவுங்கள். அவருடைய சங்கீதத்தை ரேடியோவில் ஒலிபரப்புகிறேன்" என்றார்.

"சரி; சற்றுப் பொறுங்கள்" என்றாள் ஜனாதிபதியின் மனைவி மார்க்காரெட். ட்ரூமன் அப்போது வாசித்துக்கொண்டிருந்த பாட்டில் அவருக்கு மிகவும் பழக்கமான பகுதி வந்ததும், 'டக்' என்று கதவைத் திறந்தாள். அவருக்குத் தட்டுக்கெடக் கூடிய அடுத்த பகுதி வந்தது. 'பட்' என்று கதவைச் சாத்திவிட்டாள். அந்தக் கோரத்தை யாரும் கேட்டுவிடக் கூடாதே என்பதுதான் அவள் கவலை!

குறைமாதக் குழந்தை

எட்மண்ட் கிரிஸ்டாபேர்ஸன்

தாயின் வயிற்றிலே பரிபூர்ண வளர்ச்சி பெறுமுன்பு பிறக்கும் குழந்தையை உயிர் பிழைக்கச் செய்வது பெரிய சிரமம். அதைச் சுலபமாக்குவதற்காகக் கர்ப்பப் பையில் இருப்பதுபோலவே சீதோஷ்ண நிலையுள்ள-ஒரு பெட்டியை அமைத்த ஒரு கனவானைப் பற்றியது இந்த விவரம்.

ஐக்கிய அமெரிக்காவின் வடக்குப் பகுதியில் தொழிற்சாலைகள் மிகுந்த கிளீவ்லாண்டு என்ற பட்டணத்தில் ஒரு கனவான் சிறந்த வேலை ஒன்றில் மிக உற்சாகமாய் ஈடுபட்டிருக்கிறார். குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளைப் பிறந்த சில மாதங்கள் வரையிலும் ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றும் 'குழந்தை அடைகாப்போன்' (பேபி இன்குபேட்டர்) என்ற கருவி தயாரித்துக் கொடுக்கும் வேலைதான் அது.



தாயின் கர்ப்பப் பையைப்போல் சிசுவைப் பாதுகாக்கும் 'அடைகாப்போன்' கருவி

வருஷத்துக்கு வருஷம் டாக்டர்கள் நடத்தும் விழாவில் கார்டன் ஆம்ஸ்டிராங் என்ற அந்தக் கனவான் செய்து வைத்திருக்கும் 'அடைகாப்போ'னைப் பார்க்க ஏராளமான ஜனங்கள் வருவார்கள். பறவைபோல் தோன்றும் குறைமாதச் சிசுக்களைத் தாய்மாதிரி பெருமையுடன் பார்த்துக்கொண்டு அந்தக் கனவான் நின்றுகொண்டிருப்பார். அப்போது குழந்தை டாக்டர்கள் அவரிடம் வந்து குறைமாதத்தில் பிறந்த $2\frac{1}{2}$ பவுண்டு நிறையுள்ள சில குழந்தைகள் அடைகாப்போனின் உதவியால் எப்படி உயிர் பிழைத்தன என்ற செய்தியைக் கூறுவார்கள்.

குழந்தைகளின் பெற்றோரிடமிருந்து தங்கள் நன்றியைத் தெரிவிக்கும் கடிதங்கள் எவ்வளவோ அவருக்கு வருகின்றன. "டாக்டர் ஜென்ஸன் தங்களைப்பற்றி அடிக்கடி சொல்லுவார். தங்கள் பேருதவியால்தான் எங்கள் குழந்தை டிக்கீ உயிர் பிழைத்தான். தங்கள் அடைகாப்போன் இல்லாவிட்டால் அவன்

இப்போது உயிரோடு இருக்க முடியாது. அவனுடைய நிறை இன்று 13 டவுண்டு. நல்ல தெம்பாயும் உற்சாகமாயும் இருக்கிறான். அவனுடைய போட்டோவைத் தங்களுக்கு அனுப்பியிருக்கிறோம். எப்போதாவது தாங்கள் இந்த ஊருக்கு வந்தால் அவசியம் எங்களை வந்து பார்க்கவேண்டும்." இந்த மாதிரி கடிதங்கள் அவருக்குக் கணக்கில்லாமல் வருகின்றன.

இரவு, பகல் எப்போதும் அவருக்கு டெலிபோன் வந்துகொண்டே இருக்கும். 'குறை மாதத்தில் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. உடனே எதாவது செய்து குழந்தையைக் காப்பாற்ற வேண்டும்' என்ற செய்தி வரும். அமெரிக்காவின் கீழ்க் கோடியில் எங்கேயோ ஓர் ஊரில் அல்லது மேற்கில் எங்கேயோ ஓரிடத்திலிருந்து ஒரு டாக்டர் பேசுவார். குறை மாதத்தில், "இப்போதுதான் ஒரு குழந்தை பிறந்திருக்கிறது. அடைகாப்போன் ஒன்று உடனே கிடைக்குமா?" என்று கேட்பார். ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து டெலிபோன் செய்யும் அந்த டாக்டரின் குரலில் குழந்தை உயிரோடு பிறந்த சந்தோஷமும், அந்தக் குழந்தையை உயிரோடு காப்பாற்ற முடியுமா என்ற கவலையும் சேர்ந்து தொனிக்கும். இந்த மாதிரி மிக்க அவசரச் செய்தி ஒன்று வந்தாலும் தனவான் ஆம்ஸ்டிராங் மனம் தளராமல் வேண்டிய ஏற்பாடு செய்வார். அதற்கு ஓர் உதாரணம் இது:

700 மைல்களுக்கு அப்பாலுள்ள அயோவா என்ற நாட்டைச் சேர்ந்த டெனிஸன் என்ற ஊரிலிருந்து ஒரு டாக்டர் சமீபத்தில் தனவான் ஆம்ஸ்டிராங்குக்குப் போன் செய்தார். ஆம்ஸ்டிராங்கு உடனே அவசரமாய் அடைகாப்போன் அனுப்பவேண்டிய செய்தியை எலெக்டிரிக் மணியின் மூலம் தம் ஆபீசுக்குத் தெரிவித்துவிட்டு, "எவ்வளவு சீக்கிரம் உங்களுக்கு அடைகாப்போன் வந்து சேரும் என்பதை இன்னும் ஐந்து நிமிஷத்தில் தெரிவிக்கிறேன்" என்று அந்த டாக்டருக்குத் தைரியம் கூறினார்.

அவர் பேசி முடிவதற்குள் அஸிஸ்டெண்டு ஒருவர் போன் வந்த இடத்தின் பெயரைக் கேட்டறிந்துகொண்டு அது எங்கே இருக்கிறது என்பதைப் படத்தில் பார்த்துக் குறித்துக்கொண்டார். மற்றொருவர் ஏரோப்ளேன் கம்பெனியைக் கூப்பிட்டு, அடைகாப்போன் ஒன்றைத் தங்களிடமிருந்து எடுத்துப் போகும்படி போன் செய்தார். பிறகு அடைகாப்போன் சரியாயிருக்கிறதா என்று கடைசியாக ஒருமுறை நன்றாகப் பார்த்துவிட்டு அதை அனுப்புவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அப்புறம் டெனிஸன் என்ற ஊருக்கு விரைவாய்ப் போய்ச் சேரும் நேரத்தை ஏரோப்ளேன், ரெயில் ஆகியவற்றின் கால அட்டவணைகளில் பார்த்துக் கவனித்துக்கொண்டார். "ஒமஹாவுக்குச் செல்லும் மத்தியான ஏரோப்ளேன் கிடைத்தால் இன்று மாலை அங்கிருந்து டெனிஸன் நகருக்கு ஒரு ரெயில் புறப்படுகிறது. அதில் அனுப்பிவிடலாம். ஆனால் வானிலை எப்படி என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்" என்று ஆம்ஸ்டிராங் கூறினார். வானிலையை அறிவிக்கும் ஆபீசில் விசாரித்தபோது, தற்சமயம் ஆகாயம் மேகமின்றிச் சுத்தமாய் இருப்பதாகவும், மத்தியானம் பப்டப் போட்டாலும் போடலாம் என்றும்

தெரியவந்தது. இருந்தாலும் முயன்று பார்க்கலாம் என்றும் தோன்றியது.

டாக்டர் மில்லரைக் கூப்பிட்டு "எதிர்பாராத தடங்கல் ஒன்றும் நேராவிட்டால் ஓமஹாவிலிருந்து 10-19-க்குக் கிளம்பும் ரெயிலில் அடைகாப்போன் உங்களுக்கு வந்து சேர்ந்துவிடும். போதுமா?" என்று ஆம்ஸ்டிராங் கேட்டார். "பேஷ்! அப்படி வந்தால் போதும். அதுவரையில் வெந்நீர் பாட்டில்கள், போர்வை இவைகளைக் கொண்டு குழந்தையின் உயிரைக் காப்பாற்றிவிடலாம்" என்று டாக்டர் மில்லர் பதில் சொன்னார்.

ஓமஹாவில் வானம் மப்புப் போட்டுக்கொண்டது. அங்கிருந்து கிளம்பும் ரெயிலும் தவறிவிட்டது. இருந்தாலும் குறித்த நேரத்துக்குப் பின் அதிக நேரம் தாமதமாகாமல் அடைகாப்போன் போய்ச் சேர்ந்துவிட்டது. அதில் வைத்துக் குழந்தையைக் காப்பாற்றிவிட்டார்கள்.

ஆயினும் இவ்வளவு அவசரமான செயல்களும் உடனே அனுப்ப வேண்டிய அவசியமும் தினசரி நேருவதில்லை. இரண்டாயிரம் மைல்களுக்கு அப்பால் அலாஸ்கா என்ற இடத்திலிருந்து ஒரு சமயம் அவசரத் தந்தி ஒன்று கிடைத்தது. 24 மணி நேரத்துக்குள் ஓர் அடைகாப்போன் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டது. இதைப்பற்றி ஆம்ஸ்டிராங்கின் ஆபீசில் ஒவ்வொருவரும் பெருமை கொள்கிறார்கள். தெற்கே ப்ளாரிடா மாகாணத்திலுள்ள ஜாக்ஸன்வில் என்ற ஊரிலிருந்து செய்தி கிடைத்து 14 மணி நேரத்துக்குள்ளாகவே அவர்களுக்கு அடைகாப்போன் கிடைத்துவிட்டதாம். மார்க்விஸ் டி அவிடோ என்பவரின் மனைவி குறைமாதத்தில் பிரசவித்துவிட்டாள். உடனே அவர் நியூயார்க்கிலுள்ள பாங்கி ஒன்றில் தமக்கு ஓர் அடைகாப்போன் அனுப்பும்படி கேட்டார். அவர் இருப்பதோ ஸ்பெயின் தேசத்தில் மாட்ரிட் என்ற பட்டணத்தில். ஆனால் 36 மணி நேரத்தில் அவர் கேட்ட பொருள் அவருக்குக் கிடைத்துவிட்டது.

இப்படி ஆம்ஸ்டிராங்கை இரவு பகலாக வாங்கும் இந்தக் குறைப் பிரசவங்கள் நூறுக்கு ஐந்து வீதம் அமெரிக்காவில் நேருகின்றன. இவ்விதம் பிறந்த ஐந்து குழந்தைகளுக்கு ஒன்று வீதம் முன்பெல்லாம் மரணமடைந்தன. இப்போது அந்த மரண விகிதத்தை இந்த 'அடைகாப்போன்' குறைத்து வருகிறது. தன்னிடம் வைத்த சிசுக்களைத் தாயின் கர்ப்பத்தில் இருப்பதுபோல் குறை நாட்களிலும் இது காப்பாற்றுகிறது.

ஆம்ஸ்டிராங் தயாரிக்கும் இந்த அடைகாப்போனை வெள்ளை எனாமல் பூசிய தகட்டினால் செய்கிறார்கள். ரொட்டி வைக்கும் பெட்டியைப்போல் இரண்டு மடங்கு பெரியது. மேற்பக்கத்திலும் முன்பக்கத்திலும் கண்ணாடி போட்டிருக்கிறார்கள். பார்த்தால் கடைகளில் சாமான்களை அலங்காரமாய் வைத்திருக்கும் சிறு கண்ணாடிப் பெட்டி போல் தோன்றும். மின்சார பல்பின் உதவியால் உள்ளே சூடேற்றி எப்போதும் 95 டிகிரி உஷ்ணம் இருக்கும்படி செய்திருக்கிறார்கள். ஒரு குழாய் வழியாய்ப் பிராணவாயு உள்ளே செல்லுகிறது.

ஆம்ஸ்டிராங் தயார் செய்வதற்கு முன்பு இவ்விதம் குறைந்த செலவில் நல்ல உபயோகமான அடை

காப்போன் எங்கும் கிடைக்கவில்லை. டாக்டர்கள் கெட்டிக்காரர்களா யிருந்தால் தாங்களாகவே ஏதோ ஒரு விதமாய் ஒரு பெட்டி தயாரித்து வைத்து இந்தக் குறைமாதக் குழந்தைகளைக் காப்பாற்றி வந்தார்கள். கானடாவில் ஒரு பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் ஐந்து குழந்தைகள் பிறந்தன. ஆச்சரியமுற்ற டாக்டர் ஆலன் ஆர். டாபோ என்பவர் கம்பளியால் சுற்றிய கசாப்புக்காரன் கூடை ஒன்றில் அந்தக் குழந்தைகளைப் படுக்கவைத்தார். பக்கத்தில் ஒரு கணப்பை வைத்துக் கூடைக்குள் தேவையான உஷ்ணம் உண்டாகும்படி செய்தார். சுரங்க வேலை நடக்கும் கொலராடோ மாகாணத்திலுள்ள டெல்லூரிட் என்ற ஊரில் 16 அவுன்ஸ் நிறையுள்ள குறை மாதப் பிள்ளைக் குழந்தை ஒன்றை, டாக்டர் ஒருவர் ஒரு பூட்ஸ் பெட்டியில் வைத்துப் பக்கத்தில் விஸ்கி பாட்டிலில் வெந்நீரை நிரப்பி வைத்தாராம். சில சமயம் ஆஸ்பத்திரிகளில் ஒன்றிரண்டு அடைகாப்போன்கள் தெய்வாதீனமாய் இருந்துவிடும். அப்போது குறைமாதத்தில் பிறந்த குழந்தைகளில் எது எது பிழைக்கும் அதிருஷ்டமுள்ளது என்று பொறுக்கி எடுக்க வேண்டிய சிரமம் டாக்டர்களுக்கு ஏற்பட்டுவிடும்.

இந்த எக்ஸ் - 4 மாடல் அடைகாப்போனைத் தயாரித்த பிறகுதான் இதற்கு முன்பிருந்த மாதிரிகள் வெவ்வளவு கிராக்கியானவை என்பது ஆம்ஸ்டிராங்குக்குத் தெரிந்தது. ஆகவே, இவைகளை டாக்டர்களுக்கு நேரேயே அனுப்பி விலை குறைவாய் விற்கத் தீர்மானித்தார். இதனால் பதினாயிரம் அடைகாப்போன்கள் வாங்கியதில் ஆஸ்பத்திரிகளுக்குப் பணம் மிஞ்சியது.

புதிதாய் ஓரிடத்துக்கு அடைகாப்போன்களை அனுப்பினால் ஆம்ஸ்டிராங் தாமே நேரில் சென்று வாங்கியவர்களுக்கு இவற்றை உபயோகிக்கும் விதத்தைக் கூறுவார். ஏதாவது திருத்தியமைக்க அவசியம் நேர்ந்தால் அதையும் கவனித்துக்கொண்டு வருவார். தெற்கே பிரசவ சிசுபரிபாலன இலாகா ஒன்று 75 அடைகாப்போன்களை வாங்கியது. அப்போது ஆம்ஸ்டிராங்கும் கூடவே சென்றார். வருஷந்தோறும் ஏற்படும் 25,000 குறைப் பிரசவ மரணங்களை எவ்விதம் குறைப்பதென்று அந்த இலாகாவின் டைரக்டர் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது அப்போதுதான் ஆம்ஸ்டிராங்குக்குத் தெரியவந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த 40 நாடுகளில் குறைமாதக் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு இந்த அடைகாப்போன்கள் எவ்வளவு உதவியாயிருக்கின்றன என்பதைப்பற்றி ஆம்ஸ்டிராங் தாமே ஒன்றும் பெருமையடித்துக்கொள்வதில்லை. அவரை நன்றாக அறிந்த பிரபல பிரசவ டாக்டர் ஒருவர் சொல்வது இது: "அவருடைய மலிவான அடைகாப்போன்தான் எங்களுக்கு எவ்வளவோ உபகாரமாயிருக்கிறது." சதா புட்டிகளில் வெந்நீரை நிரப்பி வைத்தும் வேறு பல யுக்திகளைக் கையாண்டும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் டாக்டர்களுக்கும் நர்சுகளுக்கும் இது கொஞ்சம் ஓய்வு அளிக்கிறது. குழந்தைகள் தேறுவதைப்பற்றி இனிமேல் அவர்கள் தங்கள் கவனத்தை அதிகமாய்ச் செலுத்தலாம்.

நியூ ஆர்லீன்ஸ் மாகாணத்தில் உள்ள கல்ப் கோஸ்ட் என்ற பட்டணத்தில் இருக்கும் ஒரு தர்ம ஆஸ்

பத்திரியில் இப்போது 90 அடை காப்போன்கள் இருக்கின்றன. மற்ற இடங்களில் மாதர் சங்கங் களும் வியாபாரிகள் சங்கங்களும் பிறவும் உள்ளூர்ப்பிரசவஆஸ்பத்திரி களுக்காக இந்த அடைகாப்போன் களை வாங்கி வைத்திருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள ஒரு சிறு தொழிற்சாலையிலிருந்து கிடைக்கும் இந்த உதவியைக் காணும்போது தான், குறைமாதத்தில் பிறக்கும் ஆயிரக்கணக்கான சிசுக்களும் சாகா மல் உயிர் வாழ முடியும் என்ற நம்பிக்கை உண்டாகிறது.

முதலாளியின் குணம்

ஹம்ப்ரீ பொகார்ட் என்ற நடிகர், அவர் மனைவி, லாரென் பகால் என்ற நடிகை இந்த மூவரும் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தார்கள். அப்போது கொலம்பியா பிக்சர்வின் தலைவரான ஹாரி கோஹன் அந்தப் பக்கமாய் வந்து, நடிகர் பொகார்ட்டின் காதோடு என்னவோ சொல்லிவிட்டுப் போனார்.

நடிகர் தம் மனைவியை நோக்கி, "நான் நடித்திருக்கும் படம் நல்ல வெற்றி தரும்" என்றார். "அதெப்படி நிச்சயமாய்ச் சொல்லுகிறீர்கள் ?" என்று கேட்டாள் பகால்.

"முதலாளி கோஹன் 'நமது படம்' என்று அதை இப்பொழுது என்னிடம் குறிப்பிட்டார். அது வெற்றிகரமான படம் அல்லவென்றால், இப்படிக் குறிப்பிட்டிருக்கமாட்டார்; 'உன் படம்' என்றே குறிப்பிட்டிருப்பார்" என்றார் நடிகர்.

—லியனார்டு லயான்ஸ்

செலவின் பயன்

பாக்தாது நகரத்தில் ஒரு ஹக்கீம் இருந்தார். அநேக ஜனங்கள் அவரிடம் போய் எதற்கும் ஆலோசனை கேட்பார்கள். யாருக்கும் மறுக்காமல் அவரவர்களுக்குத் தக்க புத்திமதிகளை அவர் சொல்வார். ஆனால் யாரிடமும் பிரதிப் பிரயோஜனமாக ஒன்றும் பெற்றுக்கொள்ள மாட்டார்.

ஒரு நாள் ஒரு வாலிபன் வந்தான். அவன் ஏராளமாகச் செலவழித்தவன். அதிலிருந்து ஒரு பயனும் அடையாதவன். "ஞானியே, நான் இவ்வளவு செலவழிக்கிறேனே; இதற்கெல் லாம் பதிலாக என்ன பொருளைப் பெறலாம்?" என்று கேட்டான்.

"வாங்கி விற்கும் எந்தப் பொருளிலும் வாங்கி விற்க முடி யாத ஓர் அம்சம் இருக்க வேண்டும். அப்படி இராமற்போனால், அந்தப் பொருளுக்கு ஒரு மதிப்பும் இல்லை" என்றார் ஹக்கீம்.

"அப்படியானால் அந்த விலை மதிப்பில்லாத அம்சம என் னவோ?" என்று கேட்டான் வாலிபன்.

ஞானி சொன்னார்: "என் மகனே, சந்தைக்கு வரும் ஒவ் வொரு பொருளிலும், அதை ஆக்கியவனின் கண்ணியமும் நாணயமும் அடங்கியிருக்கும். இதுவே அதன் விலை மதிப்பற்ற அம்சம். எனவே, நீ ஒரு பொருளை வாங்குமுன், அதை ஆக்கிய வனின் பெயரைக் கவனி." —'மெடிக்கல் ஜர்னல் அப்ஸ்ட்ராக்ட்ஸ்'

கார்ட்டூன் கதம்பம்



ஊசிக் காதிலே ஒட்டகம் வருமா?

—'ப்ரீ இந்தியா'



"அடேடே! ஒரு வோட்டுக்கு எத்தனை யாசகர்கள்?"

—'அமிர்தபஜார் பத்திரிகை'



"தொழுவத்திலே படுத்த நாயின் கதையாயிருக்கிறதே ஐ. நா. வில் சீனப் பிரதிநிதி விஷயம்" என்கிருர் பி. என். ராவ்.

—'பிளிட்ஸ்'



"கீழ்நாட்டையும் மேல்நாட்டையும் இணைக்கும் ஒரே பாலம் பணிக்கர்தான்" என்கிறது 'மான்செஸ்டர் கார்டியன்'.

—'சங்கர்ஸ் வீக்லி'

மேல்நாடு, கீழ்நாடு இரண்டின் கலைகளையும் இணைத்து இசைக்கும் அரும் பணி நடத்தும் நாடு துருக்கி.

துருக்கியும் இந்தியாவும்

டாக்டர் காளிதாஸ் நாக்

சமீபத்தில் துருக்கிக்குப் போயிருந்தேன். அதன் புதிய தலைநகரான அங்காராவில் கல்வி மந்திரி காரியாலயத்தில், "அனடோலியாவில் உள்ள எளிய உழவர்கள் முன்னேறினால்தான் புதிய துருக்கிக்கு விமோசனம் உண்டு" என்று கமால் சொன்ன மொழிகளைப் பொன் எழுத்துக்களில் பொறித்திருந்ததைக் கவனித்தேன். இன்று துருக்கியிலுள்ள ஆண், பெண் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அவர் நினைவு அழியாமல் இருக்கிறது. துருக்கியில் ஐரோப்பிய ஆதிக்கம் தலையிடாதபடி விரட்டியடித்தவர் அடாடர்க். நம் மகாத்மாவைப்போலவே ஏழை எளியவர்களின் நலனையே அவரும் முக்கியமாகக் கவனித்தார்.

ஒரு நாள் துருக்கிப் பார்லிமெண்ட் அங்கத்தினரான பேகம் ஹலிடே எடிப் என்ற காவலாசிரியை என்னைத் தம் வீட்டுக்கு அழைத்திருந்தார். ஒரு சமயம் கல்கத்தாவுக்கு வந்திருந்த போது சர்வகலாசாலையில் இவரை வரவேற்று உபசரித்தோம். இந்திய மாதர்களைப்பற்றி இவர் அக்கறையோடு விசாரித்தார். "அவர்கள் முன்னேற டாகுரும் காந்தியுந்தானே ஊக்கம் அளித்தார்கள்? இந்தச் சங்கடமான நிலையில் அவர்கள் உயிரோடு இல்லையே" என்று சொல்லி வருத்தப்பட்டார். துருக்கியின் வெளிநாட்டு மந்திரியாக இருக்கும் டாக்டர் புவாட் குப்ருலு என்பவரைப் போய்ப் பார்த்தேன். அவரோடு சரித்திரம், பழம் பொருள் ஆராய்ச்சி சம்பந்தமாக வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தேன். ஆதி காலத்தில் வாழ்ந்த ஹிட்டைட் ஜாதியாரின் தலைநகராக இருந்த போகாஸ் கோயி என்னும் இடத்துக்குப் போய்ப் பார்க்க வசதி செய்து கொடுத்தார். அங்கே மலைமேலே பனி மூடியிருந்தது; ராணுவ 'ஜீப்' கிடைக்கவே போக முடிந்தது. 1908-இல் ஹ்யூகோ விங்க்ளேர் என்ற ஜெர்மன்காரர் கி. மு. 14-ஆம் நூற்றாண்டுக் கல் வெட்டுக்கள் சிலவற்றை இங்கே கண்டு பிடித்தார். நாங்கள் காலேஜில் படித்துவந்த சமயம் அது. மித்திரன், வருணன், இந்திரன், நாஸத்யர் என்ற அசுவினி குமாரர்கள் இவர்களை இங்கே ஹிட்டைட், மிட்டானி என்ற இரண்டு நாட்டினர் வழிபட்டு வந்தார்கள். இந்த விவரமெல்லாம் நான் இஸ்தாம்புலுக்குப் போகும்போது எனக்கு நினைவு வந்தது.

ஈரானில் இருக்கும் துருக்கித் தூதரிடமிருந்து பல பேருக்கு அறிமுகக் கடிதங்கள் எழுதி எடுத்துக்கொண்டு வந்தேன்.

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 2-12-'51), கல்கத்தா.

அதனால் அங்காரா சர்வகலாசாலையின் டைரக்டரான ஹிக்மெத் பிராண்டு, புரொபஸர் ஸெலால் ஸார்க் முதலியவர்களைப் பார்த்துப் பேசச் சந்தர்ப்பம் வாய்த்தது. 1453-இல் இப்போது இஸ்தாம்புல் என்று வழங்கும் கான்ஸ்டாண்டிநோபிலைத் துருக்கி பிடித்துக் கொண்டது. அதுவரையில் கிழக்கு ரோம சாம்ராஜ்யத்தைச் சேர்ந்திருந்தது இந்த நகரம். பிறகு மேல் நாட்டாருக்கும் கீழ் நாட்டாருக்கும் நெருங்கிப் பழக இடம் ஏற்பட்டது. "இஸ்தாம்புல் ஏற்பட்டு 500 வருஷம் ஆகப் போகிறதே! இந்த மாதிரி விவரங்களையெல்லாம் தொகுத்து ஒரு புஸ்தகம் வெளியிடலாமே" என்று புரொபஸர் ஸெலால் ஸார்க்கிடம் சொன்னபோது என் யோசனையை அவரும் அங்கீகரித்தார். "நீங்கள் இங்கே கொஞ்ச நாள் வந்து தங்கினால் இந்த விஷயத்தில் எவ்வளவோ ஒத்தாசையாக இருக்கும்" என்றார்.

அந்தத் தடவை கீழ்நாட்டு ஆராய்ச்சியாளர் மகாநாடு இஸ்தாம்புலில் கூடுவதாக ஏற்பாடு. அதற்கு என்னை அழைத்திருந்தார்கள். அசந்தர்ப்பம் காரணமாக இந்த அழைப்பை ஏற்க முடியவில்லை. ஆயினும் 'நியூ ஏசியா' என்ற பத்திரிகையில் வெளியான என் திட்டம் ஒன்றை மகாநாட்டில் படிக்கும்படி சொல்லிவிட்டு வந்தேன். 1947-இல் பண்டித ஜவாஹர்லால் முதல் ஆசிய உறவு மகாநாடு கூட்டிய போது இது பிரசுரமாயிற்று. ஆசியாவிலுள்ள அறிஞர்கள் ஐரோப்பியரும் அமெரிக்கரும் எழுதி வெளியிட்ட 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா' போன்ற புத்தகங்களை நம்பி ஆராய்ச்சியில் ஈடுபடக் கூடாது. இவைகளில் நம் கலாசாரம், மதம், பொருளாதாரம், அரசியல் இவைகளைப்பற்றி நேரான தகவல்கள் இருப்பதில்லை. நாமே தெளிவாக விவரங்களைத் தொகுத்து ஒழுங்காக 'என்ஸைக்ளோபீடியா ஏஷியானு' ஒன்று பதிப்பிக்க வேண்டும். ஆசியாவில் பல பாஷைகள் இருப்பதால் அவைகளுக்கேற்றபடி பல லிபிகள் இருப்பது ஒரு விஷயத்தில் சங்கடமாக இருக்கிறது. துருக்கியில் துணிந்து ரோமன் லிபியை எடுத்தாண்டு வழி காட்டி இருப்பதால் இனிமேல் பரவாயில்லை. ரோமன் லிபியிலேயே இப்படி வெளியிடலாம். நடுநடுவே தேவநாகரி, சீனம், அராபிக் இந்த மாதிரி லிபிகளில் அரிய கலைச் சொற்களை வெளியிட வேண்டும்" என்பதே என் கருத்து. இப்போது சீனாவில் நிலைமை சரியாக இல்லை; இல்லாவிட்டால் அங்கிருந்து சில பேர் இந்த விஷயத்தில் ஒத்தாசை செய்ய வந்திருப்பார்கள். நான் சீனாவுக்குப் போயிருந்தபோது வெப்ஸ்டர் அகராதியைச் சீன பாஷையில் பதிப்பித்துக்கொண்டிருந்தார்கள். இப்போது துருக்கியில் நல்ல அச்சு வசதியெல்லாம் இருப்பதால் இந்தியாவுடன் சேர்ந்து இப்படி 40 அல்லது 50 தொகுதிகள் வெளியிடலாம். இதற்காகும் செலவை ஆசியாவில் முற்போக்காகவுள்ள பல வேறு நாடுகளும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; பெரிய மனிதர்கள் யாராவது நன்கொடைகள் கொடுத்துதவவேண்டும்.

1636-இல் பிரெஞ்சு அகாடெமி என்ற சங்கத்தை நிறுவினார்கள். 40 வருஷத்துக்குள் 40 மேதைகள் சேர்ந்து அருமையான பிரெஞ்சுப் பேரகராதி ஒன்று தயாரித்துவிட்டார்கள். சமீபத்தில் நம் நாட்டி

னும் மொழி, இலக்கியம், கலை சம்பந்தமாக இப்படி ஒரு தேசீய அகாடெமி நிறுவியிருப்பதால் இந்த விஷயத்தில் நாமும் அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும்.

இஸ்தாம்புலில் விஞ்ஞான சம்பந்தமான ஆராய்ச்சி அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வருகிறது. இஸ்தாம்புலில் உள்ள பல்தொழில் கழகம் 1883-இல் ஸ்தாபிதமானது. அதைப் பார்க்கப் போயிருந்தபோது அங்கே இருந்த சில புரொபஸர்கள் ஹிந்து வான சாஸ்திரம், வைத்தியம் முதலியவை சம்பந்தமாகச் சமீபத்தில் ஏதாவது புதுப் புஸ்தகம் வெளியாகியிருக்கிறதா என்று ஆவலோடு என்னை விசாரித்தார்கள். இஸ்தாம்புல் பல்கலைக் கழகம் கீழ்நாடு, மேல்நாடு இரண்டின் கலாசாரங்களையும் ஒன்று சேர்த்து இசைக்கும் அரும் பணியைப் புரிந்து வருகிறது.

ஆட்ட நிபுணர்

சீட்டில் பிரிட்ஜ் விளையாடுவதில் மிக்க உற்சாகமுள்ள ஒருவருக்கு ஒரு சமயம் காய்ச்சல் வந்தது. டாக்டர் பரீட்சித்துக் கொண்டிருந்தார்.

“என்ன டாக்டர்? நியுமோனியாக் காய்ச்சலா?” என்று கேட்டார் நிபுணர்.

“டபிள்” என்றார் டாக்டர்.

“ரீடபிள்” என்று தட்சணமே பதில் வந்தது.

குறிப்பு: நியுமோனியாவில் ஸிங்கில் நியுமோனியா, டபிள் நியுமோனியா என்ற இரண்டு வகை உண்டு; பிரிட்ஜ் ஆட்டத்தில் ‘டபிளிங்’, ‘ரீடபிளிங்’ இரண்டும் உண்டு அல்லவா?

—‘ஈவினிங் நியூஸ்’, கிளாஸ்கோ.

எதில் சந்தேகம்?

பிரபல வியாபாரி ஒருவருக்கு தொண்ணூற்றொன்பதாவது பிறந்த நாள் வந்தது. அப்போது அவரை ஒரு பத்திரிகை நிருபர் போய்க் கண்டு பேசினார். கிழவனாரின் உடற்கட்டையும் ஆரோக்கியத்தையும் பார்த்து வியந்தார்.

நிருபர் விடை பெறும்போது, “அடுத்த வருஷம் நூறு வயதை எட்டிவிடுவீர்கள். அப்போது மீண்டும் நான் வந்து சந்திக்கலாம் என்று நம்புகிறேன்” என்றார்.

“நிச்சயம் வந்து சந்திப்பாய். நல்ல வாலிபனாயிருக்கிறாய்; ஆரோக்கியமாயிருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறாய். இப்படியிருக்கச் சந்தேகம் என்ன வந்தது மீண்டும் வந்து என்னைச் சந்திக்க?” என்றார் கிழவர்.

—‘டெஸெர்ட் நியூஸ்’

எதிலும் மிதம் வேண்டும்; ஆனால் அதையும் அமிதமாய்க் கைக்கொள்ளலாகாது.

—‘ரீடர்ஸ் டைஜெஸ்ட்’

காட்டு விலங்கின் காதல்

அர்க்காடி பிட்லர்



அமேஜான் காட்டில் வனவிலங்குகளைப் பிடித்துச் சேகரித்துவரும் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாளர், தமக்கு நேர்ந்த அபூர்வமான இந்த அநுபவத்தை ஒரு நூலின் இடையே எழுதுகிறார்.

★

ஒருநாள் சில வேட்டைக்காரர்கள், பன்றிபோன்ற டாபிர் (Tapir) என்னும் ஒரு பிராணியை என்னிடம் கொண்டு வந்தார்கள். பாவம், அவர்கள் வேட்டையாடும்பொழுது அதன் தாயைக் கொன்றுவிட்டார்களாம். அதைப் பார்க்கவே மிகவும் பரிதாபமாக இருந்தது; உயிரை வைத்துக்கொண்டு வாழ்வதற்கே விருப்பமில்லாதது போல் அது உற்சாகம் குன்றிக் கிடந்தது.

அதன் உடலில் இருந்த காயங்களை நன்றாகக் கழுவினேன். பரட்டையாகக் கிடந்த அதன் உடல் மயிரை வாரி ஒழுங்கு செய்தேன். பட்டுப்போல மிருதுவாகவும் அழகாகவும் இருந்த அதன் மயிரைத் தடவும்பொழுது ஆனந்தமாக இருந்தது. நான் மெதுவாகத் தடவிக் கொடுத்தபோது அது தன் விசித்திரமான நீண்ட முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு சிலை போல் நின்றது. அதன் அழகிய சிறு கண்கள் ஒரு மூலையைப் பார்த்துக்கொண்டிருந்தன. "நீங்கள் எனக்கு எதற்காக இதையெல்லாம் செய்கிறீர்கள்? என்னைக் கொஞ்சம் நிம்மதியாக இருக்கவிடுங்களேன். நான் எப்படியாவது போகிறேன்" என்று சொல்வது போல் இருந்தது அதன் பார்வை.

சர்க்கரை கலந்த கொஞ்சம் பாலை ஒரு தட்டில் ஊற்றி வைத்தேன். அது முதலில் அதைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. பால் தட்டினருகில் அதன் முகத்தைப் பிடித்து இழுத்துப் பாலின் வாசனையை மோந்து பார்க்கும்படி செய்தேன். அந்த வாசனை டாபிரைக் கவர்ந்துவிட்டது. தட்டிலிருந்த பால் முழுவதையும் ஒரே மூச்சில் உறிஞ்சிக் குடித்துவிட்டுத்தான் திரும்பியது. இப்போது அதன் பார்வையில் பூரண திருப்தி ஏற்பட்டிருப்பது தெரிந்தது. பிறகு அதைச் சமையலறைக்கு அழைத்துப் போனேன்.

ஒரு மணி நேரங்கழித்து அது இருந்த இடத்தைப் பார்த்தேன். எரிந்துகொண்டிருந்த அடுப்பின் பக்கத்தில் சுகமாகக் குளிர் காய்ந்தபடி படுத்திருந்தது. இப்போது அது சாக விருப்பவில்லை. மெல்ல அதன் உடலை ஒருமுறை தடவிக் கொடுத்தேன். என் கையை அதன் நாவால் மெல்ல நக்கி அது

தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது. அன்று முதல் எனக்கும் அதற்கும் நட்பு ஏற்பட்டது.

டாபிர் காட்டுப் பன்றி இனத்தைச் சேர்ந்தது. என்னிடமுள்ள குட்டிக்கு மூன்று மாதந்தான் ஆகிறது. ஆனால் ஆறு மாதக் குட்டிபோல நன்றாகப் படுத்திருந்தது. குழந்தை போன்ற பெரிய தலையும் வளைந்த மூக்கும் நீண்ட அவலட்சணமான கால்களும் விநோதமாகவே இருந்தன. உடம்பில் அடர்ந்து கறுத்த மயிர்; பக்கவாட்டிலே நான்கு மஞ்சள் கோடுகள். இந்த மஞ்சள் கோடுகள் அதன் உடலில் மயிர்கள் நன்றாக அடர்ந்து வளர்ந்ததும் மறைந்து விடும்.

டாபிரும் நானும் இணைபிரியாத தோழர்களாகிவிட்டோம். அதன் காதோடு எவ்வளவு பிரியமான வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறேன் தெரியுமா? வேகவைத்த கறியையும் இனிய உலர்ந்த பழங்களையும் அதற்கு உணவாகத் தருவேன். விலை உயர்ந்த புட்டிப் பாலைக்கூட அதற்கு ஆகாரமாகக் கொடுத்துவந்தேன். அதன் வயிற்றின் அடியிலும் தோலிலும் உள்ள மிருதுவான பட்டுப் போன்ற மயிரை என் விரல்களால் தடவிக் கொடுப்பதில் எனக்கு ஓர் ஆனந்தம் ஏற்பட்டது. நான் பாராட்டியது போல் டாபிரின் சொந்தத் தாய் கூடப் பாராட்டியிருக்காது.

குட்டியாக இருந்த டாபிர் வெகு சீக்கிரத்தில் அழகாகவும் கவர்ச்சியாகவும் வளர்ந்துவிட்டது. சுறுசுறுப்பும் உற்சாகமும் மிகுந்து விளங்கியது. அதன் சிறு வயிறு எப்பொழுதும் நிறைந்தே இருக்கும். சமையல் அறையில் ஏதாவது பொருள் தரையில் கிடந்தால் அதை வைத்துக்கொண்டு விளையாட நன்றாகப் பழகிவிட்டது. நான் வெளியே போய்விட்டு வருவேன். வந்தவுடனே என்னை நோக்கி வெகு வேகமாக ஓடி வந்துவிடும். என் கால்களை நக்கி என்னைத் தொடர்ந்து வரும். அதற்கு ஒரே ஒரு வார்த்தைதான் தெரியும். 'ஹி' என்ற அந்த வார்த்தையை வைத்துக்கொண்டே எல்லா விஷயங்களையும் பேசி விடும்.

டாபிரின் பாஷையை நானும் நன்றாகக் கற்றுக்கொண்டு விட்டேன். கொஞ்ச காலத்துக்குள்ளாகவே அதன் பாஷையில் 'ஹி' என்ற சத்தம் ஒன்றின் துணையைக் கொண்டு பல முக்கியமான விஷயங்களைப்பற்றி அதுவும் நானும் பேச ஆரம்பித்துவிட்டோம். அதன் பேச்சு ஒவ்வொன்றையும் என்னால் நன்றாகப் புரிந்துகொள்ள முடிந்தது. எங்கள் நட்பை யாராலும் கலைக்க முடியாது என்று எனக்கு உறுதியாகப் பட்டது.

ஆனால் அப்படி நினைத்தது தவறாகிவிட்டது. காபிபாரா என்ற பன்றி இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் விலங்கு – அதுவும் நான் வளர்த்து வருவதுதான் – எங்கள் நட்பைக் குலைத்துவிட்டது. அது நன்றாகப் பருத்துக் கொழுத்திருந்தது. அதன் பிடிவாதமும் குறும்புத்தனமும் சொல்லி முடியாது.

காபிபாராவைக் கண்டதுமே என் டாபிர் மயங்கிவிட்டது. உடனே விரைந்து ஓடிச் சென்று அதன் அருகே நின்றது. கொஞ்சநேரம் மோந்து மோந்து பார்த்தது. பிறகு கட்டுக்கடங்காத ஆசையால் காபிபாராவை மெல்ல நக்கிக் கொடுத்தது. முன்பின் தெரியாததால் டாபிரைக் காபிபாரா சந்தேகமாகப்

பார்த்தது. ஆனாலும் ஒன்றும் செய்யவில்லை.

அந்த நிமிஷத்திலிருந்து எனக்கும் டாபிருக்கும் இருந்த நட்புக் குறையத் தொடங்கியது. காபிபராவை, டாபிர் தெய்வமாக மதித்தது; நிழல்போல் அதைப் பின் தொடர்ந்து சென்றது. ஆனாலும் என்னை மறந்துவிட்டது என்று சொல்லிவிட முடியாது. தனக்காக இஷ்டம் இருக்கும்போது என்னைப் பார்க்க வரும். இதற்கு முன்பெல்லாம் என்னைக் கண்டதுமே எங்கிருந்தாலும் ஓடி வரும். இப்போதோ 'ஹி, ஹி' என்று பல தடவை அழைத்தால்தான் என் அருகே வரும். இருந்தாலும் முன் போலவே அதன் உடம்பையும் கழுத்தையும் நான் தடவிக் கொடுத்தால் கம்மென்றுதான் இருந்தது. வழக்கம்போல் தீனி தின்ற பிறகு எழுந்து உடம்பை ஒரு தரம் குலுக்கி விட்டுக் கொள்ளும். காபிபரா இருக்கும் இடத்தைத் தேடிக் குறுக்கு வழியிலே ஓடிவிடும்.

காபிபராவும் கொஞ்சமாவது டாபிரின் மேல் இரக்கம் காட்டி அன்புடன் இருந்திருந்தால் நான் இந்த அற்ப விஷயத்தைப் பெரிதாக எண்ணியிருக்க மாட்டேன். காபிபராவுக்கும் டாபிருக்கும் சேர்ந்தாற்போலத் தட்டு நிறையப் பால் வைப்பேன். தன் தட்டில் இருக்கும் பாலைக் காபிபரா அவசர அவசரமாகக் குடித்துவிட்டு, டாபிரின் பால் தட்டுக்கு அருகே தலையை நுழைத்து அதை விலகச் செய்து, அந்தப் பாலையும் குடித்து விடும். டாபிரோ அப்போது காபிபராவின் கழுத்தைத் தன் நாக்கினால் தடவிக் கொடுக்கும்.

டாபிருக்குத் தோல்வி ஏற்படாமல் இருக்க என்ன என்ன செய்ய வேண்டுமோ அவ்வளவும் செய்தேன். நல்ல பழங்களும் இனிய பாலும் நிறையக்கொடுத்தேன். நான் செய்யும் ஒவ்வொரு காரியத்தை காபிபரா நன்றாகக் கவனித்துக் கொண்டுதான் இருந்தது. அது இதையெல்லாம் பார்த்து உள்ளுக்குள்ளேயே சிரித்துக்கொண்டதோ என்னவோ, யார் கண்டார்?

எவ்வளவுதான் உபசாரம் செய்தும் காட்டு வாழ்வில் விருப்பம் கொண்ட அந்தக் காபிபராவின் மேலேதான் டாபிருக்கு அதிக ஆசை.

ஒருநாள் இரவு பாதுகாப்புக்காகப் போட்டிருந்த வேலியில் துவாரம் செய்து இரண்டு பிராணிகளும் தப்பி ஓடிவிட்டன. சில மணி நேரங் கழித்து அவை திரும்பி வந்துவிடுமென்று எண்ணினேன். இதற்குமுன் காபிபரா இந்த மாதிரி எவ்வளவோ தடவை தப்பி ஓடியிருக்கிறது. ஆனால் இந்த முறை இரண்டும் திரும்பி வரவில்லை. பல பேரை விசாரித்தும் பார்த்துவிட்டேன். அவை இரண்டையும் பிடித்துத் தருபவர்களுக்குப் பரிசு அளிப்பதாகவும் தெரிவித்திருந்தேன். அப்படியும் அவைகளைப்பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை.

காபிபராவின்மேல் டாபிருக்கு இருந்த காதலும் சுயேச்சையான காட்டு வாழ்வில் காபிபராவுக்கு இருந்த ஈடுபாடுந்தான் அவை ஓடிவிட்டதற்குக் காரணம் என்பதை உணர்ந்துகொண்டேன்.

மூன்றாவது நாள், காட்டில் தன் குடிசைக்கு ஒரு மைல் தூரத்தில் அந்தப் பிராணிகளைக் கண்டதாக ஓர் ஆள் சொன்னான். உடனே

புறப்பட்டுப் போனேன். எனக்கும் டாபிருக்கும் பொதுவான அந்த 'ஹிஹி' பாஷையில் அழைத்தேன். வெகு தூரத்திலிருந்து எதிர்க் குரல் கேட்டது. அதைக் கேட்டதுமே என் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. குரல் வந்த வழியே சென்றேன். மீண்டும் டாபியின் குரல் கேட்டது.

என்னைக் கண்டதும் முதலில் டாபி சிறிது பயந்து சில அடிகள் பின்னால் நகர்ந்துகொண்டது. பிறகு நிதானமாக நின்று திரும்பிப் பார்த்தது. இப்போது அதன் பார்வையே மாறியிருந்ததாக எனக்குத் தோன்றியது. மூன்று நாளைய காட்டு வாழ்வுதான் அதன் புதிய போக்குக்குக் காரணம். கொடிய மிருகம் ஒன்றின் எதிரில் இருப்பதை உணர்ந்தேன். எந்தச் சமயத்திலும் ஓட்டத் தயாராக நின்றேன். என் பழைய நண்பனை டாபியைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. கடைசியில் அதன் அருகே சென்றேன். டாபி மெல்லக் கம்பீரமாக ஏதோ முணுமுணுத்தது. சமுத்தக்கும் வயிற்றுக்கும் கீழ்ப் பாகத்தில் இருந்த மிருதுவான மயிரைச் சொறிந்து கொடுத்தேன். இந்தச் சந்தர்ப்பத்தில் காபிபரா எங்கிருந்தோ குரல் கொடுத்தது. டாபி நிமிர்ந்து நின்று குரல் வந்த திக்கை ஒரு முறை பார்த்து உடனே அந்தப் பக்கமாக ஓட ஆரம்பித்தது. செய்வது என்ன என்று தெரியாமல், "ஓடாதே" என்று உரக்கக் கத்தினேன். டாபி உடனே ஓட்டத்தை நிறுத்திக் கொண்டது. மீண்டும் அதன் அருகில் சென்றேன். இப்போது அது ஓடவில்லை. அதனுடன் பிரியமான வார்த்தைகளைப் பேசியபடியே வந்த வழியே திரும்பினேன். டாபியும் சும்மென்று என்னைப் பின்தொடர்ந்தது. பின்னால் திரும்பிப் பார்ப்பது நல்லதல்ல என்று திரும்பிப் பார்க்காமலே வழி நடந்தேன். டாபி என் பின்னால் வரும் காலடிச் சத்தம் மட்டும் நன்றாகக் கேட்டது. என் வீட்டை அடைந்ததும் மிக்க மகிழ்ச்சி ஏற்பட்டது.

டாபியின் மனமும் மாறியிருந்ததுபோல் தோன்றியது. தன் தலையை என் கையின்மேல் வைத்துக்கொண்டது. ஒரு தட்டு நிறையப் பால் கொண்டு வந்து வைத்தேன். கண்களை உருட்டியபடியே மகிழ்ச்சி ததும்பப் பாலைக் குடித்து முடித்தது. அது யதேச்சையாகக் காட்டிலே திரிந்தாலும் வயிற்றுக்குப் போதுமான தீனி அங்கே கிடைக்கவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். மறுநாளே காபிபராவும் காட்டிலிருந்து திரும்பி வந்து சேர்ந்துவிட்டது.

பட முதலாளியின் படைப்பு

"ஜிக்பீல்டு என்ற பட முதலாளியின் படைப்புகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றைச் சொல்லுங்கள், பார்க்கலாம்" என்று வில் ரோகர்ஸ் என்ற நடிகரை யாரோ ஒரு சமயம் கேட்டார்கள்.

நடிகர் சற்றும் தாமதியாமல், "அவருடைய மகள் பாட்ரீஷியா" என்றார்.

— இர்வின் ஹாப்மான்

மலர்கள் அழகு தரும்; மணம் வீசும்; வியாதிகளையும் போக்கும்.

புஷ்ப வைத்தியம்

கே. என். கேஸரி

மலர்களால் தெய்வங்களை அர்ச்சிக்கிறோம். சுமங்கலிகளுக்கும் கன்னிப்பெண்களுக்கும் மங்கலச் சின்னமாக அதைக் கொடுக்கிறோம். இப்படி உபயோகிக்கும் மலர்கள் பல நோய்களைப் போக்கும் மருந்தாக உதவுகின்றன.

தாழம் பூ: இது எல்லா ஊர்களிலும் கிடைக்காது. குண்டூர் ஜில்லா, மலையாளம், தாராபுரம் முதலிய இடங்களில் ஏராளமாகக் கிடைக்கும். இது சமசீதோஷ்ணப் பிரதேசங்களில் ஆற்றோரத்தில் பயிராகிறது. இதன் தீவிரமான வாசனை கலந்த காற்று நல்ல பாம்புக்கு ஆரோக்கியம் தரும். தாழை மடல்களைக் கொண்டு தலைக்குத் தைலம் காய்ச்சுவார்கள். இதைத் தடவிக்கொண்டால் கூந்தல் நன்றாக வளரும். தலையில் தாழம்பூ வைத்துக்கொண்டால் மனச்சவலையும் நோயும் நீங்கும்.

குண்டு மல்லிகை: இளவேனிலிலும் வேனிலிலும் இந்த ஜாதிப் பூக்கள் விசேஷம். ஆயுர்வேத வைத்தியர்கள் இவைகளிலிருந்து 'புஷ்பாஸவம்' என்ற ஒருவிதப் பானகம் தயாரிக்கிறார்கள். இது மனத்துக்கு இன்பமும் வன்மையும் கொடுக்கும். இதனால் நல்ல பசியும் தூக்கமும் உண்டாகும்.

ரோஜா: இதை வடமொழியில் 'சதபத்திரம்' வன்பார்கள். இதைப் பூக்களின் ராணி என்றும் சொல்வார்கள். இதில் பல நிறங்கள் உண்டு. எல்லாம் வைத்தியத்துக்கு உகந்தவையே. முட்கள் நிறைந்த எல்லா ரோஜாக்களும் விஷத்தைப் போக்கும். இதிலிருந்து அத்தர் எடுப்பது பிரசித்தம்.

இது வைத்தியத்துக்குப் பல விதத்தில் உதவுகிறது. ரோஜா இதழ்களை உதிர்த்து நல்ல தேனில் 4, 5 நாட்கள் ஊறவைக்க வேண்டும். பிறகு தேனில் ஊறிய இதழ்களை வேளைக்கு ½ தோலா வீதம் தினந்தோறும் உட்கொண்டு வந்தால் வயிறு சம்பந்தமான வாதம், பித்தம், கபம் ஆகியவை தீரும். இருந்தாலும் உஷ்ண தேகம் உள்ளவர்களுக்குச் சற்று ஜலதோஷம் பிடிக்கலாம்; தும்மல் வரும். இதற்குக் கர்ப்பூரம் மாற்று. ரோஜா இதழ்களின் ரசத்தை மூக்கில் பிழிந்தால் தலைவலி நீங்கும். சாய்ந்த ரோஜா இதழ்களையாவது மொட்டுக்களையாவது நெய்யில் பொன் வறுவலாக வறுத்து, முதல் கவளத்தோடு சேர்த்துச் சாப்பிட்டால் மலக்கட்டு நீங்கும். ரோஜாப் பூக் குல்கந்து சாப்பிட்டாலும் சுகபேதியாகும்.

ஈஎம் பூ: பழைய ஏடுகளைப் புரட்டும்போது அபூர்வமான மருந்து முறை ஒன்று கிடைத்தது.

காப்பிரைட்; கிருகலக்ஷ்மி (தெலுங்கு), சென்னை.

மாமரம் ஒவ்வொரு வருஷமும் முதல் முதல் பூக்கிறதே, அப்போது அந்தப் பூக்களையெல்லாம் சேகரித்து வைத்துக்கொள்ள வேண்டும். கைகளை நன்றாகச் சுத்தம் செய்து கொண்டபின் இந்த மாம்பூக்களைக் கசக்கிக் கைகளில் ரசத்தைப் பூசிக் கொண்டு அப்படியே உலர விட வேண்டும். நன்றாய் உலர்ந்த பின் கையை அலம்பிக்கொள்ளலாம். பிறகு நீங்கள் பெரிய மந்திரவாதி ஆகிவிடலாம். அப்போது, தேள் கடித்தவர்களைக் கடித்த இடத்தில் உங்களுடைய இரு கைகளாலும் தடவிக்கொடுத்தால், வலி, எரிசசல் எல்லாம் இறங்கிவிடும்.

முருங்கைப் பூ: இது நம் நாட்டில் சுலபமாக எல்லா இடங்களிலும் கிடைக்கும். முருங்கைக் காயின் உபயோகம் எல்லாருக்கும் தெரிந்ததே. முருங்கைப் பூவைக் கூடக்கறி, கூட்டுச் செய்து சாப்பிட்டால் ருசியாக இருக்கும். முருங்கைப்பூவை உலர்த்திச் சூரணம் செய்து வைத்துக்கொண்டு வேளைக்கு 3 அல்லது 4 சிட்டிகை வீதம் காலையும் மாலையும் சாப்பிட்டு வந்தால் வாதம், பித்தம், காக்குப்பூச்சி, கிரைப்பூச்சி இவை வயிற்றிலிருந்து நீங்கிவிடும்.

இதை லேகியமாகக்கூடச் செய்து உட்கொள்ளலாம். லேகியத்தையோ, சூரணத்தையோ ஒழுங்காகச் சாப்பிட்டுவந்தால் வாத பித்த சிலேஷ்மங்கள் சரிப்பட்டு விடும். வாயின் அரோசகத்தைப் போக்கி ருசியை உண்டாக்கும். பூவை வதக்கியும் சாப்பிடலாம். பச்சை முருங்கைப் பூவை வெது வெதப்பாகச் சூடாக்கிக் கண்களில் வைத்துக் கட்டினல் கண் எரிச்சல், நீர் கசிதல் முதலியவை நீக்கும்.

அகத்திப் பூ: அகத்திக்கீரை கிராமங்களில் வீட்டிலேயே கிடைக்கக் கூடியது. அகத்திப்பூ மூன்றாம் பிறையைப்போல் பார்க்க அழகாயிருக்கும். இதைத் தேங்காய், பருப்புச் சேர்த்துக் கறி, கூட்டுச்செய்யலாம். வாதத்தை நீக்கும். உடலின் கனத்தைக் குறைக்கும். வயிற்று வலியைப் போக்கும்.

பைத்தியக்காரர்களுக்கு மூச்சு விட முடியாத நிலையில் திண்டு மேல் சாயவைத்து அகத்திப் பூ ரசத்தை மூக்கில் பிழிந்தால் நல்ல குணம் தரும். மூக்கில் துர்நாற்றத்தோடு நீர் பெருகுவதை இது நிறுத்தும். தலைவலி, தலைப்பாரம் இவைகளையும் நீக்கும்.

ஆவாரம் பூ: வயல்களிலும் ஊரோரத்திலும் குத்துச் செடிகளாக முளைத்திருக்கும். பூக்கள் தங்கநிறமாய்க் குலுங்கக் குலுங்கப் பூத்திருக்கும். வயலில் வேலை செய்யும் பெண்கள் இதைத் தலையில் சூடிக்கொள்வது உண்டு. இந்தப் பூக்களை உலர்த்தி இடித்துப் பொடியைத் தலைக்குத் தேய்த்துக் கொள்ளலாம். தலை சீக்கிரத்தில் நரைக்காது. வாசனைப் பொடியோடு கலந்து தேய்த்தால் சொறி, சிரங்கு இல்லாமல் உடம்பு பொன்னிறம் பெறும். கிராமங்களில் பரங்கி, பூசனிப் பூக்களோடு இதையும் மார்கழி மாதக் கோலங்களில் வைப்பார்கள். ஆவாரம் பூ 10 தோலா, கடுக்காய்த் தோல் $2\frac{1}{2}$ தோலா, தானிக்காய் $2\frac{1}{2}$ தோலா, நெல்லிமுள்ளி $2\frac{1}{2}$ தோலா, சீயக்காய் விதை $2\frac{1}{2}$ தோலா இவற்றையெல்லாம் வெயிலில் காயவைத்துப் பொன்னிறமாக வறுத்து இடித்துப் பொடியைக் காப்பித்தூள்போல் காலை வேளையில் அருந்தினல் நீரிழிவு நோய் நீங்கும்.

இந்திய - அமெரிக்க உறவு

ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர்

அமெரிக்கச் சர்வகலாசாலைகளில் சில பிரசங்கங்கள் புரியும் புரொபசராக அழைப்பின்பேரில் அங்கே சென்றிருக்கிறார் ஸர் ஸி. பி. அமெரிக்க ராஜதந்திரியான புல்லிட் என்பவருக்குப் பதில் சொல்லுகிறார் இந்தக் கட்டுரையில். இது அமெரிக்கப் பத்திரிகைகளிலும் பிரசுரமானதாக 'ஸ்வதந்த்ரா' ஆசிரியருக்கு ஸர் ஸி. பி. தெரிவித்திருக்கிறார்.

இத்தனை வருஷகாலம் நிர்வாகத் துறையிலும் வக்கீல் தொழிலிலும் ஈடுபட்டு வந்தவன் நான். இப்போது அமெரிக்காவில் புரொபசராக வரும்படி அழைத்திருக்கிறார்கள். இதை ஏற்றுக்கொண்டுவிட்டேன். காரணம் என்ன தெரியுமா? இன்று அமெரிக்காவும் இந்தியாவும் பரஸ்பரம் பல விஷயங்களைத் தெரிந்துகொண்டு ஒத்துப்போக வேண்டியது மிகமிக அவசியம் என்று எனக்குப் பட்டது.

ஆனால் இங்கே வந்ததும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே முக்கியமான கருத்து வேற்றுமைகள் இருப்பது தெரிந்தது; அரசியல் பிரசங்கங்களிலும் பத்திரிகைகளிலும் இரு நாட்டாரும் பரஸ்பரம் எரிந்து விழுவதையும் கவனித்தேன். சமீபத்தில் 'லைஃப்' என்ற பத்திரிகையில் மிஸ்டர் புல்லிட் என்னும் பிரபல அமெரிக்க ராஜதந்திரி இந்த ரீதியில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இதைப்பற்றி விரிவாக ஆராயாவிட்டாலும் இரண்டு நாடுகளுக்கும் பொதுவான சில அம்சங்களைப்பற்றி மட்டும் சொல்லியாக வேண்டும்.

பிற நாட்டாரின் பழக்க வழக்கங்களை மேல்வாரியாகக் கவனித்துவிட்டு நம் குறைபாடுகளை மறந்துவிட்டு நாம்தான் எல்லாவிதத்திலும் உயர்ந்தவர்கள் என்ற ரீதியில் எழுதுவது இந்த நாளில் சகஜமாக இருக்கிறது. இப்போது உலகம் இருக்கும் நிலையில் இப்படியெல்லாம் எழுதினால் பரஸ்பரம் நல்லெண்ணம் எப்படி ஏற்படும்? 25 வருஷத்துக்கு முன் மிஸ் மேயோ செய்ததுபோல் பழங்கதையைக் கிளறிக்கொண்டிருப்பானேன்?

இந்தியாவில் எழுத்தறிவென்பதே போதாது என்று குறை கூறுகிறார் புல்லிட். அது வாஸ்தவமாக இருந்தாலும் அதனால் இந்தியருக்குக் கலாசாரம் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? கீழ்நாடுகளில், அதுவும் இந்தியாவில் கர்ணபரம்பரையாகத்தான் எல்லா விஷயங்களையும் கற்றறிந்து வந்தார்கள். இந்தியாவிலுள்ள உழவனுக்கு எழுதப் படிக்கத் தெரியாதிருக்க

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்; 1-12-'51), சென்னை.

லாம். ஆனால் வழி வழியாக வந்த விஷயஞானம் அவனுக்கு மிகுதியாக உண்டு. எழுத்தறிவு இல்லை என்கிறாரே புல்விட்; இந்த இருநூறு வருஷகாலமாக இந்தியாவை ஆண்டவர்கள், பொதுமக்களின் கல்வியபிவிருத்தியில் அக்கறை செலுத்தாதிருந்ததுதான் இதற்குக் காரணம். ஆனால் இப்போது இளைஞர் கல்வி, முதியோர் கல்வி இரண்டையுமே பரப்ப இந்தியா முழுதும் பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள்.

ஜனநாயகக் கொள்கைக்கும் பிராம்மணர்களுக்கும் ஒத்துவராது என்று புல்விட் சொல்லுகிறார். இப்படியெல்லாம் சொல்லுகிறவர்கள், 'நம் கிராம சமூகம் ஜனநாயக முறையில் அமைந்தது. பிராம்மணர்கள் அதற்காக எவ்வளவோ உழைத்திருக்கிறார்கள். 3000 வருஷமாகப் பணத்தைத் துச்சமாக மதித்து அறிவு வேட்கையும் எளிய வாழ்வுமே லட்சியமாகக் கொண்ட ஒரு நாகரிகத்துக்குக் காரணமாக இருந்தார்கள்' என்ற உண்மையை மறந்து விடுகிறார்கள். நடு நடுவே சில சமயம் குழப்பம் ஏற்பட்டாலும் ராணுவ மனப்பான்மையோ பணக்காரர்களின் செல்வாக்கோ ஏற்படாதபடி பிராம்மணன் கவனித்து வந்தான்.

ஜாதியைப்பற்றியும் அதனால் பிற்காலத்தில் ஏற்பட்ட தீங்குகளையும் குறைகூறுவோர் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். வேத காலத்திலும் (கி.மு. சுமார் 2000), ஏன் இதிகாச காலத்துக்குப் பின்னுலும் கூடத் தொழிலை அடிப்படையாகக் கொண்டுதான் ஜாதி முறைமையை அனுஷ்டித்து வந்தார்கள். 'சூழ்நிலையும் அவரவர் இயற்கையுமே ஜாதி வேறுபாட்டுக்குக் காரணம்' என்று கீதையில் சொல்லியிருக்கிறது. பிறகு அடிக்கடி கிளர்ச்சி ஏற்பட்டுப் புதிய புதிய ஜாதிகளும் தோன்றின. கபீர் போன்றவர்கள் ஹிந்து முஸ்லிம் என்ற வேற்றுமையைக்கூடக் களைந்து இரு மதத்தாரையும் ஒன்று சேர்க்க முயன்றார்கள். தீண்டாதவரான நந்தனாரைப் பிராம்மணர்கள் நாயனாராக ஏற்றுப் போற்றலானார்கள். 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வைஷ்ணவ பக்தர்கள் ஜாதி வேற்றுமைகளைக் களைய முயன்றார்கள். அதேமாதிரி சைவத்திலும் ஜாதி வேற்றுமையொழிய லிங்காயத்தக்கள் அரும்பாடுபட்டார்கள். ராம்மோகன் ராய், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர், தயானந்தர், காந்திஜீ முதலிய மகான்கள் மேல்ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் ஜாதி முறைமையைக் கண்டித்துப் பல சீர்திருத்தம் செய்து வெற்றி கண்டார்கள். நான் பிராம்மணன் தான்; இருந்தாலும் திருவாங்கூரில் தீண்டாமையை ஒழிப்பதற்கு நான் காரணமாக இருந்தேன். காலநிலைக்கு ஏற்க இன்னும் பல சீர்திருத்தங்கள் நடந்துகொண்டுதான் வருகின்றன. வருங்காலத்தைப்பற்றி ஆராயும்போது போனதைக் குறித்துத் திரும்பத் திரும்பச் சொல்வது நல்லதல்ல.

கிரீஸ், எகிப்து, பினிஷியா, ரோம் இவ்விடமெல்லாம் அடிமைமுறை காரணமாக மக்களுக்குள் பிரிவு ஏற்பட்டது போலவே இந்தியாவிலும் ஜாதிப் பிரிவு உண்டாயிற்று. தலைமுறை தலைமுறையாகத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு விசேஷத் திறமை உண்டு என்பதைச் சரித்திரத்தில் அநேக இடங்களில் காணலாம்.

பிணத்தைக் கொளுத்துவதைப் பற்றியும் ஆற்றிலோ கடலிலோ எறிவதைப்பற்றியும் சிலர் குறை கூறுகிறார்கள். இது இந்தியாவில் மட்டும் அல்ல; இன்னும் பல நாடுகளிலும் சகஜமாக நடக்கிறது. இன்னும் கேட்டால் கொளுத்துவது தான் சுகாதார ரீதிக்கு ஒத்தது என்று சொல்லவேண்டும்.

அம்மணச் சாமியார்களைப்பற்றி ஏளனம் செய்யலாம். கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்தில் இப்படிப் பல தவசிகள் இருந்திருக்கிறார்கள். இவர்களைப்பற்றி மேல்நாட்டார் யாரும் குறை கூறினதாகத் தெரியவில்லை. இயற்கையை அன்னையாக வழிபடுவதில் என்ன தவறு இருக்கிறது? கன்னிமாதாவை வணங்குவதைப் போலத்தான் அதுவும். பெருவிலுள்ள விமா என்ற ஊரில் ஒரு மாதாகோயிலில் சில கிறிஸ்துவர்கள் மிகப் பக்தியோடு பிராகாரத்தை வலம் வந்து கன்னிமாதாவின் அநுக்கிரகத்துக்காக ஏங்கி நின்ற காட்சியை என் கண்ணாரக் கண்டேன். இவ்வளவு ஆர்வத்தை நான் நம் கோயில்களில்கூடக் கண்டதில்லை. ஆதிகாலத்தில் கிரீஸ், கிரீட் முதலிய இடங்களிலும் இப்படி இயற்கையை அன்னையாக வழிபட்டதுண்டு.

உலகில் பரம்பொருளை அன்னையாகவும் குழந்தையாகவும் தியாகமூர்த்தியாகவும் மக்கள் வழிபடுவதைப் பார்க்கிறோம். சில உருவிலும் சிலுவை உருவிலும் மெக்காவில் காபா உருவிலும் வழிபடுகிறார்கள். இவையெல்லாம் மனத்தை ஒரு நிலையில் நிறுத்துவதற்குரிய சாதனம் என்று பாமரனுக்குத் தெரியாமலில்லை.

பிரபஞ்சத்தின் உற்பத்திவளத்தைக் குறிக்கச் சில சின்னங்களை உபயோகிக்கிறோம். கன்னிமாதாவையோ சிவலிங்கத்தையோ சிலுவையையோ வணங்கும்போது வேறு எந்தவிதமான நினைவாவது வருகிறதா? இல்லை. சிலுவையே சூரிய வழிபாட்டிலிருந்து வந்தது என்று சிலரும் லிங்க வழிபாட்டிலிருந்து வந்தது என்று சிலரும் சொல்கிறார்கள். இப்படி எல்லா மதத்திலுமே சின்னங்களைத் தியானத்துக்காகப் பயன்படுத்தி வந்தார்கள். இந்த மாதிரி சின்னங்களைப்பற்றி ஆராய்வது தாமரை மலரை விட்டுச் சேற்றைக் கிளறி அதன் வேரைக் கல்லுகிறமாதிரி தான்.

மேல்நாட்டில் 'அம்மணக் கொள்கை' பரவி வருவதனாலோ அமெரிக்காவில் சமீபத்தில் பேய் பிடித்துவிட்டதாக எண்ணி யாரோ ஓர் ஆசாமி தன் மனைவி மக்களுக்கெல்லாம் சூடு போட்டதனாலோ பொதுவாக மேல்நாட்டாரையே குறை கூறிவிடுவதா? அது வெறும் விஷமப் பிரசாரமாகுமேயொழிய அதனால் என்ன பலன் உண்டு? இன்று உலகில் பல இடங்களில் அல்லல்படும் மக்களுக்கு அமெரிக்கா சமயத்தில் உதவி வருகிறது; பாரமார்த்திக ஞானத்தை நாடி நிற்கிறது. அப்படியிருக்கும் போது ஏதோ, சில அமெரிக்க நாவல் ஆசிரியர்கள் அமெரிக்கப் பெண்களின் விநோத லீலைகளைப் பற்றி எழுதியுள்ள கட்டுக்கதைளைப் படித்துவிட்டு அமெரிக்கரே இப்படித்தான் என்று சொல்வது நியாயமாகுமா?

அதே மாதிரி அமெரிக்கர்களும் இந்தியாவைப்பற்றி நல்ல முறையில் ஆராய்ந்து தம் கருத்துக்களை

வெளியிட வேண்டும். இந்தியாவில் மூலப் பொருள்கள் இருந்தாலும் பல காரணங்களால் அவைகளை விருத்தி செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம்; இதனாலேதான், உணவு பற்றாக் குறை, நோய் எல்லாம் இங்கே அதிகமாக இருக்கின்றன. 300 வருஷமாக அந்நியர்கள் நன்றாகத்தான் ஆண்டார்கள். (அந்த ஆட்சியின் காரணமாகவே இந்தக் கதிக்கு வந்தோம் என்று சில பேர் சொல்லலாம்.) அப்படியிருந்தும் இந்தப் பற்றாக் குறை நீங்கின பாடில்லை; எழுத்தறிவு பரவின பாடில்லை. ஆரம்பக் கல்வி சம்பந்தமாக முதல் முதல் சில இந்தியர்கள் முயற்சி எடுத்துக்கொண்டபோது பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அதை ஆதரிக்கவில்லை. அதே மாதிரி சமூகப் பழக்க வழக்கங்களில் தலையிடவும் அவர்கள் துணியவில்லை.

இந்தியா சுதந்திரம் அடைந்து நாலு வருஷகாலந்தான் ஆகிறது. அதற்குள் சிலபேர், "இந்தியர்களுக்குக் கர்ப்பத்தடை செய்யத் துணிவேயில்லை" என்று தூற்ற ஆரம்பிக்கிறார்கள். ஆனால் ரோமன் கத்தோலிக் மக்கள் வாழும் சில நாடுகளில் இந்த மாதிரி செய்தால் என்ன நடக்கிறதென்று அவர்கள் கவனித்தால்தானே தெரியும். பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால் தானாகவே இதைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

ஆகவே, புதிதாக விடுதலை பெற்ற ஒரு நாட்டில் சர்க்கார் முன்னேற என்னவெல்லாம் பாடுபட்டு உழைத்து வருகிறார்கள் என்று கவனித்து அதைப் பாராட்ட வேண்டுமேயொழியத் தாங்கள்தான் மேலானவர்கள் என்ற மாதிரி நடந்துகொள்வது சரியல்ல.

இந்துக்கள் பசுக்களையும் குரங்குகளையும் பாதுகாப்பது கண்டு சிலர் ஏளனம் செய்யலாம். மாட்டிறைச்சி சாப்பிடக் கூடாது என்று சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. வேதகாலத்திலும் சரி உபநிஷத காலத்திலும் சரி இப்படித் தடை இருந்ததாகத் தெரியவில்லை. கிராமம் சுபிட்சமாக இருப்பதற்கும், விவசாயத்துக்கும் கால்நடைகள் – அதிலும் கறவை மாடுகள் – அவசியம் என்பதை உணர்ந்தே நம் நாட்டில் பசுவைப் போற்றலானார்கள். மக்கள் குடியேறக் காடுகளை வரவர அழித்து வந்ததால் சாணத்தை வரட்டியாகத் தட்டி உபயோகிக்க வேண்டியிருந்தது. ஆகவே, அடிப்படையான காரணத்தைப் புரிந்துகொள்ளாமல் சுலபமாக வாய்க்கு வந்ததைச் சொல்லிவிடக் கூடாது.

இந்தியாவுக்குப் புதிய அமெரிக்கத் தூதராக வந்திருக்கும் செஸ்டர் பவுல்ஸ் சமீபத்தில், "இந்தச் சங்கடமான நிலையில் அமெரிக்கா இந்தியாவுக்கு ஒத்தாசை புரிய வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் அங்கே கலவரம் ஓங்காமல் தடுக்க முடியும். ஆனால் இப்படி உதவும்போது ஏதோ நம் ஆதரவு இருந்தால்தான் நடக்கும் என்ற ரீதியில் நடந்துகொள்ளாமல் மனமுவந்து எதையும் செய்ய வேண்டும்" என்றார். இந்தமாதிரி அநுதாபத்தோடு நடந்துகொள்வது தான் இன்று அவசியமாகும்.

ஒருநாட்டார் உயர்வாகப் போற்றி வரும் பழக்க வழக்கங்களைப் பிற நாட்டார் குறை கூறுவது பின்னால் அவர்களுக்கே ஆபத்தாக முடியும். இன்று அமெரிக்கா, இங்கிலாந்து இந்த இரண்டு நாடுகளிடமும்

இந்தியர்கள் சுமுகமாகவே பழகி வருகிறார்கள். அதேமாதிரி சாதாரண அமெரிக்க மக்களும் இந்தியாவிடம் சிநேக பாவத்துடன் தான் நடந்துகொள்கிறார்கள். உலகில் பலம் பொருந்திய ஒரு சாரார் மூலம் அரசியல் பொருளாதார நிர்ப்பந்தம் ஏற்படுமோ என்று இந்தியா திகில் கொள்வதும் சரியல்ல; அதேமாதிரி மற்ற நாட்டாரும் தாங்கள்தான் உலகத்தில் தலைமை தாங்கும் அதிகாரம் படைத்தவர்கள் என்று எண்ணிக் கொண்டு மற்றவர்கள் தங்களுக்கு அடங்கிப் பேசாமல் ஒத்துப்போக வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் நல்லதல்ல. பரஸ்பர நம்பிக்கை இருந்தால்தான் ஒத்துப் பழக முடியும். இல்லாவிட்டால் உலகம் என்னதியாகுமோ சொல்வதற்கில்லை.

சர்ப்பந்தம் இருக்கிறது

ஒரு டாக்டர் தெருவோடு போய்க்கொண்டிருக்கையில் நடு வழியிலே ஒரு பெண் அவரை நிறுத்தி, "தெருக்கோடியில் உள்ள அதோ அந்த வீட்டுப் பணக்காரப் பையனுக்கு வைத்தியம் செய்கிறீர்களே; அதில் நல்ல பணம் கிடைக்கிறதா?" என்று விசாரித்தாள்.

"ஆமாம், கிடைக்கிறது. அதுபற்றி உனக்கென்ன?" என்று கேட்டார் டாக்டர்.

"ஒன்றுமில்லை. அந்தப் பையன்மீது பெரிய செங்கல்லை எறிந்து காயம் உண்டாக்கியது என் சின்னப் பையன்தான். இதைச் சற்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் நீங்கள்" என்றாள் பெண்மணி.

—'அமெரிக்கன் லீஜன் மகஸின்.'

குடியானவன் பேரம்

ஒரு குடியானவனின் குதிரையை வாங்க வந்தார் ஒரு கனவான்.

"குதிரையின் விலை ஆயிரம் டாலர்" என்றான் குடியானவன்.

கனவான் திடுக்கிட்டார். நூறு டாலர் தருவதாக அவர் சொன்னார். அதுதான் நியாயமான விலை.

"ரொம்பக் குறைத்துவிட்டீர்கள். இருந்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்" என்றான் குடியானவன்.

பணத்தை எண்ணிக் கொடுத்துக்கொண்டே, "ஆமாம். ஒரு சந்தேகம்: பெருந்தொகையான 1000 டாலரை முதலில் விலையாகச் சொன்னாய்; உடனே அதில் பத்தில் ஒரு பங்கான 100 டாலருக்குச் சம்மதித்துவிட்டாயே; ஏன்?" என்று கனவான் கேட்டார்.

"அதுவா? ஒன்றுமில்லை. ஒருவேளை உங்களுக்கு 1000 டாலர் விலையுள்ள குதிரைதான் வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை இருக்குமோ என்னவோ என்று நினைத்தேன்" என்று அசட்டையாகச் சொன்னான் குடியானவன்.

—'நகான் எக்கோஸ்'

இது எவ்வளவு தூரம் உண்மையோ, எவ்வளவு தூரம் பொய்யோ! படிக்க ரசமாயிருக்கிறது.

ஆவி பேசுகிறது

'பி'

கொஞ்ச நாளாகத் தென் இந்தியாவில் சில இடங்களில் பல பேர் இறந்தவர்களின் ஆவிகளுடன் பேசிப் பல சிக்கல்களைத் தீர்த்துக்கொள்கிறார்கள். கோயம்புத்தூரைச் சேர்ந்த பிரபல மில் சொந்தக்காரரான வி. கே. நடராஜ கவுண்டர் குடும்ப விவகாரங்களைத் தம் தந்தையின் ஆவியுடன் கலந்து பேசிச் சமாளித்து வருகிறார். அங்கேயே மற்றொரு வக்கீல் இருந்தார். சட்ட நுணுக்க சம்பந்தமாக ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் உடனே அவர் பிரபல வக்கீலான ஏர்ட்லி நார்ட்டனின் ஆவியைக் கலந்தாலோசிப்பார்.

இப்படிக் கோயம்புத்தூரில் பல விஷயங்களுக்கும் ஆவிகளை அழைத்துப் பேசி வந்தார் சஞ்சீவி என்ற வாலிபர். நான்கு மாதங்களுக்கு முன்புதான் அவர் இறந்து போனார். சஞ்சீவியின் தந்தையும் இப்படி ஆவியுடன் பேசுகிறவர்தான். இந்த மாதிரி காரியங்களுக்குச் சஞ்சீவி எவரிடமிருந்தும் ஒரு சல்லிக் காசு கூட ஊதியமாக வாங்கினதில்லை. பிறர் தாங்களாகவே ஏதாவது சம்மானம் செய்தால் மட்டுமே ஏற்றுக்கொள்வார். அவர் ஏழையாகவே வாழ்ந்து ஏழையாகவே இறந்து போனார். இது சம்பந்தமாக ஐயாயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்களை வைத்திருந்தார். இவைதான் அவர் வைத்துவிட்டுப் போன சொத்து. அவர் ஆவிகளோடு கலந்தாலோசித்த சில விஷயங்களை இங்கே காணலாம்.

ராணுவ அதிகாரி ஒருவர் வயிற்று வலியால் மிகவும் கஷ்டப்பட்டார். பிரபல டாக்டர் ரங்காசாரியின் ஆவியிடமிருந்து தம் வயிற்று வலி சம்பந்தமாக ஆலோசனை கேட்க விரும்பினார். ரங்காசாரியின் ஆவியை அழைத்துக் கேட்டபோது மதுபானம் செய்வதை நிறுத்தினால் வயிற்று வலி போகும் என்று தெரிந்தது. "ராணுவத்தில் இருக்கிறேன். மதுபானம் செய்வதை நிறுத்த முடியாதே" என்று அதிகாரி கேட்டார். "ஓரளவுக்காவது மட்டுப்படுத்துங்கள்" என்று பதில் வந்தது. பிறகு ஜெர்மன் மருந்தொன்றைச் சாப்பிடும்படி சொன்னார் ரங்காசாரி. அதைச் சாப்பிட்ட பிறகு ராணுவ அதிகாரியின் நோயும் குணமாயிற்று.

மற்றொரு சந்தர்ப்பத்தில் ஒரு பெண்ணின் கால் ஆபரேஷன் செய்வதற்கான முறையை ரங்காசாரி இப்படித் தெரிவித்தார். அந்தப் பெண்ணுக்கு ஆரம்பத்தில் சிகிச்சை செய்துகொண்டிருந்த டாக்டர் முதலில் நம்பவே இல்லை. ஏளனமாகச் சிரித்தார். ஆனால்

காப்பிரைட்: ப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 9-12-'51), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

பெண்ணின் உறவினர்கள் வற்புறுத்தவே ரங்காசாரியின் ஆவி தெரிவித்த முறையிலேயே பெண்ணின் காலுக்கு ரண சிகிச்சை செய்தார். பெண்ணின் உடம்பும் குணமாகிவிட்டது.

பிரபல பிரெஞ்சு வீரனுன நெப்போலியனின் ஆவியை ஒரு சமயம் சஞ்சீவி வரவழைத்தார். சுதந்தரம் பெற்ற பிறகு இந்தியாவின் எதிர்காலம் எப்படி யிருக்கும் என்று அந்த ஆவியைக் கேட்டார்.

"நல்ல காரியமெல்லாம் நடக்கும். ஆனாலும் உங்கள் மக்களுக்குள் ஒற்றுமை மட்டும் இராது" என்று பதில் வந்ததாம்.

வெகு காலத்துக்கு முன் வாழ்ந்த இஸ்லாம் மதப் பிரசாரகரான அபு பக்கரின் ஆவியையும் சஞ்சீவி வரவழைத்தார். குர்ஆனின் சிறப்பைப்பற்றி ஓர் அருமையான உபந்நியாசம் செய்தது அபு பக்கரின் ஆவி. கேட்பவர்களுக்கு வேடிக்கையாக இருந்தது. ஆனல் விஷயம் ஒன்றும் புரியவில்லை.

ஒரு நாள் ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் ஆவியை வரவழைத்தார் சஞ்சீவி. "நான் சொல்லப்போகும் விஷயங்களைக் கடிதமாக எழுதி ஹைதராபாதில் இருக்கும் என் கணவரிடம் சேர்த்துவிடுகிறீர்களா?" என்று அந்தக் கவியரசி கனிவுடன் கேட்டாள். ஆனாலும் அவள் சொல்லி எழுதிய கடிதத்தைச் சஞ்சீவி அவள் கணவருக்கு என்ன காரணத்தாலோ அனுப்பவில்லை.

காந்திஜீயின் ஆவியுடன் தொடர்பு கொள்ளச் சஞ்சீவி முயன்றார். அந்தச் சமயத்தில் காந்திஜீயின் ஆவி மிக்க உயர்நிலையில் இருப்பதாகவும் அவரது சாந்தியைக் கலைக்கக்கூடாது என்றும் தகவல் வந்தது. நேதாஜியின் ஆவியைப்பற்றியும் இதே மாதிரி தகவல் கிடைத்தது.

கோயம்புத்தூரைச் சேர்ந்த காளிங்கராயர் என்னும் ராணுவ அதிகாரி தற்கொலை செய்துகொண்டு இறந்துவிட்டார். அவருடைய ஆவியைச் சஞ்சீவி அழைத்தார். ஆவியின் குரலைக் கேட்டுக் காளிங்கராயரின் குரல் மாதிரி இல்லையே என்று அருகே இருந்த ஒரு சந்தேகப் பேர்வழி கேட்டார். "ஓ அப்படியா! உனக்குச் சந்தேகமே வேண்டாம். நான் சாவதற்கு இரண்டு நாளைக்கு முன்பு என்னிடமிருந்து இரண்டு புத்தகங்களை நீ வாங்கிக்கொண்டு போனுயே, அவைகளைத் தயை செய்து உடனே திருப்பிக் கொடுத்துவிடு" என்று பதில் வந்தது. அதைக் கேட்டு அவர் பிரமித்துவிட்டார். உடனே புத்தகங்களை ராணுவ அதிகாரியின் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

1948-இல் சிங்காரவேலு என்பவர் ஜில்லா போலீஸ் சூப்பரிண்டெண்டெண்டாகக் கோயமுத்தூரில் வேலை பார்த்து வந்தார். இவர் மேற்கு வங்காளத்தில் ராஜாஜி கவர்னர்-ஜெனரலாக இருந்தபோது மெய்காப்பாளராக இருந்தவர். ஒரு நாள் இவர் சஞ்சீவியிடம் சீரோ என்ற பிரபல ஜோஸ்யரின் ஆவியை வரவழைத்துத் தம் எதிர்காலத்தைப்பற்றிக் கேட்கச் சொன்னர்.

"உங்களைக்கூடிய சீக்கிரம் சென்னைக்கு மாற்றப்போகிருர்கள். அங்கே போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல் சஞ்சீவிப் பிள்ளையின்கீழ் வேலை செய்யப்போகிறீர்கள். லஞ்ச ஒழிப்புக் கமிட்டியின் டைரெக்டராகவும் வேலை செய்வீர்கள்" என்று சீரோவிடமிருந்து பதில் வந்

தது. அப்போது சஞ்சீவிப்பிள்ளை புது டில்லி மத்தியத் தப்பறியும் இலாகா டைரெக்டராக இருந்தார். அவரைப் புது டில்லியிலிருந்து சென்னைக்கு மாற்றும் யோசனையே யாருக்கும் இல்லை. எனவே, இது சிங்காரவேலுவுக்கு வியப்பாக இருந்தது. ஆனால் இன்று சீரோ சொன்னமாதிரியே சஞ்சீவிப்பிள்ளையும் சிங்காரவேலுவும் சென்னைக்கே வந்து வேலை செய்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இல்லையா?

ஒரு சமயம் இந்தியாவின் எதிர்காலத்தைப்பற்றிச் சீரோவின் ஆவியிடம் சஞ்சீவி கேட்டார்.

"1955-இல் ஹிந்துஸ்தான் சமவெளியை ருஷியர்கள் கைப்பற்றி விடுவார்கள். பாகிஸ்தானையும் ருஷியா பிடித்துக்கொள்ளும். ஆனால் தென் இந்தியாவில் மட்டும் ஒன்றும் நேராது. பிறகு இந்தியாவும் பாகிஸ்தானும் ஐக்கியமாகி விடும்" என்று பதில் வந்ததாம். இன்று இதை நம்மால் நம்ப முடியவில்லை. எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.

ஒருதரம் ஏ. ஸி. ஸி. கம்பெனியாரின் மிகப் பெரிய சிமெண்ட் தொழிற்சாலை இருக்கும் மதுக்கரையில் ஒரு வழக்கில் குற்றவாளி யார் என்று தெரியாமல் போலீஸார் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அங்கே இருந்த போலீஸ் அதிகாரி சீரோவின் ஆவியை வரவழைத்து யோசனை கேட்டார். குற்றவாளியின் பெயர் 'கறுப்பண்ணன்' என்று பதில் வந்தது. "அவன் எப்படி இருப்பான்?" என்று போலீஸ்அதிகாரி கேட்கவே, "பெயரைக் கேட்டாலே தெரியவில்லையோ? அட்டக் கறுப்பு" என்று தமாஷாகப் பதில் சொன்னார் சீரோ. சில நாளைக்குள் குற்றவாளி அகப்பட்டு விட்டான்.

வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் கோயம்புத்தூரில் மிகவும் பிரசித்தி பெற்றவர். அவருக்குச் சொந்தமாக பெரிய ஒரு பஞ்சாலையும் உண்டு. அவர் ஒரு நாள் திடீரென்று 1948-இல் கார் விபத்து ஒன்றில் சிக்கி இறந்துவிட்டார். அவர் உயிலே எழுதி வைக்கவில்லை. இதனால் நெருங்கிய உறவினர்கள் சஞ்சீவி மூலம் அவரது ஆவியை அழைத்துப் பேசி உயில் எழுதச் செய்தார்கள். அந்த உயிலின் வாசகத்தில் எல்லாரும் திருப்தியடைந்து அதன்படியே சொத்தையும் பிரித்துக்கொண்டார்கள்.

கோயம்புத்தூரில் ஆவியுலகத் தொடர்பு கொள்பவர்களின் சங்கம் ஒன்று இருக்கிறது. ஒரு சமயம் அதில் அசோக மன்னனின் சமஸ்தான வைத்தியர் பக்ஷிராம் என்பவரின் ஆவியை வரவழைத்துப் பேசினார்கள். அது தன் வரலாறு முழுவதையும் தெரிவித்தது. அதைக் குறித்துக்கொண்டார்கள். பிறகு அங்கே இருந்த ஒரு சித்திரகாரர், பக்ஷிராமின் உருவத்தை எழுத, பிளாஞ்செட் என்ற கருவியை வைத்துக்கொண்டு உட்கார்ந்தார். பக்ஷிராமின் முழு உருவமும் அமையும் வரையில் சித்திரகாரரின் விரல்கள் தாமாகவே நகர்ந்தன. உருவப்படம் தயாராகி விட்டது. பல நாள் கழித்துக் கோயம்புத்தூர் அகதிகள் முகாமில் இருந்த இதாலியச் சித்திரகாரர் ஒருவரை இதற்கு வர்ணந்தீட்ட அழைத்தார்கள். ஆனால் அவரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மீண்டும் பக்ஷிராமின் ஆவியை வரவழைத்துக் கேட்டதில், "வர்ணம் தீட்டி அதைப் பாழாக்காதீர்கள்" என்று பதில் வந்தது.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'பிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். அவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும்.

கேள்வி: ஒரு பெண்மணிக்கு எத்தனை முகங்கள் இருக்கின்றன?

பதில்: இரண்டு. ஒன்று அவள் புருஷனுக்கு; மற்றவர்களுக்கு இன்னொன்று. முதல் முகம் பள்ளியறையில் அணைப்பால் நிறைகிறது. மற்றொன்று கண்ணாடிக்கு முன் உருவாகிறது.

* * *

கே: அதிகமாகப் பிள்ளை பெறுவது குற்றமா?

ப: இந்தியாவில் அது பாவம்; குற்றமும் கூட.

* * *

கே: உலகத்தில் எவ்வளவு முஸ்லிம்கள் இருக்கிறார்கள்?

ப: இருபத்திரண்டு கோடிக்கு மேலே (22,09,78,848.)

* * *

கே: மௌனக் காதலைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: பெருமூச்சிலே இடி இடிக்கும்போது காதலில் மௌனமேது?

* * *

கே: காந்தியை உண்மையிலே கொன்ற நாள் எது?

ப: இந்த நாட்டை மூன்றாகத் துண்டு போட்டார்களே அந்த 1947-ஆம் வருஷம், ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி. ஆனால் அவர் திருவுருவத்தை 1948-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30-ஆம் தேதி சம்ஸ்காரம் செய்தார்கள்.

* * *

கே: ஆடவரும் மகளிரும் ஒரே மாதிரி புத்திசாலிகளா?

ப: இல்லை. பெண்மணிகளுக்கு அடிப்படையான புத்திசாலித்தனம் அதிகம்; புருஷர்களுக்கோ விருத்திபண்ணின அறிவு அதிகம். பெண்கள் அறிவுடன் தொடங்குகிறார்கள்; ஆனால் முடிவில் ஆடவர்கள் அவர்களை மிஞ்சி விடுகிறார்கள்.



கே: வாக்காளனை வெளியே உதைத்துத் தள்ளுவது எப்போது?

ப: அவன் ஓட்டைப் பறித்துக்கொண்ட பிறகு.

காப்பிரைட், பிலிமிண்டியா (ஆங்கிலம்; நவம்பர் '51) பம்பாய்.

கே: ராணுவ வீரர்கள் பணத்துக்காகப் போரிடுகிறார்களா? தேசத்துக்காகவா?

ப: பணத்துக்காக வாழ்கிறார்கள்; தேசத்துக்காக உயிர் விடுகிறார்கள்.

* * *

கே: வீடு எப்போது சொர்க்கமாக இருக்கும்?

ப: சாப்பாடு நன்றாக இருக்க வேண்டும்; முட்டாள் கணவன் அமைதியாக இருக்கவேண்டும்.

* * *

கே: கைபர் கணவாயைப்பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: ஆகாசத்தில் ஜெட் விமானம் பறக்கும் இந்த நாளில் பூமியில் கைபர் கணவாயே கிடையாது.

* * *

கே: இந்தியாவுக்குப் பரம விரோதி யார்?

ப: நமக்கு இரண்டு விரோதிகள் இருக்கிறார்கள்: பேராசைக்கார முதலாளி ஒருவன்; பசியெடுத்த அரசியல்வாதி மற்றொருவன்.

கே: பணத்தைத் திருடலாம்; அறிவை?

ப: அறிவையும் திருடிப் பணமாக்கலாம்; அது குற்றமென்று சொல்லித் தண்டனை கிடைப்பதில்லை.

* * *

கே: ஆங்கிலேயரிடமிருந்து நாம் கற்றுக்கொண்ட நல்ல விஷயங்கள் எவை?

ப: அவர்களுடைய பாஷை, உடை, எண்ணம்.

* * *

கே: அமெரிக்காவில் வெள்ளைக்காரியை நீக்ரோக்கள் கல்யாணம் செய்துகொள்ள அநுமதிப்பதில்லையா?

ப: அமெரிக்காவில் உள்ள வெள்ளைக்காரப் பெண்ணை நீக்ரோ கல்யாணம் பண்ணிக்கொள்வதை அங்குள்ள சட்டம் தடுக்கவில்லை. ஆனால் சட்டத்தை மீறுகிறவர்கள் இதை அநுமதிப்பதில்லை. அப்படி எவனாவது நீக்ரோ துணிந்து கல்யாணம் செய்துகொண்டால் அவனுக்குப் படுக்கையறை, சமாதியில்தான் இருக்கும்.



கே: நாயும் கழுதையும் மனிதனைப் போலப் பேசத் தொடங்கிவிட்டால் என்ன ஆகும்?

ப: நாய்கள் தேசிய கீதம் பாட ஆரம்பித்துவிடும்; கழுதைகள் காங்கிரஸ் மந்திரிகளைப் போலத் தேர்தல் பிரசாரம் செய்யும்.

சிறு கதை:

கிறிஸ்துமஸ் பூனை

விளாடிமிர் ஸ்டேட்ரி

கறுப்புப் பூனையைப்பற்றியது இந்த ருஷியக் கதை. உண்மையில் கறுப்புப் பூனையைப்பற்றியதா? பூனை ஒரு வியாஜம். அதன் மூலம் மனித உள்ளங்களையே சித்திரிக்கிறது.

விண்டன் ரோடு வழியாக நீங்கள் எப்போதாவது போனுல், ஒரு வீட்டு ஜன்னலில் கரும்பட்டுப் போல் உடம்பைப் பெற்ற மகா அழகான ஒரு பூனையைக் காணலாம். அது கிரெய்க் தம்பதிகளின் வீடு. எப்போதும் கலகலவென்று ஜன நடமாட்டம் மிகுந்திருக்கும் வீதியை வெகு கூர்மையாக அந்தப் பூனை பார்த்துக்கொண்டிருக்கும். அதன் பார்வையில் குழந்தையின் ஆவலும், அரைக்கண் மூடிய வேதாந்தியின் துரவும், அமைதி செறிந்த ராஜ கம்பீரமும் கலந்திருக்கும். மிக உயர்ந்த ஜாதிப் பூனைகளுக்குத்தான் இந்த மாதிரி பார்வை உண்டு. கிரெய்க் தம்பதிகளின் வீட்டுக்கு அது எப்படி வந்தது என்ற வரலாறு ஒரு கிறிஸ்துபஸ் கதை. வருஷத்திலேயே பெருமகிழ்ச்சி நிறைந்த பண்டிகை கிறிஸ்துமஸ். மனிதர்களுக்கு எத்தனை அற்புதங்களைச் செய்யவல்லது கிறிஸ்துமஸ் என்பதை நிரூபிப்பது அந்தக் கதை.

கிறிஸ்துமஸின்போதுதான் அந்தக் கறுப்புப் பூனை வந்தது. அதன் பலனுகத்தான் சில நிகழ்ச்சிகள் நேர்ந்தன. அடுத்த வருஷத்திலே தோன்றிய சில விபரீதங்களை அந்தப் பூனையின் பிரசன்னமே தீர்த்து வைத்தது.

கிரெய்க் தம்பதிகளுக்குக் குழந்தையில்லை. அதனுல் அவர்கள் கிறிஸ்துமஸுக்காக ஒன்றும் தடபுடல் செய்யவில்லை. அவர்கள் வீட்டிலே கிறிஸ்துமஸ் மரம் நாட்டவில்லை; மிஸில்டோ என்ற கன்னிமுத்தக் கொடியின் அலங்காரம் இல்லை; பரிசுகள் எவையும் வாங்கவில்லை. அக்கம் பக்கத்து வீடுகளில்தான் கிறிஸ்துமஸுக்காக என்ன குதூகலம்! என்ன பரபரப்பு! அதெல்லாம் வளர்ந்த குழந்தைகளும் வளராச் சிறு குழந்தைகளும் கொண்ட பேருற்சாகத்தின் விளைவே என்று கிரெய்க் தம்பதிகள் நினைத்தார்கள். அவர்களுக்கு யாரும் நண்பர்கள் இல்லை. யாருடனும் பேசாமல் தங்கள் வீட்டுக்குள்ளே அவர்கள் அடைந்து கிடந்தார்கள். பெத்லகேமில் அவதரித்த குழந்தையின் ஜயந்தியை உலகத்து ஆடம்பரங்களுடன் கொண்டாட அவர்களுக்கு ஆசையில்லை. யாரிடமிருந்தும் பரிசுகளை அவர்கள் எதிர்பார்க்கவில்லை; யாருக்கும் பரிசுகளை அனுப்ப அவர்கள் வாங்கிவைக்கவும் இல்லை. ஆனுல் இதெல்லாம் அவர்களுக்குச் சந்தோஷமா? அவர்களுடைய இல்வாழ்க்கைதான் இன்பமாய் இருந்ததோ? இரண்டும் இல்லை.

கிறிஸ்தமஸுக்கு முதல் நாள் மாலையில், யாரோ கதவு மணியை

அடிப்பதாகத் தோன்றி, வாசல் பக்கம் மனைவி சென்றாள். கதவைத் திறந்தாள். யாரையும் காணவில்லை. ஆனால், எதிர்பாராத சின்னஞ்சிறு கறுப்புப் பூனைக்குட்டி ஒன்று நிலைப்படியைத் தாண்டிக் கூடத்திலே போய்ச் சேர்ந்தது. ஒரு மனிதனின் உள்ளங்கையிலே அடங்கிவிடக்கூடிய அவ்வளவு சிறியது அந்தப் பூனைக்குட்டி.

அது கூடத்திலே தங்கவில்லை. பசியால் வாடும் மனிதன் தனக்கு உணவு பரிமாறும்வரை காத்திராமல், உணவைத் தானாகவே எடுத்துத் தின்பானே; அந்த மாதிரி தான் பூனைக் குட்டியும் நேரே விடு விடென்று சமையலறைக்குள் போய்விட்டது. கிரெய்க்கின் மனைவி தன்னை அறியாமலே ஒரு யந்திரம்போல் சிறு கிண்ணம் ஒன்றில் பால் வார்த்து ஒரு மூலையில் வைத்தாள். அதன்பின் என்றுமே அந்த மூலை அதற்குச் சொந்தமாகி விட்டது.

கிண்ணத்தைப் பூனைக்குட்டி இரண்டு தரம் வலம் வந்தது. பிறகு வலமோ இடமோ திரும்பிப் பாராமல் சௌக்கியமாய்த் தரையில் வயிறு பதியப் படுத்துக்கொண்டது. ரோஜாப்பூப் போல் சிவந்து நீண்ட மிருதுவான நாவை நீட்டி நீட்டிப் பாலை நக்கிக் குடிக்கத் தொடங்கியது.

கிரெய்க்கின் மனைவி மெல்லக் கூடத்து அறைக்குள் சென்றாள். அங்கே கிரெய்க் ஏதோ ஒரு புஸ்தகத்தைக் கையில் பிரித்துப் படித்துக்கொண்டிருந்தான்.

"நமக்கு ஒரு பாம்பினோ வந்திருக்கிறது" என்று மெல்லிய குரலில் சொன்னாள் மனைவி.

கணவன் தலையை நிமிர்த்தினான். சிறிது நேரம் மௌன ஆச்சரியத்துடன் மனைவியை வெறித்துப் பார்த்தான். அவன் படித்துக் கொண்டிருக்கும்போது ஒரு நாளும் இவ்விதம் அவன் கவனத்தை அவள் கலைத்ததில்லை.

"பாம்பினோவா? அதென்ன, அன்னா?"

இந்த ஐந்து வருஷ காலத்தில் இப்படித் தன் பெயரைக் கணவன் உச்சரித்தே அவள் கேட்டறியாள். ஒருவரை ஒருவர் பெயர் சொல்லிக் கூப்பிட வேண்டிய பிரமேயந்தான் ஏது? மூன்றாவது பிராணி இருந்தால்தானே வேறு பிரித்துக் குறிப்பதற்குப் பெயர் சொல்லி அழைக்கும் அவசியம் ஏற்படும். 'இதைத் தா,' 'அதைக் கொண்டு வா,' 'இங்கே பார்' என்றே அவர்கள் பரஸ்பரம் சொல்லிக்கொள்வார்கள். அன்பு கனிய ஒருவர் பெயரை ஒருவர் உச்சரிப்பதேயில்லை. அவர்கள் ஒருவரோடும் கலகலப்பாய்ப் பேசியதே கிடையாது.

ஆண்களைவிடப் பெண்களே மிக்க உணர்ச்சிவசப் படக்கூடியவர்கள். தங்கள் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் ரகசியங்களைத் தங்களை அறியாமலே சில சமயம் அவர்கள் வெளியே கொட்டிவிடுவார்கள். என்றாலும், சமையலறையிலே பசியோடு பாலை நக்கும் பூனைக்குட்டிக்குச் சட்டென்று 'பாம்பினோ' என்ற விசித்திரப் பெயரை அன்னா சூட்டியது மட்டும் ஆச்சரியந்தான். அவள் உள்ளத்திலே குழந்தையில்லாக் குறை புல்லரித்துக்கொண்டிருந்தது. கல்யாணமாகியும் மக்கட்பேறு கிட்டவில்லை. வீட்டிலே கலகலப்பில்லாமல் வெறிச்சென்றிருந்தது. கிறிஸ்துமஸுக்கு முதல் நாள் மாலையிலே எங்கிருந்தோ

அநாதையாகப் பசியோடு வந்த அந்தப் பூனைக்குட்டி, தன் உள்ளத்தின் ஏக்கத்தைத் தீர்க்க வந்த தெய்வப் பரிசு - வீட்டின் வெறிப்பைப் போக்கத் தோன்றிய ஜீவ பாக்கியம் - என்று அன்னு ஒரு வேளை கருதியிருக்கலாம்.

மனைவியின் விசித்திர வார்த்தைகளைக் கேட்டு, ஜான் கிரெய்க் கலவரமடைந்தான். எழுந்து சமையலறைக்குள்ளே போனான். அங்கே கிண்ணத்துப் பாலைக் குடித்துச் சுத்தமாய் நக்கிவிட்டு எழுந்த சின்னஞ் சிறு கறுப்புப் பூனைக்குட்டியை வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றான். பூனைக்குட்டி அவனிடம் ஓடிவந்து நன்றி செலுத்துவது போல அவன் கால் சட்டையிலே ஒட்டி உராய்ந்துகொண்டது. கிரெய்க் கீழே உட்கார்ந்தான். பாம்பினோ அவன் மடியிலே தாவிப்படுத்தது. மனிதனின் அபார சக்தியையும் அவனுடைய தார்மிக உணர்ச்சியையும் பரிபூர்ணமாய் நம்பியது போல, கிரெய்க்கின் மடியிலே அது தூங்கத் தொடங்கிவிட்டது. இதைக் கண்டு கிரெய்க் வியப்படைந்தான்.

கிரெய்க் தம்பதிகளின் உள்ள உணர்ச்சிகளை அறிந்துகொண்டவர்களால்தான் அவர்கள் வீட்டிலே இப்போது நிகழ்ந்துள்ள மாறுதல்களைக் கண்டுகொள்ள முடியும். அக்கம் பக்கத்து வீடுகளுக்கெல்லாம் அன்னு, ஜான் இருவரும் சென்று, "உங்கள் வீட்டிலிருந்து அழகான பூனைக்குட்டி ஏதாவது காணமல் போயிற்றே?" என்று எல்லாரையும் வெகு அக்கறையோடு விசாரித்தார்கள். கிறிஸ்துமஸுக்கு முந்திய நாள் மாலைமுதல் அது தங்கள் வீட்டில் வந்து வசிப்பதாகவும் தெரிவித்தார்கள். என்ன விந்தை! மிருதுவான பட்டுப் போன்ற அந்தப் பூனைக்குட்டி தங்களுக்குத்தான் சொந்தம் என்று யாரும் பாத்தியம் கொண்டாடவில்லை. இதற்கு மாருக, கிரெய்க் தம்பதிகளை எல்லாரும் பிரமாதமாய் எச்சரிக்கத் தொடங்கிவிட்டார்கள். "பூனைக்குட்டிகள் மோசமான பிராணிகள்; ஏமாற்றும்; திருடும். அவைகளுக்கு ஆளிடம் பிரியமே கிடையாது; வீட்டின்மீதுதான் பிரியம். இதை விட்டுவிட்டு, ஒரு நாய்க்குட்டியை வளர்த்தாலும் பயனுண்டு" என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனல் பூனைக்குட்டியின் பெருமையைக் கிரெய்க் தம்பதிகள் அறிந்துகொண்டார்கள். மனிதர்கள் வளர்த்திருக்கக் கூடிய எந்தப் பிராணியும் பாம்பினோவைவிட அதிக அன்பு காட்டி, கொஞ்சி, விளையாடியிராது. பாம்பினோவின் கண்கள் உருண்டு விசாலமாய் ஈடு இணையற்று விளங்கின. அவற்றிலே சொர்ண வட்டங்கள் துலங்கின. அந்த வட்டங்களுக்குள்ளே சிவப்பும் பச்சையுமான விழிகள் மின்னின. இருண்ட மூலையொன்றிலே அமர்ந்தபடி பாம்பினோ தன் விழிகளைச் செலுத்தி, நாலுபக்கமும் நடப்பதையெல்லாம் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருக்கும். பாம்பினோவின் வெல்வெட்டுப் போன்ற பாதங்களுக்கும், அதன் சூட்சுமமான காதுகளுக்கும் ஈடு ஜோடி எங்கும் இருக்க முடியாது. கடைந்தெடுத்தது போன்ற மூக்கு; உற்சாகமும் சுறுசுறுப்பும் அறிவும் நிறைந்த குஞ்சல முகம்; பால்போல் வெண்மையாய், ஊசி முனைபோல் கூர்மையாய்ச் சிலிர்த்த மீசை-இந்த லட்சணங்களோடு சிறிய புலிக்குட்டி போல் விளங்கியது பாம்பினோ. அதன் தளுக்கு, ஒய்யாரம்,

சுயேச்சை, அழகு இவைகளையெல்லாம், எவ்வளவுதான் நன்றியுள்ள நாயிடமும் காணமுடியாது.

அதன் விஷமம் சொல்லி முடியாது; அழகிய திரைகள்மீதெல்லாம் தன் பாத நகங்களைப் பாய்ச்சிப் பொத்துவிட்டது. ஜானின் ஸிகரட் டப்பாவை மேஜையிலிருந்து உதைத்துத் தள்ளித் தரைமீது உருட்டி நொறுக்கியது. தளர்நடை போடும் குழந்தைபோலும், அபிநயித்து ஆடும் நாட்டியக்காரிபோலும் நடித்து, ஜானின் ஸிகரெட் டப்பாவுடன் கண்ணாமூச்சி விளையாடியது. கீழே விரித்திருந்த ரத்தினக் கம்பளத்துக்கு அடியிலே அதை ஒளித்து வைத்துவிட்டு வெகு நேரம் தேடியது. கடைசியில், உபயோகிக்க முடியாதபடி நசுங்கிய நிலையில் அதை வெளியே எடுத்தது. ஜான் வருத்தத்துடன் பெருமூச்சு விட்டான். ஆனால் பாம்பினோவிடம் கோபம் கொள்ளவில்லை.

வீட்டிலே வெகு நேரம் தன்னந் தனியே அடைந்து கிடந்த அன்னாவுக்கு இப்போது பேச்சுத் துணை கிடைத்துவிட்டது. பாம்பினோவுக்கும் அவளுக்கும் பரஸ்பர பாஷை புரிந்துவிட்டது. பாம்பினோவுக்குப் பசியெடுத்தால் ஒரு வித 'மியாவ்,' அது விளையாட விரும்பினால் இன்னொரு வித 'மியாவ்,' அதன் தூக்கம் கலைந்தால் வேறொரு வித 'மியாவ்'-இப்படி வெவ்வேறுவகைக் குரல் கொடுக்கும். எஜமானின் மடி மீது உட்கார விரும்பினால், அது அவனைப் பிறாண்டும். தனக்குப் படுக்கையில் இடம் ஒழித்துத் தர வேண்டுமென்று கேட்க, எஜமானியின் முகத்தைப் பார்க்கும். பேச்சற்றிருந்த கிரெய்க் தம்பதிகளின் வீட்டுக்கு பாம்பினோ கொண்டு வந்த கிறிஸ்துமஸ் பரிசு பேச்சு.

பாம்பினோ அவர்களுடைய அறையிலே தூங்கும். அதிகாலையில் தன் மிருதுவான சின்னஞ்சிறு பாதத்தால் அவர்களுடைய முகத்திலே தட்டி அவர்களை எழுப்பும். அன்பு செலுத்தவும் சிந்திக்கவும் அவர்களுக்கு இப்போது ஒரு பிராணி கிடைத்துவிட்டதால், இருவரும் ஒருவரைப்பற்றி ஒருவர் நினைக்கத் தொடங்கினார்கள். அவர்கள் இப்படிச் செய்து எத்தனையோ வருஷமாயிற்று. வளரும் பூனைக்கு உணவூட்டுவதன்மூலம், தங்கள் காதல் ஜ்வாலைக்கு அவர்கள் உணவூட்டினார்கள். அணையும் தருவாயிலிருந்த அது மீண்டும் உயிர் பெற்று ஓங்கி வளர்ந்தது.

அன்னாவும் ஜானும் மகிழ்ச்சி பெற்றார்கள். அவர்களைக் கண்டு ஊரார் நகைக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

இந்தக்கிறிஸ்துமஸிலே அவர்கள் மூன்று பேர் இருக்கிறார்கள். அவர்கள் குதூகலத்துடன் நெடுநாளாய்க் காலியாகக் கிடந்த தங்கள் மேஜைமீது கிறிஸ்துமஸ் மரத்தை நட்டார்கள்.

நாளைக்கு நீங்கள் லண்டன் ரோடு வழியாகப் போக நேர்ந்தால், அன்னாவும் ஜானும் வசிக்கும் வீட்டு ஜன்னலிலே கரும்பட்டுப் போல் அழகான கறுப்புப் பூனை ஒன்றைக் காண்பீர்கள். அது மாதிரி பூனையை இதுவரைக்கும் நீங்கள் எங்கும் கண்டிருக்க முடியாது. வசீகரமும் லாகவமும் வாய்ந்த அதன் நீண்ட காவுக்கு ஜோடியாக ரோஜா நிற ரிப்பன் ஒன்று அதன் கழுத்திலே சுற்றியிருக்கும். அதற்குக் கிடைத்த கிறிஸ்துமஸ் பரிசு அந்த ரிப்பன்.

காலைப் பிறை

★

பாரத நாட்டின் புராதன ரீதியில் இந்தியப் பண்பாட்டை ஒட்டிப் பல கதைகள் எழுதிக் கீர்த்தி பெற்றவர் இந்த ஆசிரியர். இதுவும் அந்த மாதிரியே காதலின் உண்மையை உணர்த்தும் ஓர் அழகிய கதை. இதன் தமிழ் மொழிபெயர்ப்பு ஐந்து பதிப்பு வெளிவந்ததே இதன் மதிப்பைக் காட்டும்.

மூலம்: **எப். டபிள்யூ. பெயின்**

மொழிபெயர்ப்பு: **கி. சாவித்திரி அம்மாள்**

காப்பிரைட்: காலைப் பிறை (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்), விலை ரூ. 1-4-0.

வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

காலைப் பிறை

முன் ஒரு காலத்தில் முழு மூடனான ஓர் அரசன் இருந்தான். பராக்கிரமசாலி அவன் சத்துரு. எழில் மிகுந்தவள் அவன் மகள். ஒரு நாள் அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று: 'ஆஹா! இந்த அமுதத்தையும் அந்த விஷத்தையும் கலந்துவிடுவதுதான் சரி. என் மகளின் லாவண்யத்தைக் கொண்டு என் சத்துருவின் விரோத நெருப்பை அணைத்து விடுகிறேன். அதனால் என் ராஜ்யத்துக்கு க்ஷேமம் உண்டாகும்; என் மனத்துக்கு அமைதி ஏற்படும். என் மகளுக்குக் கணவன் கிட்டுவான்.'

பொழுது விடிந்ததும் அரசன் ஒரு தூதனை அழைத்துப் பின் வரும் செய்தியுடன் தன் சத்துருவிடம் அனுப்பினான்:

"நமக்குள் இருக்கும் பகைமையை ஒழித்து நாம் இருவரும் இனி நண்பர்களாவோம். என் மகளை உனக்கு அளிக்கிறேன்; மணம் புரிந்துகொள்."

சில நாட்கள் சென்றன. சென்ற தூதன் திரும்பி வரவில்லை. அரசனுக்கோ அவசரமும் ஆத்திரமும் அதிகரித்தன. ஒரு நாள் மன்னன் தன் மகளுடன் வீற்றிருக்கும்போது தூதன் வந்தான்.

"அரசே, இவ்வளவு தாமதத்துக்குத் தாங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் மருமகனுடைய விசித்திரச் செய்கையே காரணம். சில காலத்துக்கு முன்பு ஒரு சிற்றரசனை யுத்தத்தில் வென்று, திடீரென்று ஊருக்குத் திரும்பி அரண்மனைக்குள் அவர் பிரவேசித்தாராம். அப்போது அவருடைய ஒரே பட்டமகிஷி தன் இஷ்டநாயகனுடன் பேசிக்கொண்டு இருந்ததைப் பார்த்துவிட்டாராம். உடனே, 'சீ என்ன உலகம்!' என்று வெறுப்புத் தோன்றவே, அரசியை நாட்டை விட்டுத் துரத்திவிட்டு நகரெல்லையிலுள்ள வனத்தில் ஒரு தாமரைத் தடாகத்தின் அருகில் இருக்கும் பாழடைந்த சிவாலயம் ஒன்றில் சென்று வசித்துக்கொண்டிருக்கிறார். ஒருவரையும் பார்ப்பதுமில்லை; பேசுவதுமில்லை. என் வருகையையும் செய்தியையும் அறிவிப்பதற்கே வெகு காலமாகிவிட்டது. கடைசியில் மன்னரைப் பார்க்க அனுமதி கிடைத்தது. என்னை நோக்கிக் கம்பீரமான தொனியில் அவர் பேசினார்: 'தூதனே, போ. இருவருடைய ராஜ்யங்களின் க்ஷேமத்துக்காகவும் நான் உன் அரசர் கூறுவதற்குச் சம்மதிப்பதாகச் சொல். நான் அவருடைய மகளை மணம் புரிந்துகொள்வதனால் நமக்குள் இருந்த பகைமை நீங்கி நட்பும் சமாதானமும் ஏற்படட்டும். என் மகிஷியாய் இருப்பதற்குரிய சகல மரியாதைகளையும் நான் அந்த ராஜகுமாரிக்குச் செய்வேன். ஆனால் என் மனைவியாக மட்டும் அவளைப் பாவிக்க முடியாது. எங்கள் இருவருக்கும் அக்கினி சாட்சியாய் மணம் முடிந்ததும் அவள் தன் அரண்மனைக்கே திரும்பிச் சென்று என்னை மறந்து வசிக்கட்டும்' என்றார்" என்று தூதன் சொன்னான்.

"பேஷ்! வெகு நன்றாயிருக்கிறது. நம்மையும் நம் மகளையும் அவமானப்படுத்துவதன் பொருட்டுக் கூறிய வார்த்தையோ இது?" என்றான் அரசன்.

பக்கத்தில் உட்கார்ந்திருந்த ராஜகுமாரி இதைக் கேட்டுச் சிரித்து, "தந்தையே, இதென்ன? இவ்வளவு வயதாகியும் உங்களுக்கு உலகம் இன்னதென்று தெரியவில்லையே! ஸ்திரீ புருஷர்களின் தொடர்பு, ராஜதந்திரம் இவைகளை அறியாமல் இருப்பதுடன் என்னைப் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ளவில்லையே! அவர் புருஷ சிம்மம் போன்றவர்; உங்களுக்கு அனுப்பியிருக்கும் பதிலிலிருந்தே அவர் என்னை மனைவியாகப் பெற்றுத் தங்களுக்கு மருமகனவதற்கு ஏற்றவர் என்பதை நீங்கள் அறியவில்லையே. ஒருவன் தன் ஆயுள் முழுவதும் பெண்ணின்பத்தை நுகராமலே கழித்துவிடலாம் என்பதும், ஒரு தடவை நுகர்ந்து பார்த்தவன் பிறகு தேவாசுரர்கள் குறுக்கே நின்றபோதிலும் அதை மீண்டும் பெற முயலுவான் என்பதும் உங்களுக்குத் தெரியவில்லையே! நீங்கள் என்னைப் பற்றியும் அறிந்துகொள்ளவில்லை. நான் அவரை மணம் புரிந்து கொள்வேன். அவரை என் வசப்படுத்தி, பாம்பாட்டியைப்போல் என் தந்திர சாமர்த்தியங்களினல் நான் ஆட்டிவைக்கிறபடியெல்லாம் அவரை ஆடச் செய்வேன். கணவனைத் தன் வழிக்குக் கொண்டு வாராதவளும் ஒரு பெண்ணா?" என்றாள்.

அரசன் தன் மகள் கூறியதை ஏற்றுக்கொண்டான். சத்துருவுக்குப் பின்வரும் செய்தி அனுப்பினன்: "நீ கூறும் நிபந்தனைகளுக்கு இசைந்து அமாவாசைத் தினத்தன்று என் குமாரியைப் பரிஜனங்களுடன் அனுப்புகிறேன். உனக்கு நற்புத்தியும் மங்களமும் உண்டாகட்டும்."

தூதன் புறப்படும் சமயம் ராஜகுமாரி, "உம்முடைய அடியாள் அமாவாசையன்று வருவாள். தேவரீருடைய கட்டளையின்படி நடக்க அவள் சித்தமாய் இருக்கிறள். அவள் வந்து சேர்ந்தவுடன் அந்தச் செய்தியை ஒரு தாதியின் மூலம் தங்களுக்கு அறிவிப்பாள். தாங்களாக விரும்பும்வரையில் அவளைக் கண்ணால் கண்டு அவள் மொழிகளைக் காதால் கேட்கும் தொல்லை தங்களுக்கு ஏற்படாது' என்று தெரிவிக்கவேண்டும்" என்றாள்.

அப்படியே தூதன் சென்று அந்த வாலிப மன்னனிடம் செய்தியைக் கூறினன்.

கிருஷ்ணபட்சம் சதுர்த்தசியன்று ராஜகுமாரி அரசன் இருந்த சிவாலயத்துக்கு அருகே தன் பரிவாரங்களுடன் வந்து தங்கினள்.

அமாவாசை கழிந்து பிரதமை வந்தது. அதிகாலையில் சூரியன் உதிப்பதற்குமுன் எழுந்து வாலிப மன்னன் ஆலயத்துக்கு வெளியே குளத்துப் படியில் வந்து நின்றான். திடீரென்று மரங்களுக்கிடையே குளக்கரையோரமாய்ச் சேடியொருத்தி தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அமாவாசை இரவு போன்ற கருநிற ஆடையை அவள் அணிந்திருந்தாள். சந்திரகலைபோல் வெளுத்த மாம்பூவின் கொத்தொன்று அவள் கையில் விளங்கிற்று. ஆச்சரியமும் வெறுப்பும் கொண்ட அரசன் முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டான்.

அந்தப் பெண் அரசனை நெருங்கிச் சிறிது தூரத்தில் நின்று கொண்டாள். "அரசே, என் தலைவி வந்துசேர்ந்த செய்தியைத் தங்களுக்கு அறிவித்து வரும்படி என்னை அனுப்பினுள். இந்த மலரைத் தங்களிடம் சேர்ப்பித்து, தன் காதர் சுகமாய் உறங்கிய க்ஷேம சமாசாரத்தைத் தெரிந்து வரும்படி என்னை அனுப்பியிருக்கிருள்" என்ருள்.

அரசன், "சேடியே, உன் தலைவியிடம் என் சந்தோஷத்தைச் சொல். தூக்கம் என்பது அவளைப்போல் உலகமறியாதவர்களுக்கு ஏற்பட்டது; மனநோய் கொண்டவனுக்கு ஏற்பட்டதல்ல. அவனுக்குப் போது விடிவதே தூங்காத இரவுக்கு மருந்து" என்ருன்.

சேடி, "அரசே, இதைக் காட்டிலும் சிறந்த மருந்துகள் உலகில் எவ்வளவோ இருக்கின்றன. தங்கள் வியாதியையும் அதற்குரிய சிகிச்சையையும் நான் அறிவேன்" என்ருள்.

அரசன் வியப்புடன், "பெண்ணே, நீ உன் இனத்துக்கேற்ற துணிவு கொண்டவளாக இருக்கிருய்" என்ருன்.

"அரசே, உலகில் ஸ்திரீ புத்தியே அதிக சஞ்சலமானதென்று சொல்லுவார்கள். அப்படியிருந்தும் தாங்கள் ஒரு ஸ்திரீயின் நிலையற்ற தன்மையைக் குறித்து வருந்திக்கொண்டு இந்தப் பாழடைந்த கோயிலில் அடைந்து கிடக்கிறீர்கள். தங்களைப்போலவேதான் முற்காலத்தில் உலக அறிவு முற்றும் பெருத ஒரு வாலிப மன்னன் இருந்தான். அவனுக்கு அவன் அன்பை முற்றும் கொள்ளைகொண்ட மனைவி ஒருத்தி இருந்தாள். ஆனுல் அவள் நெடுநாள் ஜீவித்திருக்கவில்லை. தங்களைப்போலவே அந்த மன்னனும் யாவற்றையும் துறந்து தீராத துக்கத்தில் மூழ்கிப் பாழடைந்த ஒரு கோயிலில் வசித்துவந்தான். அவனைத் தேற்றி ராஜ்யத்துக்குத் திரும்பி வரும்படி செய்ய எவருக்கும் சக்தி இல்லை. கடைசியில் வயது முதிர்ந்த ஒரு பெரியார், மரவுரி அணிந்திருக்கும் மன்னனை அணுகி மௌனமாய் நின்ருர். அப்போது ஒரு மூங்கில்கொம்பிலிருந்து வாடி வதங்கிய இலையொன்று பூமியில் உதிர்ந்தது. அதைப் பார்த்துக் குரு, 'ஐயோ' என்று வாய் விட்டுத் துக்கித்தார்; பூமியில் விழுந்து புரண்டு கோவென்று கதறினர். 'அடடா! ஸ்வாமி, எதற்காக இவ்வளவு வருத்தம்?' என்று அரசன் கேட்டான். 'ஐயோ, என்ன காலம்! அந்தக் கொம்பிலிருந்து இலை உதிர்ந்ததை நீ கவனிக்கவில்லையா?' என்று குரு சொன்னுர். அரசன் வியப்படைந்து, 'ஸ்வாமி, இதென்ன தங்களுக்கு இவ்வளவு அறியாமை! மரத்திலிருந்து ஓர் இலை உதிர்ந்ததற்கே தாங்கள் இப்படித் தீராத துயரம் அடைகிறீர்களே!' என்ருன். அதற்குக் குரு, 'அரசே, ஓர் இலை உதிர்ந்ததைக் குறித்து நான் துக்கிப்பதை நீ அறியாமையென்று பரிகசிக்கிருயே. சாவென்பது இதைக் காட்டிலும் வெகு பெரிதா? அப்படியிருந்தும் நீ ஒரு மங்கையின் மரணத்துக்காக உலகத்தையே முற்றும் துறந்துவிட்டாய். ஒரு பெண்ணின் சாவு, சிருஷ்டி என்ற விருட்சத்தினின்றும் ஓர் இலை உதிருவது போன்றதேயல்லாமல் வேறென்ன?' என்ருர். காற்றிலடிபட்ட மூங்கில் இலைபோன்றதே

பெண்களின் மனம். அதன் நிலை யற்ற தன்மைக்காக எல்லாவற்றை யும் தாங்கள் துறந்திருக்கும் அறி யாமையை என்ன என்று சொல்லு வேன்?"

இப்படிச் சொல்லிவிட்டுச் சேடி தன் கையில் இருந்த மாம்பூங் கொத்தை அரசனின் காலடியில் வைத்துவிட்டுத் திரும்பி மரங்களி னிடையே சென்று மறைந்துவிட் டாள்.

இரவு முழுவதும் தூக்கம் வராமல் சருகுப் படுக்கையில் படுத்துப் புரண்டு கொண் டிருந்த அரசன் போது விடியு முன் எழுந்து ஆலயத்துக்கு வெளியே குளத்துப் படியில் வந்து நின்றான். விடியற்காலையில் ஒளி மங்கிய நக்ஷத்திரங்கள் நீரில் பிரதி பலித்தன. அரசன் மரங்க ளிடையே நோக்கியதும் முதல்நாள் போலவே காலில் சதங்கை ஒலிக்கச் சேடி கையில் ஒரு பாதிரிப் பூவை ஏந்தியவளாய்த் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். மன்னனை அணுகி அவள், "அரசே, என் தலைவி இந்த மலரைத் தங்களுக்கு அனுப்பி, தாங்கள் இரவு சுகமாய் நித்திரை செய்த க்ஷேம சமா சாரத்தை அறிந்து வரும்படி கூறி னாள்" என்றாள்.

"சேடியே, 'காற்றில் பறந்து செல்லும் உலர்ந்த இலைகளைக் காட்டிலும் உறுதியற்றவர் ஸ்திரீ கள்' என்று நீயே சொல்லுகிறாய். அப்படிப்பட்ட ஒரு ஸ்திரீயின் கொடு மைக்கு ஆளாகி மனம் வருந்தும் ஒருவனுக்குத் தூக்கம் எங்கிருந்து வரும்? நீயே சொல்" என்றான்.

"அரசே, ஸ்திரீகள் அனைவரும் காற்றில் அடிபட்ட மூங்கில் இலை கள்போல் மன உறுதியற்றவர் களே; ஆயினும் செடியைப் பார்த்து மலர்களை நிர்ணயிக்க முடியுமோ? நானும் மற்றவர்களும் பூண்டுகளுக்குச் சமானமே. என் தலைவியோ சிறந்த இந்தப் பாதிரிப் பூப் போன்றவள். அரசே, மலர்கள் அனைத்தையும் ஒன்றாய்ப் படைத் தும், அவை ஒவ்வொன்றுக்கும் ஒரு தனி அழகையும் வாசனையையும் அமைத்திருக்கும் கடவுள் ஸ்திரீ களைமட்டும் அறிவில்லாமல் ஒரே மாதிரியாய்ச் சிருஷ்டிப்பாரென்று தாங்கள் கருதுகிறீர்களா?" என்று சொல்லிச் சேடி அரசனை நிதான மாய்ச் சற்று நோக்கினாள். பிறகு கையில் இருந்த மலரை மன்ன னின் பாதத்தடியில் வைத்துவிட்டு வந்த வழியே சென்றுவிட்டாள்.

போது விடிந்ததும் மன் னன் எழுந்து கரையோரமாய்ப் படித்துறையில் வந்து நின்றான். தினந்தோறும் வரும் சேடியை அன்று காணவில்லை.

"இந்த வனம் இன்று காலை சோபை குறைந்து காண்கிறதே! இந்த மரங்கள், தாமரைத் தடாகம், கோயில் எல்லாம் எப்போதும் இருப்பது போலத் தான் இருக்கின்றன. சேடியும் அவள் கொண்டுவரும் மலரும் மட் டுமே இல்லை. அந்தக் குறை ஒன்றி னாலேயே இந்த வனத்தில் இவ் வளவு மாறுதல் ஏற்படக் கூடுமா?" என்று எண்ணிப் படியில் அமர்ந்து பொய்கையை நோக்கியபடி சற்று நேரம் இருந்தான். 'ஆஹா! என்ன மணம் பொருந்திய மலர்கள்! அந்த யுவதியோ—பகலுக்கும் இரவுக்கும் இடையிலுள்ள சந்தி யைப் போல் பால்யம், யௌவனம் இரண்டும் அற்ற நிலையில் விளங்குகிறாள். மெல்லிய பாதம்

பூமியில் பட்டும் படாமலும் நடந்து வரும் அவள் உருவம் என் கண் முன்னேயே நிற்கிறதே! மலை மீது படிந்திருக்கும் இளம் பனி போல் ஒரு நீலத்துகில் அவள் மேனியை மறைத்திருந்தாலும் அது அவள் சௌந்தரியத்தைத்தான் இன்னும் அதிகரிக்கச் செய்கிறது. ஆஹா, அவளுடைய இனிய குரலோசையில் ஓர் அபூர்வ சக்தி இருக்கிறது. அவள் குரல் இப்போதும் என் காதில் ஒலிக்கிறது. நாளைக் காலை மீண்டும் அதைக் கேட்கும் வரையில் நான் காத்திருக்க வேண்டுமே! ஆனால் நாளைக்கு மட்டும் அவள் வருவாள் என்று என்ன நிச்சயம்? இன்று போல் நாளைக்கும் ஏதாவது தடங்கல் நேர்ந்து அவள் வராமலே இருந்து விடுவாளோ?'—இப்படிப் பலவிதமாய் அலைபட்ட உள்ளத்துடன் அவன் அன்று பகலைப் போக்கினன்.

இரவை ஒருவாறு கஷ்டப்பட்டுக் கழித்து, விடிய வெகு நேரம் இருக்கும்போதே அரசன் எழுந்து குளப்படியில் வந்து நின்றான். கதிரவன் உதயமானன். சேடியும் விரைவாய்த் தன்னை நோக்கி வருவதைக் கண்டான். அவள் அரசனை அணுகி, "ஐயனே, என் தலைவி இந்தச் சண்பக மலரைத் தேவரீருக்கு அனுப்பித் தங்கள் சௌக்கியத்தை அறிந்து வரும்படி சொன்னாள்" என்றாள்.

அரசன், "பிரிய சேடியே, நண்பர் துறந்த ஒருவனுக்குச் சௌக்கியம், நிம்மதி இவை உண்டா? நீயே சொல்" என்றான்.

"அரசே, தங்களுக்குத் தெரியாத ஒரு விஷயத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன், கேளுங்கள்: பரிபூர்ணமான நிலையை அடைவதற்கு மூன்று விதமான அன்பு சேரவேண்டும். அதாவது: சரீரத்தைப்பற்றியதும், புத்தியை அடுத்ததும், ஆத்மாவை அண்டியதுமான மூன்று அம்சம் அன்பில்சேர வேண்டும். அப்படிப்பட்ட அன்பு ஒரு ஸ்திரீக்கும் புருஷனுக்குமே ஏற்படக் கூடியது. தன் காதலனின் அன்பை ஆயுள்பரியந்தம் பெற விரும்புபவள் முதலில் குற்றமற்ற ஆகிருதியை உடையவளாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அவன் மனம் வேறு சரீரங்களை நாடிச் சென்றுவிடும். இரண்டாவது புத்தி. இது இல்லாவிட்டால் காதலனின் மதிப்பு வேறு இடம் சென்றுவிடும். மூன்றாவது, குணம். அது இல்லையென்றால், அவன் உள்ளமே அவளை விட்டு அகன்று விடும். இந்த விஷயத்தில் ஸ்திரீகளுக்கு எவ்விதமோ அவ்விதமேதான் புருஷர்களுக்கும். அரசே, அந்த முக்குணங்களும் பொருந்திய காதலை என் தலைவியிடம் தாங்கள் பெறுவீர்களென்பதில் ஐயமில்லை. அவள் தங்களுக்கு உரியவள் என்பதே என் நம்பிக்கை."

அவள் சொல்லி முடிக்கும் வரையில் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்த அரசன் திடுக்கிட்டு, "உன் எஜமானியைப்பற்றிப் பேச வேண்டாம். உன்னைப்பற்றிச் சொல்; கேட்பேன். உன் அன்பை என்றும் நிலைத்திருக்கும்படி செய்யக்கூடிய அந்த முக்குணங்களை நீ நிச்சயம் பெற்றிருக்கிறாய். நீ சொன்னபடி அவை உன்னையும் உன் காதலனையும் என்றும் அறுபடாவண்ணம் உறுதியாகச் சேர்த்துப் பிணைத்திருக்கும் அல்லவா?" என்றான்.

சேடி உதட்டில் விரலை வைத்து அரசனை எச்சரிக்கை செய்பவள் போல் தலையை அசைத்தாள். பிறகு, "ஸ்...நீங்கள் இப்படிப் பேசினால் நான் இனி இங்கே வர மாட்டேன்" என்று ஒரு புன்னகையுடன் கூறி, மலரைக் கீழே வைத்துவிட்டுச் சென்றாள்.

அரசன் இரவு முழுவதும் நன்றாய்த் தூங்கினான். கண் விழித்த சமயம் போது விடிந்துவிட்டது. எழுந்து வெளியே வந்தபோது கையில் ஒரு செந்தாமரை மலருடன் சேடி குளப்படியில் காத்துக்கொண்டு நின்றாள். அவள் நிமிர்ந்து, "என் தேவி இந்த மலரை அளித்து இரவு தாங்கள் சுகமாகத் தூங்கியெழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, இழந்த மன அமைதியை மீண்டும் பெற்றவன் நன்றாய்த் தூங்குவதற்கு என்ன? உன் தயையால் எவ்வளவோ காலமாய் இல்லாத ஓர் ஆழ்ந்த நித்திரை நேற்றிரவுதான் எனக்குக் கிட்டிற்று."

சேடி மதுபமஞ்சரி நகைத்து, "அரசே, தங்களைப் பார்க்கும்போது, முன் ஒரு காலத்தில் மீன் பிடித்து ஜீவித்து வந்த ஒரு செம்படவனுடைய கதை எனக்கு ஞாபகம் வருகிறது. ஒரு நாள் அவன் கடலில் மீன் பிடிக்கும்போது அழகிய பொன் மீன் ஒன்று அவன் வலையில் சிக்கிற்று. அந்த மீனைக் கையில் எடுக்கும் சமயம் அது நழுவி மீண்டும் கடலுக்குள் குதித்துவிட்டது. அதற்காக அவன் கண்ணீர் விட்டு அழுது தன்னை நொந்துகொண்டான். சிறிது நேரம் கழித்து அவன் மீண்டும் வலையைக் கடலில் வீசியெறிந்தான். அந்த முறை வெள்ளி மீன் ஒன்று அகப்பட்டது. பிறகு அதுவும் நழுவிக் கடலுக்குள் சென்றுவிட்டது. அவன் வெகு நேரம் துக்கித்தான். பிறகு ஒருவாறு தேறி மறுபடியும் வலையை வீச, ஒரு சாதாரண மீன் அதில் சிக்கிற்று. அதை எடுத்துப் போய்ப் பொன்மீன், வெள்ளிமீன் எல்லாவற்றையும் அடியோடு மறந்து சந்தோஷமாயிருந்தான்" என்றாள் அவள்.

"பிரிய சேடியே, அந்த அற்பச் செம்படவனுடன் என்னை ஒப்பிட்டுக் கூறிய உனது குறும்புத்தனத்துக்காக நான் இப்போது உன்னைக் கோபித்துக்கொண்டால் என்ன?"

"அரசே, நேரமாகிறது. நான் போகவேண்டும்" என்று கூறிக் கையில் இருந்த தாமரை மலரைக் கீழே வைத்துவிட்டுத் திரும்பிச் சென்ற சேடி கண்ணுக்கு மறையுமுன் மன்னனை ஒரு முறை மறுபடியும் நோக்கிவிட்டு மரங்களுக்கு இடையில் மறைந்தாள்.

அன்றிரவு முழுவதும் அவனுடைய ஆழ்ந்த நித்திரையில் மதுபமஞ்சரியின் நினைவே தாண்டவமாடியது. காலையில் போது விடிவதற்குமுன் எழுந்து குளப்படியில் வந்து நின்றான். 'ஆஹா! அவள் இப்படி என் இருதயத்தில் பிரவேசிக்க நான் இடம் கொடுத்தது சரியா?' என்று எண்ணும்போது, கையில் ஒரு சிரீஷ மலரை ஏந்தியபடி அவள் எதிரே வருவதைக் கண்டான். அவள் அவனை அணுகி, "இந்த மலரை அனுப்பித் தேவரீருடைய க்ஷேமத்தை அறிந்துவர என் தேவி விரும்புகிறாள்" என்றாள்.

"பிரிய சேடியே, பயமும் சந்தேகமும் கொண்டவனுக்கு நல்ல தூக்கம் எப்படி உண்டாகும்?" என்றான்.

"அரசே, தைரியமும் நம்பிக்கையும் இல்லாமல் எவன் ஒரு காரியத்தைச் செய்யப் பயப்படுகிறானோ அவன் ஒருகாலும் ஜயம் அடைய மாட்டான். கொடிய ஜந்துக்களும் அழகிய நாககன்னிகைகளும் வாசம் செய்யும் ஆழ்ந்த கடலுக்குள் அமிழ்ந்து கிடக்கும் பெறற்கரிய நிதிகள் அவனுக்குக் கிட்ட மாட்டா. முன் ஒரு காலத்தில் செட்டி குமாரன் ஒருவன் கடலில் பிரயாணமானான். அவன் வெகு தூரம் சென்று நடுக்கடலை அடைந்தபோது திடீரெனக் காற்று நின்று பாய்மரம் சாயவே, கப்பல் நின்றது. அப்போது கடலிலிருந்து ஒரு பவழக் கொடி மேலே கிளம்ப, அதன் மீது நாககன்னிகை ஒருத்தி உட்கார்ந்திருப்பதை அவன் கண்டான். 'கடலுக்குள் குதித்து என்னுடன் வந்துவிடு. வியாபாரிகள் கனவிலும் கண்டறியாத சிறந்த ரத்தினங்களை உனக்கு அளிக்கிறேன். மானிடர்கள் பெறற்கரிய இன்பங்கள் தெவிட்டிப் போகுமளவும் நீ அநுபவிக்கும்படி செய்வேன்' என்று அவள் செட்டி குமாரனை அழைத்தாள். அவள் கூறியபடி கடலுக்குள் குதித்துவிட அவன் துணியவில்லை. திடீரென்று அந்தப் பவழக்கொடி அந்த அழகிய நாககன்னிகையுடன் ஜலத்துக்குள் அமிழ்ந்து மறைந்து போயிற்று. இந்த அதிசயத்தைப் பார்த்திருந்த செட்டிமகன் மிகுந்த வருத்தத்துடன் கப்பலைச் செலுத்தினான். அவன் சிறிது தூரம் செல்வதற்குள் ஒரு கடும் புயல் கிளம்பி அடிக்க, கப்பலுடன் கடலுக்குள் மூழ்கி இறந்தான். இப்படி அவன் தனக்குக் கிட்டவிருந்த எல்லாச் செல்வங்களையும் இழந்தான்; ஆயினும் தான் எதற்குப் பயந்தானோ அந்த ஆபத்திலிருந்து தன் உயிரைக் காத்துக்கொள்ளவும் அவனால் இயலாமற் போயிற்று. அரசே, இந்த வாழ்வோ மிகவும் அநித்தியமானது; கடலின் அலைகளைக்காட்டிலும் ஸ்திரமற்றது. வாழ்நாளில் எப்போதோ ஒரு தரம் அதிருஷ்டவசமாய்க் கிடைக்க இருப்பதை அடைவதா, இழப்பதா என்று தீரபுருஷன் யோசிப்பானா? அப்படி ஒரு நிமிஷமாவது யோசிப்பதற்குத் தான் இந்த வாழ்வில் என்ன இருக்கிறது!" என்றாள்.

இப்படிச் சொல்லிவிட்டு, அவள் தன் கையில் இருந்த சிரீஷமலரை அரசனின் காலடியில் வைத்துவிட்டு மெதுவாய்த் திரும்பிச் சென்று மரங்களுக்கிடையே மறைந்தாள்.

இரவு முழுதும் தன் சந்தேகங்களினால் வருந்திக்கொண்டிருந்த அரசன், போது விடியுமுன் எழுந்து வெளியே சென்றான்.

ஒரு கதம்ப மலரைக் கையில் ஏந்தியபடி சேடி மெதுவாய் வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவள், "என் தலைவி இந்த மலரை அளித்து இரவில் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த செய்தியை அறிந்துவரும்படி சொன்னாள்" என்றாள்.

"பிரிய சேடியே, செய்த பாபத்துக்கு மன்னிப்பை வேண்டும் ஒருவன் எப்படித் தூங்குவான்?" என்று அரசன் கேட்டான்.

"அது என்ன?"

"முன்பே என் சிறு படகு நடுக்கடலை அடைந்து மிதந்துகொண்டிருக்கிறது. ஜலத்துக்குள் என்

னைக் குதித்துவிடும்படி உத்தர வளிக்க அந்தப் பவழக் கொடியில் வீற்றிருந்த பெண் ஒருத்திதான் தேவை.''

ஆனந்தத்தால் சலிக்கும் கண்களுடன் சேடி அவனை நோக்கி, "அரசே, அப்படிப்பட்ட பெண்களை உலகில் காண்பது மிகவும் அரிது. என் தலைவியைப் போன்ற சாதாரண மானிட ஸ்திரீ ஒருத்தியைப் பெற்றுத் தாங்கள் திருப்தி அடைய வேண்டியதுதான்'' என்றாள்.

"உன் எஜமானியைப்பற்றி என்னிடம் சொல்லாதே. நான் கேட்க மாட்டேன்.''

"என் தேவி என்னைவிட எவ்வளவோ அழகு வாய்ந்தவள்; நல்ல உயரம். அவளுக்குக் கவிதா வன்மை உண்டு. தேவேந்திரன் சபையிலுள்ள அப்ஸர ஸ்திரீயைப் போல் என் தேவி பாடுவாள்; நடனம் புரிவாள்.''

"என்னை நோக்கி நீ வரும்போது கேட்கும் உன் காலடிச் சப்தத்தைக் காட்டிலும் வேறு சிறந்த நடனம் எதவும் எனக்கு வேண்டாம். வண்டுகளின் ரீங்கார ஒலியைக் காட்டிலும் மதுரமாக இருக்கும் உன் குரலோசையே எனக்குப் போதும்'' என்று அரசன் சொல்லும்போது ஒரு வண்டு 'ரிங்' என்று பறந்து வந்து அவள் கையில் இருக்கும் மலருக்குள் நுழைந்தது.

உடனே சேடி விரைவாய் இதழ்களை மூடி, "அரசே, தங்கள் பைத்தியத்தைச் சிட்சிப்பதன் பொருட்டு நான் இந்த மலருக்குள் அந்த வண்டைச் சிறைப்படுத்தி விட்டேன். எங்கே, நிஜமான அந்த வண்டா அல்லது அதன் ரீங்கார ஒலியுடன் ஒப்பிடும் என் குரலோசையா, இவற்றில் எது அதிக இனிமை? உண்மையாகச் சொல்லுங்கள், பார்க்கலாம்'' என்றாள்.

மலரின் அருகிற் செவி சாய்த்துக் கேட்ட அரசன், "என்னால் சொல்ல முடியவில்லை'' என்றான். அவள் முகத்தைக் கூர்ந்து நோக்கி மீண்டும் சொன்னான்: "நீ இப்போது பேசு; நான் கவனித்துக் கேட்டுச் சொல்லுகிறேன்.''

சேடி நகைத்துக் கையில் இருந்த மலரைக் கீழே வைத்தாள். அதற்குள் இருந்த வண்டு 'ரிங்' என்று பறந்து வெளியே சென்றது.

"ஐயோ! அந்த வண்டுக்கல்லவா பைத்தியம் பிடித்திருக்கிறது? மலரைப் போன்ற கையிலுள்ள பூவுக்குள் சிறைபிடிக்கப்பட்ட பிறகு, தானே வெளியேற விரும்புகிறவனும் உண்டோ? எங்கே, உன் கையைக் கொடு; மலருடன் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்'' என்றான் அரசன்.

"என் தேவி தங்களுக்கு அனுப்பியதால் மலர் தங்களுடையது; ஆனால் என் கை என்னுடையது. நேரம் ஆயிற்று; நான் போக வேண்டும்'' என்று சேடி சொல்லும் போது, வண்டு எங்கிருந்தோ மீண்டும் வந்து அவள் தலையைச் சுற்றிப் பறந்தது. அவள் பயந்து, "அரசே, இந்தத் துஷ்ட வண்டு என்னைக் கொட்டிவிடுமே!'' என்றாள்.

"முன்பு சிறைப்பட்டதற்காக அது உன்னைப் பழிக்குப் பழி வாங்க வந்திருக்கலாம்'' என்றான் அரசன்.

பயம் மேலிட்டு அவள் ஓடிவந்து அரசனைக் கட்டிக்கொண்டு, "அரசே, தங்களை அடைக்கலமாக அடைந்தவளைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்!'' என்றாள்.

இதற்குள் வண்டு அப்பால் பறந்து செல்ல, மதுபமஞ்சரி வெட்கமடைந்து அரசனை விட்டு விலகி, "என் தேவி மிகவும் தைரியசாலி. வண்டுகளைக் கண்டு பயப்பட மாட்டாள்" என்று சொல்லி மலரை அரசனின் காலடியில் வைத்து விட்டு விரைந்து மரங்களுக்கு இடையில் சென்று மறைந்தாள்.

இரவு முழுவதும் படுத்துத் தூங்கிய அரசன் காலையில் எழுந்து வெளியே சென்றான். சேடி கையில் குரவக மலர் ஒன்றை ஏந்தியவளாய்த் தன்னை நோக்கி வருவதைக் கண்டான்.

"அரசே, என் தேவி இந்த மலரை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கியெழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி என்னை அனுப்பினாள்."

"பிரிய சேடியே, தன்னை அண்டினவர்க்கு வேண்டிய உதவியைச் செய்யவில்லையே என்று வருந்தாதவன் தானே நன்றாய்த் தூங்குவான்?" என்றான் அரசன்.

இதைக் கேட்டுக் கண்களைப் பூமியில் பதித்து நின்றாள் சேடி.

"பிரிய சேடியே, நீ லஜ்ஜைப்பட வேண்டாம். அந்த நிலைமையில் நீ வேறு என்ன செய்வாய்? நிர்க்கதியாயிருந்த உன்னிடம் நானும் தகாத விதமாய் நடந்துகொள்ளவில்லை. ஆயினும் அந்த வண்டு என்னிடம் அகப்பட்டால், மிதமிஞ்சித் தேனைப் பருகி மதிமயங்கிப் பறக்க முடியாமல் கிடக்கும்படி செய்து விடுவேன்" என்றான் அரசன்.

"அது போகட்டும். என் தேவியின் குணாதிசயங்களைப்பற்றிக் கொஞ்சம் சொல்லுகிறேன்; கேளுங்கள்."

"அடி, வன்னெஞ்சக்காரி! உன் தலைவியின் பேச்சை எடுக்காமல் இருக்கவே மாட்டாயா? சேடியே, நீ தலைவியாயிருந்து அவள் உன் சேடியாக இருக்கலாகாதா!"

சேடி பதில் சொல்லாமல் கையில் இருந்த மலரைக் கீழே வைத்து விட்டு வேகமாய் நடந்து மரங்களுக்கு இடையே மறைந்தாள்.

இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் படுத்துப் புரண்டுகொண்டிருந்த அரசன், போது விடிந்ததும் எழுந்து வெளியே குளத்தருகில் வந்து நின்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் சேடி ஓர் அசோக மலரைக் கையில் ஏந்தியவளாய் எதிரே தோன்றினாள்.

"என் தலைவி இந்த மலரை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியைக் கேட்டு வரும்படி அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, எப்போது விடியும் என்று காத்திருப்பவன் எப்படி நன்றாய்த் தூங்குவான்? ஐயோ! எப்போதுமே என் சூரியோதயமாய் இருக்கலாகாது?"

"அரசே, அசாத்தியமானதை விரும்புகிறவர்கள் நன்மை அடைய மாட்டார்கள். முன் ஒரு காலத்தில் சூதாட்டத்தில் யாவற்றையும் இழந்த சூதாடி ஒருவன், தூங்கிக்கொண்டிருந்த ஓர் அப்ஸரஸ்திரீயைத் தற்செயலாய்க் கண்டான். அவன் அவளருகில் செல்வதற்குள் அவள் விழித்துக்கொண்டு ஆகாயத்திலே கிளம்பினாள். ஆனால் அதற்குள் அந்தச் சூதாடி அவள் கால்களைப் பிடித்துக்கொள்ள, அவள் காலில் இருந்த தங்கச்சிலம்புகளில் ஒன்று அவன் கைகளில் சிக்கிக்கொண்டது. அன்று இரவு இந்திரசபையில் தான் நடனம்

புரிய வேண்டுமென்றும் காலில் சிலம்பு இல்லாமல் அங்கே போவது முடியாதாகையால் அதைக் கொடுத்துவிடும்படியும் அவள் அவனைப் பலவிதமாகக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். 'என்னையும் சொர்க்கத்துக்கு உன்னுடன் அழைத்துப் போய் நீ நடனம் புரிவதைப் பார்க்கும்படி செய்தால் சிலம்பைக் கொடுப்பேன்' என்று அவன் தர்க்கம் செய்தான். அவள் வேறு வழியில்லாமல் தன் காதில் உள்ள மலரில் அவனை மறைத்துத் தன்னுடன் சொர்க்கத்துக்குக் கொண்டு போனாள். அங்கே, சொர்ணத்தாமரைகள் காற்றில் அசைந்தாடுவது போல் அப்ஸரஸ்திரீகள் பொன்மயமான ஆடைகள் அணிந்து நாட்டியமாடுவதை அவன் கண்டான். உடனே அவனுக்குப் பேராசை மேலிட்டு, 'இந்தப் பொன் ஆடைகள் அவர்களுக்கு எங்கிருந்து கிடைத்தன?' என்று அவள் காதில் ரகசியமாய்க் கேட்டான். 'உதயகிரிக்கு அப்பால் வசிக்கிறார்கள் சூரியபகவானின் நெசவாளிகள். அவர்கள் எங்களுக்கென்று இவைகளை நெய்கிறார்கள். உதயகிரி இந்திரநீலப் பொய்கையில் சூரியபகவான் ஸ்நானம் செய்தபிறகு, அவருடைய பழங்கிரணங்களாகிய மயிரை அவர் தலையிலிருந்து ஒவ்வோர் இரவும் அவர்கள் சீவி எடுத்துப் பொன்மயமாகச் செய்கிறார்கள்' என்று அவள் பதில் சொன்னாள். அதைக் கேட்ட சூதாடி பேராசை பிடித்து, 'ஆஹா, தங்கமா! எங்கே அந்த நெசவாளிகள்?' என்று ஆர்ப்பரிக்கத் தொடங்கினான். இந்தக் கூச்சல் காதில் பட்ட தேவேந்திரன், 'யார் இப்படிக் கூச்சலிடுகிறார்கள்?' என்று பார்க்கும்படி வேலையாட்களை ஏவியதில் மலரில் மறைந்திருக்கும் சூதாடி என்று தெரிந்தது. உடனே தேவேந்திரன் மாதலியை நோக்கி, 'இந்தத் துஷ்டனையும் இவனைத் திருட்டுத்தனமாய் இங்கே அழைத்துவந்த இந்தப் பொல்லாத அப்ஸரஸையும் சொர்க்கத்தை விட்டு இந்தக் கணமே விரட்டு!' என்று கட்டளை இட்டான். மாதலி அப்படியே செய்தான். சூதாடி மேலிருந்து பூமியில் விழுந்ததில் மண்டை சிதறிப் போய் மாண்டான். அரசே, கிடைக்கக் கூடாததை விரும்புவதனால் தங்களுக்குக் கிடைத்ததும் போய்விடப் போகிறது" என்று சொல்லிச் சேடி தன் கையில் இருந்த அசோகமலரை அரசனின் காலடியில் வைத்துவிட்டுப் போனாள்.

இரவு முழுதும் படுக்கையில் படுத்துப் புரண்டுகொண்டிருந்த அரசன் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன் எழுந்து குளப்படியில் வந்து நின்றான். கையில் சிவந்த சில ஸ்ரீபலங்களுடன் சேடி வந்து சேர்ந்தாள்.

"அரசே, என் தலைவி இந்தப் பழங்களைத் தங்களுக்கு அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி அனுப்பினாள்" என்றாள்.

"பிரிய சேடியே, நீ தினமும் என்னிடம் வருவதைக் கண்டு பொறாமையுற்ற ஒரு சக்களத்தி போல் நித்திராதேவி கோபித்துக் கொண்டு என்னை அணுக மாட்டேன் என்கிறாள்."

"அரசே, அவளைக் கோபிக்க வேண்டாம். நான் வருவது சீக்கிரத்தில் நின்றுவிடும்" என்று சேடி புன்னகையுடன் சொன்னாள்.

"ஐயோ! அப்படிச் சொல்லாதே. நான் எதைக் குறித்துப் பயமடைகிறேனே அதையே நீ சொல்லிவிட்டாய். இனியும் தாமதிப்பது நன்ருயிராதாகையால் வேறு விதியில்லாமல் கூடிய சீக்கிரத்தில் நான் உங்கள் அரசியை மணம் புரிந்துதான் ஆகவேண்டும். அப்புறம் நீயும் நானும் போகும் வழி என்ன?"

"அரசே, இதெல்லாம் அர்த்தமில்லாத பேச்சு. முன் ஒரு காலத்தில் இருந்த ஒரு வியாபாரியின் கதையைச் சொல்லுகிறேன்; கேளுங்கள்: அவனிடம் கைக்குள் அடங்காதபடி அவ்வளவு பெரிய விலையுயர்ந்த முத்து ஒன்று இருந்தது. அதன் சிறப்பு எங்கும் பிரசித்தமாய் இருந்தது. ஒரு சமயம் தேசாந்தரம் போகவேண்டியிருந்ததால் அந்த வியாபாரி தன் நண்பன் ஒருவனிடம் சென்று அந்த முத்தைக் கொடுத்து, 'நான் திரும்பி வருமளவும் இதை உன்னிடம் ஒப்பித்துச் செல்லுகிறேன்' என்ருன். 'ஆஹா! அப்படியே. நீ பயப்படாமல் போய் வா' என்று அவன் உறுதி சொன்னுன். வியாபாரி சென்றவுடன் நண்பன் முத்தைப் பூமியில் புதைத்து வைத்தான். இதற்குள் அந்தத் தேசத்து அரசன் இந்த நண்பனிடம் வந்து, 'நான் மிகுந்த திரவியம் அளிக்கிறேன். உன்னிடம் இருக்கும் முத்தைக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் உன்னிடமிருந்து பலாத்காரமாய் அதைப் பிடுங்கிக்கொண்டு விடுவேன்' என்ருன். 'இன்னும் ஒரு வாரம் நான் அதை வைத்துக் கொண்டிருக்கிறேன். அதுவரையிலும் பொறுத்துக்கொண்டிருக்கத் தாங்கள் எது கேட்டாலும் கொடுக்கிறேன்' என்று நண்பன் சொன்னுன். 'நான் ஒரு வாரம் பேசாதிருக்கவேண்டுமானல் நீ ஒரு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும்' என்ருன் அரசன். நண்பன் அதற்குச் சம்மதித்து அப்படியே செய்தான். ஒரு வாரத்துக்குப் பிறகு அரசன் மீண்டும் அவனிடம் வந்து முத்தைக் கொடுத்து விடும்படி கேட்டான். நண்பன் அந்த முறையும் ஒரு கோடி ரூபாய் கொடுத்து மற்ெருரு வாரம் பொறுத்திருக்கும்படி செய்தான். இப்படியே செய்துவந்து முடிவில் தன் செல்வம் முழுவதையும் இழந்து நண்பன் தரித்திரன் ஆனுன். கடைசியில், 'இப்போதாவது அந்த முத்தைக் கொடுத்துவிடு' என்று அரசன் கேட்டான். நண்பன், 'அரசே, தங்களுடைய ராணிகள் எல்லாரையும் விடப் பல மடங்கு எழில்வாய்ந்த ஒரு மகள் எனக்கு இருக்கிருள். அவளைக் கொடுத்து விடுகிறேன். அதற்குப் பதில் எனக்கு இன்னும் ஓர் ஏழு நாட்கள் தர வேண்டும்' என்ருன். அரசன் அதற்கு இசைந்து அந்தப் பெண்ணைப் பெற்றுக்கொண்டான். ஏழு நாட்கள் சென்றன. அரசன் மீண்டும்வந்து கேட்டான். நண்பன், 'என் உயிரைக் கொடுக்கிறேன். இன்னும் ஒரு வாரம் பொறுக்க வேண்டும். அதன் முடிவில் தாங்கள் முத்தைப் பெற்றுக்கொண்டு என் உயிரை வாங்கிவிடலாம்' என்ருன். அரசன் சம்மதித்துச் சென்ருன். மூன்று நாட்களுக்குப் பிறகு முத்தின் சொந்தக்காரன் திரும்பிவந்து முத்தைக் கொடுக்கும்படி கேட்க, நண்பன், 'தெய்வாதீனமாய் நீ வந்து சேர்ந்தாய். இதோ உன் சொத்து. பெற்றுக்கொள்' என்று முத்தை அவனிடம் சேர்ப்பித்துவிட்டு அரச

னிடம் சென்று, 'அரசே, முத்துக்கு உடையவன் வந்துவிட்டான். அதை அவனிடம் திருப்பி அளித்துவிட்டேன். அதற்குப்பதில் நான் வந்திருக்கிறேன்' என்றான். அரசன், 'அதனிலும் சிறந்த முத்தான நீ இருக்கும்போது அது எனக்கு எதற்கு? என் புத்திரியை நீ மணந்துகொள்! நீ என் கையில் ஒப்பிக்கும்போது இருந்தது போலவே பரிசுத்தமான கன்னிகையாய் இருக்கும் உன் மகளையும் திரும்பப் பெற்றுக்கொள். என் ராஜ்யம், ராஜ்ய காரியங்கள் எல்லாம் இனி உன்னைச் சேர்ந்தவை' என்றான்.''

இப்படிக் கதையை முடித்துவிட்டுச் சேடி மலரைக் கீழே வைத்து, அங்கிருந்து அகன்றாள்.

இரவு முழுவதும் தூக்கம் பிடிக்காமல் புரண்டுகொண்டிருந்த அரசன் போது விடியுமுன் எழுந்து வெளியே சென்றான். அப்போது கையில் மஞ்சள் நிறங்கொண்ட புஷ்பத்துடன் சேடி வருவதைக் கண்டான்.

''என் தேவி இந்த மலரை அளித்துத் தாங்கள் சுகமாய்த் தூங்கி எழுந்த நற்செய்தியை அறிந்து வரும்படி என்னை அனுப்பினாள்.''

''பிரிய சேடியே, அந்திமகாலம் நெருங்கியிருக்கும் ஒருவன் எப்படித் தூங்குவான்?''

''அரசே, தாங்கள் செய்வது சரியன்று. என் தேவியை இப்படிக் காக்க வைப்பது நியாயமா?''

''சேடியே, இன்று காலையில் எனக்குக் கிட்டியிருக்கும் அமிருதத்தை விஷமாக்காதே. நீ சொல்வது சரி. இந்த விஷயத்தில் நான் நடப்பது தவறென்பதும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆயினும் இவைகளுக்கெல்லாம் உன்னைத்தான் குற்றம் கூற வேண்டும். உன் எஜமானியும் இந்தக் குற்றத்தில் சேர்ந்தவள்தான். என்னிடம் அனுப்ப உன்னைத் தவிர அவளுக்கு வேறொருவரும் அகப்படவில்லையா?''

''பின் வரப்போவது ஈசுவரனுக்குத்தான் தெரியும். ஆனால் என் அரசி விஷயத்தில் தாங்கள் வாக்களித்தபடி நடப்பதில் என்ன சந்தேகம் இருக்கிறது?'' என்று சேடி கேட்டாள்.

அரசன் ஒரு பெருமூச்செறிந்தான். ''உன் மேனி சௌந்தரியம் பொருந்தியதுதான். ஆனால் உன் இருதயம் எவ்வளவு கடினமானது! தேனினும் இனிய குரலானாலும் மொழிகள் என்னவோ வேம்புதான். நாளைப் போது விடிந்ததும் என் பிரதிக்ஞைப்படி உன் அரசியை வந்து பார்த்துப் பிறகு ஜோதிஷர்களுடன் கலந்து விவாகத்துக்கு ஒரு முகூர்த்தத்தைத் தேர்ந்தெடுக்கும்படி சொல்லுகிறேன். இன்று மட்டும் உன்னை என் ஆசை தீருமளவும் பார்த்துப் பேசிவிடுகிறேன். சாயங்காலம்வரை இங்கேயே என்னுடன் இரு. நாளைக் காலைக்கு வேண்டிய தெம்பு எனக்கு அப்போதுதான் ஏற்படும்'' என்றான்.

அவள் அவனைப் பரிவுடன் நோக்கி, ''அரசே, அன்று அவன் எழுதிய எழுத்தை ஒருவரும் அழிக்க முடியாது; ஒருவரால் மாற்றவும் இயலாது'' என்று சொல்லிக் கையில் இருந்த மலரை அரசனின் காலடியில் வைத்துவிட்டுப் போவதற்குத் திரும்பினாள். பரபரப்புடன் குரல் நடுங்க அரசன், ''என்ன! அதற்குள் போய்

விடுகிறாயா? உன் குரலையாவது கேட்டுக்கொண்டிருக்கும்படி ஏதாவது ஒரு கதைதான் சொல்லேன். இல்லையென்றால், வேண்டாம்: நீ அப்படியே நின்றால் போதும்; உன்னைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்'' என்றான்.

மதுபமஞ்சரி திரும்பி அப்படியே நின்றாள். அரசனை அணுகி அவன் கையைப்பற்றி, "அரசே, நான் போக வேண்டுமே! ஒரு வேளை என் தலைவி மீண்டும் என்னை இங்கே அனுப்பினாலும் அனுப்பலாம். நாளைக்காக இன்று சில காரியங்கள் செய்யவேண்டியிருக்கின்றன'' என்று சொல்லிவிட்டு விரைந்து சென்றாள்.

மன்னன் குனிந்து கீழே கிடந்த மலரை எடுத்து, "சமீபுஷ்பமே, என்னைப்போல் உனக்குள்ளும் அக்கினி குடிகொண்டிருக்கிறது. உன்னைப்போலவே, குபீரென்று பற்றிக்கொள்ளுவதற்கு அவள் கை என்மீது பட்டால் போதும். இந்தக் குளக்கரையிலேயே அவளுக்காகக் காத்திருப்பேன். அவள் மட்டும் வராமல் போனால் நாளைப் போது விடிவதைப் பார்க்க நான் உயிருடன் இருக்கமாட்டேன் என்பது திண்ணம்'' என்று சொன்னான்.

அவன் கண்கள் சேடி வரும் வழியையே நோக்கியிருந்தன. போது வளர்ந்துகொண்டேயிருக்க, கதிரவனும் வானத்தில் உக்கிரமாய்க் கிளம்பிவிட்டான். உச்சி வேளை நெருங்கவும், திடீரென்று அடர்ந்த மரங்களுக்கு இடையே மதுபமஞ்சரி நடந்து வருவதை அரசன் கண்ணுற்றான். அவள் கையில் வழக்கமாய்க் கொண்டுவரும் மலர் எதுவும் இப்போது இல்லை. "ஐயனே, ஒரு தாமரைமலர் வேண்டுமென்று என் தேவி தங்களிடம் என்னை அனுப்பினாள்'' என்றாள்.

சுற்றிலும் நிச்சப்தம் குடிகொண்டிருந்த அந்த இடத்தில் இருவரும் பேச்சற்று மௌனமாய் நின்றார்கள். கடைசியில் அரசன், "பிரிய சேடியே, நான் உன்னை ஒன்று கேட்க விரும்புகிறேன். உன்மீது நான் காதல் கொண்டிருக்கிறேனா இல்லையா என்பதைச் சொல்வாயா? அது எனக்கே தெரியவில்லை. அதனால்தான் உன்னைக் கேட்கிறேன். உன்னைக் காணும்போது என் கண்கள் இருண்டு, என் தேகம் முழுவதும் குபீரென்று அக்கினிபோன்ற ஓர் உணர்ச்சி பரவுகிறது. உன் குரலைக் கேட்கும் போதோ, ஜிலீரென்று ஒரு பனிக்கட்டி என் மேனிமீது பட்டதுபோல் என் பிரக்ஞை தடுமாறுகிறது; கண்களில் நீர் பெருகுகிறது. ஆனால் சிரித்துச் சந்தோஷப்படவேண்டும் போல் இருக்கிறது, மனத்துக்கு. பேச முயன்றாலோ வாயில் வார்த்தை வருவதில்லை. மூச்சுத் திணறுவது போன்ற சிரமம் தோன்றுகிறது. என்னால் சரியாய்க் கூற முடியவில்லை. ஒன்றுமட்டும் நிச்சயமாய்ச் சொல்வேன் : நீ இங்கே இருக்கும் வரையில்தான் என் பிராணன் நிற்கிறது. நீ போய் விட்டால் மரணத்துக்கு ஒப்பான வேதனைதான்'' என்றான்.

இந்த மொழிகளைக் கேட்டு மதுபமஞ்சரி ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் கீழ் உதடு நடுங்க, கண்களில் நீர்த்திவலை ஒன்றிரண்டு பிரகாசித்தது. அரசனை ஏறிட்டு நோக்கி, "அரசே, இந்த மொழிகள் தேவியின் செவிகளுக்கு

ஏற்றவையே தவிர என் செவிகளுக்கல்ல'' என்றாள்.

மன்னன் அதற்கு மறுமொழி கூறாமல் எழுந்து நின்றான். இப்புறமும் அப்புறமும் நோக்கிச் சிரித்துக்கொண்டே, "ஏது, நீ என்னை வெறிபிடிக்க அடித்துவிட்டாயென்று நினைக்கிறேன். இனி நான் ஒன்றையும் கவனிக்கப்போவதில்லை. நான் ஒரு புருஷன்; பலிஷ்டன். நீயோ ஸ்திரீ; அபலை. நீ என்னை விட்டுப் போகக்கூடாது. போனால் என் உயிரும் உன்னுடன் கூடச் சென்றுவிடும்'' என்றான். அதனுடன் நில்லாமல் திடீரென்று தன் இரு கைகளாலும் அவளைச் சேர்த்து இறுகப் பிடித்துக்கொண்டான். மதுபமஞ்சரி அவன் பிடியிலிருந்து திமிற முயன்று சிரித்துக்கொண்டே, "ஆரிய புத்திரரே, என்னை விடுங்கள். நான் தான் ராஜகுமாரி என்பது தெரியவில்லையா?'' என்றாள்.

அந்தச் சொற்களைக் கேட்டதும் அரசன் திடுக்கிட்டுத் துள்ளியெழுந்தான். முதல்முதல் வியப்பும், பிறகு வெட்கமும், கடைசியாக எல்லையற்ற களிப்பும் அவளை நோக்கும்போது அவனுக்கு உண்டாயின. "அடி மாயக்காரி, இதென்ன? நீ அல்லவா என்னிடம், ராணியை வஞ்சிக்கலாகாதென்று சொன்னவள்? அப்படியிருக்க இப்போது நீ செய்திருப்பதென்ன?'' என்றான்.

உடனே மதுபமஞ்சரி மன்னனைச் சற்றுப் புன்னகையுடன் நோக்கினாள். பிறகு கையைப் பிடித்து அவனை அழைத்துச் சென்று குளத்துப் படியில் உட்காரச் செய்தாள்.

"ஆரியபுத்திரரே, இப்படி உட்காருங்கள். நான் எல்லாம் கூறுகிறேன்'' என்று சொல்லி அவன் அருகில் உட்கார்ந்து செல்லத் தொடங்கினாள்: "தங்கள் பேதைமையை என்ன என்று சொல்வது? ஒரு பெண் நிலையற்றவளாய் இருந்தால் உலகில் எல்லாப் பெண்களும் அப்படியே இருப்பார்களென்று நினைக்கலாமா? ஒரு பெண்ணின் துணையற்றுத் தங்கள் வாழ்நாளைக் கழிப்பதென்று நினைத்தீர்களே! நான் நேரில் பார்க்காவிட்டாலும் விசாரித்தறிந்து வெகு நாட்களுக்கு முன்னிருந்தே தங்களைக் காதலித்துவிட்டேன். தாங்களும் அப்படியே இருக்க வேண்டுமென்று தீர்மானித்தவளாய், என்னை யாரென்று அறியாமலே தங்களை என்மீது காதல் கொள்ளும்படி செய்தேன். ஒரே ஒரு நாள் என் உறுதி குறைந்தது. அன்றுதான் நான் இங்கே வராமல் இருந்தது. அன்று முழுவதும் கண்ணீர் பெருக்கியே கழித்தேன். தாங்கள் இதுவரையிலும் அநுபவித்தறியாத வாழ்வின் இன்பத்தை நான் தங்களுக்குக் காட்டுகிறேன். தாங்கள் சந்தோஷமாய் இருக்கும்போது அதை இருமடங்காகச் செய்வேன். தாங்கள் துக்கமாக இருக்கும்போது அதை ஒருவாறு அகற்றி முடிவில் இன்னும் ஆழ்ந்த சந்தோஷமாக மாற்றிவிடுவேன். தாங்கள் சௌக்கியமாய் இருக்கும்போது பலவித விநோதங்களால் தங்கள் மனத்தை இன்புறச் செய்வேன். அசௌக்கியமாய் இருக்கும்போதோ தாய்போல் பாதுகாப்பேன். தங்களுக்கு வேண்டாதபோது, மீண்டும் தாங்கள் கூப்பிடும்வரை அப்பால் சென்றிருப்பேன். தங்களுக்கு முன் நான் இறந்துவிட்டால் மிகவும் நல்லது. அப்படிக்கின்றித் தாங்கள் முன் சென்றால் நான் அக்கினிப் பிரவேசம் செய்து தங்களைப் பின் தொடருவேன். தங்களை விட்டு ஒரு கணமும் என் உயிர் நில்லாது.

எனக்கு உயிரும் உருவமும் அளித்தவர் போய்விட்டால், பிறகு கனவு, சந்திரிகை, நீரின் சாயை, நிழல் இவைபோல் நான் வெறும் சூனியமாக வேண்டியதுதான். வசிஷ்டருக்கு அருந்ததிபோலவும், மன்மதனுக்கு ரதி போலவும், கிருஷ்ணனுக்கு ராதைபோலவும் நான் தங்களுக்கு இருப்பதே என் தர்மமும் கடமையும் ஆகும். நானே தங்கள் சக்தி; தங்களுக்குரிய க்ஷேத்திர பூமி. கற்பிற் சிறந்த மனையாள் லாவண்ய வாரிதியில் கடைந்தெடுத்த அமிருதத்துக்கு ஒப்பானவள், இன்பத்தின் ஊற்றுப் போன்றவள் என்பதைத் தங்களுக்குக் காட்டுவேன். என்னை அடைந்து தாங்கள் வாழ்வின் பயன் முற்றும் நுகர்வீர்கள். நான் இல்லாத வாழ்வு அர்த்தமற்ற வார்த்தை போலும், சந்திரனற்ற இரவு போலும் சூனியமானதென்று அப்போது அறிந்துகொள்ளுவீர்கள்.''

மன்னன் அவள் முகத்தைத் தன் இரு கைகளாலும் பற்றி உற்று நோக்கினான். ஆனந்தம் அடைந்தான். ''பிரிய சேடியே, நீ ஒன்றை மறந்துவிட்டாய். இந்தக் குளத்திலிருந்து உன் தேவிக்குக் கொண்டு போய்க் கொடுக்க ஒரு தாமரை மலர் வேண்டாமா?'' என்றான்.

மதுபஞ்சரி களிப்புடன் கலகலவென்று நகைத்து, "அரசே, ஆம்! ஆம்! தாங்கள் கூறுவது சரியே'' என்றாள். இருவரும் திரும்பிக் கரையோரம் சென்றார்கள்.

கரையோரமாய் ஒரு தாமரை மலர்ந்திருந்தது. "ஜலத்தில் நீ தவறி விழுந்து விடாமல் இருக்கும்படி நான் உன்னைத் தாங்கிக் கொள்ளுகிறேன். நீயே அந்தத் தாமரையைப் பறித்துக்கொள்'' என்று சொல்லி மன்னன் இரு கைகளாலும் அவளைச் சேர்த்துப் பிடித்துக்கொள்ள, இருவரும் நீரின் பக்கம் குனிந்தார்கள். மதுபமஞ்சரி மலரைப் பறிக்கக் கை நீட்டும்போது அரசன், அவள் காதோடு, ''இதோ பார்; ஒரு முகத்துக்குப் பதில் இரண்டு முகங்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலுடன் உன்னைக் கரையோரம் அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன்! எங்கே, நான் எதை முத்தமிடுவது? யார் என்னைப் பதிலுக்கு முத்தமிடுவார்கள்? சேடியா, அல்லது சேடியின் அரசியா? சொல் பார்ப்போம்'' என்றான்.

மதுபமஞ்சரி மலரைப் பறித்துக் கொண்டு அரசன் பக்கம் திரும்பி, ''இருவருந்தான்'' என்றாள்.

டாக்ஸியின் வேகம்

டாக்ஸியில் சென்றுகொண்டிருந்த ஒருவர் அவசரமாய் ஸ்டேஷனுக்குப் போக விரும்பினார். "நீ இன்னும் கொஞ்சம் வேகமாய்ப் போகமுடியாதா, அப்பா?'' என்று டிரைவரைக் கேட்டார்.

"முடியுமுங்க. ஆனால், நான் டாக்ஸியை விட்டு இறங்கக் கூடாதுங்களே'' என்றான் டிரைவர்.

—'மெட்ரபாலிட்டன் ஹெரால்ட்'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

ராம ராஜ்யத்திலே

பெண்கள் கணவனை இழக்கும் புலம்பல் இல்லை. கொடிய விலங்குகளோ விஷப் பூச்சிகளோ தலை காட்டவில்லை. நோய்நொடி என்ற பெயரே இல்லை.

அந்த நாட்டில் கொள்ளை இல்லை; திருட்டு இல்லை. யாரையும் ஒரு தீங்கும் தீண்டவில்லை. குழந்தைகள் மரித்து வயதானவர்கள் ஈமக்கடன் புரியவில்லை.

எங்கும் மகிழ்ச்சி. ஒவ்வொருவனும் அறத்தை விரும்பினான். ஒருவன் மற்றவனைத் துன்புறுத்தவில்லை.

மக்கள் நீடூழி வாழ்ந்தார்கள். நிறைந்த மக்கட்பேற்றைப் பெற்றார்கள். பிணியும் துயரமும் இல்லாமல் வாழ்ந்தார்கள். எங்கும் ராமன் பெயர், எங்கும் ராம கதை.

மரங்கள், கிளை செழித்து வளர, மலர் மல்க, கனி குலுங்கப் பொலிந்தன. உரிய காலத்தில் மழை பெய்தது. தென்றல் இன்பமாக வீசியது.

எல்லா இனத்தாரும் அவாவொழிந்து தங்கள் கடமைகளைச் செய்து, செயல் திறமையிலே களித்தார்கள். மக்கள் அறம் பூண்டு ஒழுகினார்கள். பொய்யுரை பேசுவார் அங்கில்லை. எல்லாரும் வனப்பு வாய்ந்தவர்களாய், அறமே வாழ்வாக விளங்கினார்கள்.

—வால்மீகி

81

January '52 Regd. No. M. 49

மஞ்சரி

கர - தை

ஊரும் உலகமும்		
அழகு நிரம்பிய காஷ்மீர்	ஆஜ்கல்	
வாலி வதம்		
ரமணர்: வாழ்வும் வாக்கும்		1
சில கட்சிகளின் தேர்தல் சின்னங்கள் (படம்)		1
அபேட்சகரைச் சந்தியுங்கள்	ப்ளிட்ஸ்	1
வழிவழி வந்த வசன நடை: இது நியாயமா?		2
பஸிபிக் பிசாசு	பம்பாய் கிரானிக்கிள்	2
விசித்திரப் பந்தாட்டம்		3
குறைமாதக் குழந்தை	ஓரியெண்ட்	3
கார்ட்டூன் கதம்பம் (படம்)		4
துருக்கியும் இந்தியாவும்	அமிர்தபஜார் பத்திரிகா	4
காட்டு விலங்கின் காதல்		4
புஷ்ப வைத்தியம்	சிருகலட்சுமி	4
இந்திய - அமெரிக்க உறவு	ஸ்வதந்த்ரா	5
ஆவி பேசுகிறது	ப்ரீ இந்தியா	5
பாபுராவ் பதில் சொல்லுகிறார்	பிலிமிண்டியா	5
கிறிஸ்துமஸ் பூனை (சிறு கதை)	விளாடிமிர் ஸ்டெட்ரி	6
காலைப் பிறை (நாவல் சுருக்கம்)	எப். டபிள்யூ பெயின்	6
ராம ராஜ்யத்திலே	வால்மீகி (3-அட்டை	